www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
June
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
மே.09-15,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 308

## சர்வதேச அரங்கில் சதுரங்கம்

## தமிழ் பேசும் தரப்பை முடக்கச் சதி





## வாரியார் பதில்கள்

## கோகிலா என்ன செய்துவிட்டாள்?

## புதிய குடும்பத் தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மீளமுடியாத சூழல்

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

யுத்தத்தை நிறுத்த முடியாது
என்று ஜனாதிபதி
திட்டவட்டமாக
கூறிவிட்டார்.

வன்னி சென்று
புலிகளை சந்தித்த
மதகுருமார்களை
பல மாதங்களின் பின்னரே
ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

வன்னிக்கு அவர்கள்
சென்று வந்த சூட்டோடு
சந்தித்தால்
தென்னிலங்கையில் உள்ள
பேரினவாத சக்திகள்
சந்தேகப்படலாம் என்பதாலேயே
இத்தனை தாமத சந்திப்பு!

'புலிகளுக்கு எதிராக
தளராது போரிடும் அரசு'
என்ற தோற்றப்பாடுதான்
பொதுஜன முன்னணியின்
ஒரேயொரு
அரசியல் மூலதனம்!

அடுத்து வரும்
தேர்தல்களுக்கும்
இந்த மூலதனமே
ஒரே நம்பிக்கை!

எனவே, யுத்தத்தை
நிறுத்துவதற்கு
ஆட்சியாளர்கள்
முன்வரமாட்டார்கள் என்பது
நன்கு தெளிவானது!

மதகுருமார் தூதுக்குழுவிடம்
ஜனாதிபதி தமது
நிலைப்பாட்டை
மறைக்காது கூறிவிட்டார்!

இதன் பின்னரும்
யுத்தத்தை நிறுத்துமாறு
ஜனாதிபதியிடமோ
அரசிடமோ
கோரிக்கை விடுப்பதில்
யாது பலன்?

தமது ஆட்சியை
தக்க வைப்பதற்கான
தந்திரத்தையே
அவர்கள் தலைமேற்கொள்வர்!

ஐ.தே.கட்சியாக
இருந்தாலென்ன,
பொதுஜன முன்னணியாக
இருந்தாலென்ன,
அடுத்த தலைமுறைபற்றியல்ல,
அடுத்த தேர்தல் பற்றியே
சிந்தித்து வந்துள்ளன!

பொ.ஜ.முன்னணியிடமும்
எந்தப் புதுமையுமில்லை!

கடந்த கால ஆட்சிகளது
அடிச்சுவட்டிலேயே
அதன் நான்கு வருட
பயணம் நடந்திருக்கிறது!

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
இராணுவத்தீர்வு என்பதே
பேரினவாதிகளை மகிழ்விக்கும்
வழி முறையாக உள்ளது!

குறைந்த பட்ச தீர்வை
கொடுப்பதாக இருந்தாலும்
தமிழ் பேசும் தரப்பை
மண்டியிட வைத்த பின்னர்
கொடுத்தால்தான்
பேரினவாத சக்திகள்
பெரும் திருப்தி கொள்வர்!

தென்னிலங்கையில்
ஆளும் தரப்பின்
வாக்கு வங்கி நிலவரம்
திருப்தியாக இல்லை!

சமீபத்தில் தேர்தல்
நடைபெற்ற
ஐந்து மாகாணசபைகளில்
நான்கு சபைகளில்
எதிரணிகளது தயவின்றேல்
ஆட்சி கவிழும்!

எதிர்வரும்
தென்மாகாணசபைத்
தேர்தலிலும்
இதே நிலை இருக்கலாம்!

எனவே, அடுத்துவரும்
ஜனாதிபதித் தேர்தல்
பாராளுமன்றத் தேர்தல்களுக்கு
முன்பாக என்றாலும்
வாக்கு வங்கிகளில்
மேம்பாடு காண்பது மட்டும்
பொ.ஜ.முன்னணியின் குறி!

அதற்கு ஒரே ஒரு
நம்பிக்கை யுத்தம்!

பந்தயக் குதிரையில்
பணம் கட்டிவிட்டு
காத்திருப்பதுபோல,
போர் வெற்றிக்கு
நாட்டின் வளம் யாவையும்
பணயம் வைக்கப்பட்டுள்ளன!

எனவே அரசியல் தீர்வு
யுத்த நிறுத்தம்
என்பதெல்லாம்
அரசு தானாக முன்வந்து
மேற்கொள்வதற்கான
காலம் கடந்துவிட்டது!

போரையும், வெற்றியையும்
நம்பி வகுக்கப்பட்ட திட்டங்கள்.
கொடுக்கப்பட்ட பலிகள்,
குவிக்கப்பட்ட படைகள்
தூண்டப்பட்டுள்ள பேரினவாதம்..
இத்தகைய சூழ்நிலையிலிருந்து
அரசு தானாக மீளமுடியாது!

இவற்றிலிருந்து
அரசை மீட்கக்கூட
மூன்றாம் தரப்பின்
கரங்களால்தான் முடியும்!

எனவே, இனிமேல்
தமிழ் பேசும் தரப்பின்
கோரிக்கைகள்
சர்வதேச சமூகம் நோக்கியே
முன்வைக்கப்பட வேண்டும்!

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்*

# ஆன்மீகம்

## 'துன்பக் கடலைத் தாண்டும் வழி'



பாவிகளிலெல்லாம் பெரும் பாவியாக நீ கருதப்பட்டாலும் கூட, உன்னதமான ஞானப் படகில் நீ நிலை பெற்று விட்டால், உன்னால் துன்பக் கடலைத் தாண்டிவிட இயலும்.

ஸ்ரீ கிருஷ்ணருடன் ஒருவரது ஆதாரமான உறவை அறிவது மிக நல்லது. ஏனெனில் மயக்கக் கடலில் நடக்கும் வாழ்வுப் போராட்டத்தில் நின்றும் ஒருவனை அது உயர்த்தி விடக்கூடியது.

இந்த ஜட உலகு சில சமயம் அறிவின்மைக் கடலுக்கும், பற்றியெறியும் காட்டிற்கும் உவமிக்கப் படுகின்றது. கடலில் விழுந்த ஒருவன் எவ்வளவுதான் நல்ல நீச்சல் அறிந்தவனாயினும், அவனது உயிருக்கான போராட்டம் அந்த வேளை மிகக் கடினமானதே.

தத்தளிக்கும் மனிதனை கடலினின்றும் காக்க யாரேனும் முன்வந்தால் அவன் சிறந்த நண்பனும் பாதுகாவலனுமாவான். "முழுமுதற் கடவுளிடமிருந்து பெறும் பக்குவமான அறிவே முக்திக்கு வழி!" கிருஷ்ண உணர்வுப் படகு மிக எளிதும், அதே சமயம் மிகச் சிறந்ததும் ஆகும்.

சிறந்த அறிவே விடுதலைக்கு வழி. உன்னத ஞானத்தைப் போன்று தூயதும், சிறந்ததும் வேறெதுவுமில்லை. இந்த ஞானமும், சாந்தியும் ஸ்ரீ கிருஷ்ண உணர்வில் முற்றுப் பெறுகின்றன. இதுவே கீதையின் இறுதி முடிவு.

தொகுப்பு: அ. அரசரெத்தினம்- சேனையூர், மூதூர்.

## வள்ளல் நபியின் வாய்மொழி

கல்வியறிவைப் பெறாத மனிதனின் சக்தி வீண்விரயமாகிவிடும்.

திருமறையின் ஒளி விளக்காய் வாழ்ந்த நபி பெருமானார் கற்றோரின் பெருமையை பின்வருமாறு விளக்குகின்றார்கள்:

கல்வியறிவு, ஒருவனுக்கு அல்லாஹ்வால் ஏவப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் பகுத்துக் காண்பிக்கிறது. அதனால் அவன் நன்மையான காரியங்களை நாடிச் செல்கின்றான்.

இன்னும் இவன் இவ்வுலகில் உயர் இடங்களைப் பெறுகின்றான். அதன் துணையால் அவனுக்கு பலரது பாராட்டுக்களும் கிடைக்கின்றன.

மரணத்தின் பின் மறுவுலகில் அவன் அல்லாஹ்விடம் பேரின்ப வாழ்வை அடைகின்றான். கல்வியறிவு இல்லாமல் வேறெந்த நுண்ணறிவும் மனிதனுக்குக் கிடைப்பதில்லை என்பது வள்ளல் நபியின் வாய்மொழி.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.305

### பரிசுக்குரிய கவிதை

### ஏதுமறியாத....

இனவாதம் இல்லா
இன்பக் குழந்தைகள்...!
மதவாதம் தெரியாத
மகிழம் பூ மேனிகள்...!

ரி. லஷ்மிதேவி-
மட்டக்களப்பு.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### ரோஜாக்கள்

முட்களாய் யுத்தம்
அதற்குள்
ரோஜாக்களாய்
இந்தக் குழந்தைகள்!

கா. சுசி-
முல்லைத்தீவு.

### ஏக்கம்

இன்னுமேழு செம்மணிகளை
இங்கே சந்திக்க நாம்
தயாராக வேண்டுமோ?

செல்வி நிஹாரா முஸ்தபா-
காத்தான்குடி.

### அ(பே)டயப்பா!?

ஒரு
கொடியில்;
ஏழு மலர்கள்!
இறை-
படைப்பில்
அதிசயங்கள்!

பதுளை 'பூநோனா'-
ஷஹ்மிதா வாஹிட்.

### யாருக்காக...?

ஆயிரக் கணக்கில்
அள்ளிக் கொடுக்கும்
அயல் நாட்டு நிறுவன
அவதானி வருகைக்கு
அலங்கரிக்கப்பட்ட
அகதிக் குழந்தைகள்!

அ. சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

## கவிதைப் போட்டி இல.308



### அழுகை

ஏழு அதிசயத்தில்
ஒன்று அழுகிறது....!
மாளும் மனிதனது
கீழ்த்தரம் கண்டது போல்!

வி.எஸ்.ஏ. ரவிசங்கர்- ஆசிரியர்
கலாசாலை, மட்டக்களப்பு.

*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.05.1999*

முகவரி: கவிதைப் போட்டி இல.308
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கோலங்களும் பாவங்களும்

ஏழு ஸ்வரங்களுள் எத்தனை ராகம்
இவ்வேழு முகங்களில் எத்தனை பாவம்!
சிந்தனை, சிரிப்பு, சிருங்காரம், சீற்றம்,
வீரிடல், வெருட்சி, வேதனை என்றாகி
சூழும் உணர்வுகளில் ஆளும் யாவும்
வாழ்வின் இயல்புகள் கூறும் கோலங்கள்.

வ.ஆ. அதிரூபசிங்கம்- விசுவமடு.

### நடப்பு

இந்தக் குழந்தைகளும்...
நல்ல குழந்தைகள்தான்!
இந்த வேளையிலே;
இவர்கள்...
புலியாவதும், நரியாவதும்,
நாட்டு நடப்பினிலே!

ந. மதி- முத்துவல மாவத்தை, மோதர.

### அதிச(வசி)யம்

தினந்தோறும் பல்லுயிர்கள்
பறிபோகும் இவ்வுலகில்
ஒரு சூலில் பல்லுயிர்கள்
அவதரிப்பதும் அதிச(வசி)யம்!

கிரிசாந்தி சந்திரகலா-
மட்டக்களப்பு.

### போராட்டம்!

உணவு வெட்டை எதிர்த்து
ஊர்மக்கள் போராட்டம்?
பால்மா வெட்டை எதிர்த்து
பாலர் நாம் போராட்டம்!

களுவாஞ்சி நாதன்-
கல்லடி, உப்போடை.

# வாசக(ர்)சாலை

*அன்பின் என் இனிய முரசே, என் கன்னி மடலை ஏற்றுக்கொள்வாய் என நம்புகின்றேன்.*

*பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வொரு வியாழனும் என் கரங்களில் தவழ்கிறது. 296, 297, 298 ஆகிய முரசை என்னால் பார்க்க முடியவில்லை. காரணம் நான் அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். அங்கு 295, 294 ஆகிய முரசை 30/= செலுத்தி பெற்றுக் கொண்டேன். முப்பது அல்ல ஐம்பது என்றாலும் கொடுக்கலாம். ஆனால் எல்லோருடைய வாழ்க்கைத் தரமும் ஒரே மாதிரி இல்லைத்தானே? யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கிற்கு முன்னாலுள்ள தேனீர்க் கடையில் 30/= செலுத்திப் பெற்றேன். யாழ் விமான கட்டணம் 18/= கூட பெறுகிறார்களா அல்லது கடைக்காரர்கள் கொள்ளை இலாபம் பெற எண்ணுகிறார்களா?*

கே. தனுஜன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பின் தங்கிவிட்டோம்

*அன்பின் முரசாரே,*

*உங்களுக்குக் கோடி கோடியான நன்றிகள். தமிழ்பேசும் மக்களுக்கு யுத்தச் செய்திகளையும் நாட்டின் அரசியல் நிலைப்பாட்டையும் சரியான முறையில் கொடுத்து வருகிறீர்கள். நன்றி... நன்றி...நன்றி... அதே போல் வட-கிழக்கு மக்களின் கல்வி சார் செய்திகளையும் முரசு மூலம் விளக்கமாகத் தருதல் வேண்டும். கல்வி நடவடிக்கையில் தமிழர் பின் தங்கிவிட்டார்கள். சுமார் 50 வருடகால பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆகவே கல்வி முயற்சிகளில் ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுவதற்கு முரசாரும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். வாழ்க தமிழ்மொழி.*

எஸ். ஆர். எஸ். தேவதாசன், காரைநகர்.



## தவறவிட்டது

*'டிசம்பர் பௌர்ணமி', 'உதட்டில் ஒரு மச்சம்' இரண்டிலும் சில அத்தியாயங்களை தவறவிட்டு நான் பட்டபாடு இருக்கிறதே. அப்பப்பா. நான் மட்டுமா? என் மனைவி, மக்களும் தான். முன்கதை சுருக்கம் இருந்ததால் ஒருவிதமாக தொடர்களை படித்து முடித்துவிட்டோம்.*

சா. திவாகரன், யாழ்ப்பாணம்.

உண்மையாகவே ..அட்டகாசமான தொடர் 'டிசம்பர் பௌர்ணமி'. ராஜேஸ்குமாரின் தொடர்களில் கலக்கலானது. எப்படி 26 வாரங்கள் உருண்டோடின என்றே தெரியவில்லை சபாஷ்.

இ. மினாளினி, மட்டக்களப்பு.

*'டிசம்பர் பௌர்ணமி தந்த ராஜேஸ்குமாரின் அடுத்த தொடருக்காக ஆவலோடு காத்திருக்கிறோம்.
க்ரைம் சக்கரவர்த்தி என்னும் பட்டத்திற்கு
முற்றிலும் தகுதியானவர்
என்பதை ராஜேஸ்குமார்
நிரூபித்துவிட்டார்.*

சி. யாதேஸ்வரன், குருநாகல்.

ஸ்ரீ வித்யாவின் 'என் கதை' நடிகைகள் என்றால் அவர்கள் வாழ்க்கை வண்ணமயமாக இருக்கும் என்று நினைத்த என் போன்றோருக்கு தலையில் குட்டு வைக்கிறது.

எஸ். ராஜேந்திரன், காலி.

கூட இருந்த நண்பனே சாந்தாவைக் கடத்தியது எதிர்பாராத முடிச்சு. சஸ்பென்ஸ் குறையாது கதையை நகர்த்திய ராஜேஸ்குமாருக்கு பாராட்டு.

வி. இந்திரலட்சுமி, மாத்தளை.

*அன்புடன் முரசுக்கு!*

பிரிட்டிஷாரால் நமது நாட்டில் திணிக்கப்பட்ட ஒரு மத நூலாகத்தான் (பைபிளை) நான் அறியாப் பருவத்தில் எண்ணியிருந்தேன். பின்னர் உலக நடப்புகளை அறியும் வயதில் கிறிஸ்தவர்களின் மத நூலாக அதை நினைத்துக் கொண்டேன்.

ஆனால் தற்போது 'திருமறை தரும் பொதுநெறி'யை வாசிக்கத் தொடங்கிய பின்னர்தான் அது மாமறை என்பதை புரிந்து கொண்டு வருகிறேன்.

சுருக்கமாகவோ அல்லது விரிவாகவோ எப்படி நீ இதை தந்தாலும் தரும் விதம் சுவையுடன் இருப்பதுடன் திருப்தியும் நமக்கு ஏற்படுத்துகின்றது. எவ்வித இடைஞ்சலும் இன்றி தொடர்ந்து வர விரும்புகிறேன்.

எம்.எம். உசைன், சவூதியா.

*அன்பான முரசே!*

*நீ தரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் 'டிசம்பர் பௌர்ணமி' தொடர் மிகவும் சூப்பர். மற்றும் ரசிகனின் 'இலக்கிய நயம்' மிகவும் நயக்க வைக்கிறது.*

வி. நந்தினி, மல்லாவி.

*இனிய முரசே!*

உனது பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். ஆனால் இன்றுதான் மடல் வரைகின்றேன். உனது ஆக்கங்கள் அனைத்தையும் தவறவிடாது படிப்பேன். அதிலும் இராஜதந்திரி அலசுவதைத்தான் முதலில் பார்ப்பேன்.

சி. ரஞ்சன், யாழ் பல்கலைக்கழகம்.

## அதனை மிஞ்சட்டும்

*ராஜேஸ்குமார் பிரியையான என்னை ராஜேஸ்குமாரின் தொடர்களில் சூப்பர் தொடர்களாகத் தந்து திக்குமுக்காடச் செய்துவிட்டீர்கள். அடுத்த தொடர் இதனையும் மிஞ்சட்டும். விசாலியின் சோகம் இன்னமும் மனதில் நிற்கிறது. பாவம் விசாலி, அவர்மீதும் எம்மை சந்தேகப்பட வைத்துவிட்டாரே ராஜேஸ்குமார்.*

ஆ. கௌரி, திருமலை.

*முரசின் நீண்டநாள் வாசகியான நான் இவ்வளவு காலமும் உமது சேவையை மனதால் பாராட்டிக் கொண்டிருந்தேன். இன்று வரை நானும் உன் வாசகி என்று உனக்கு தெரியாதிருக்கலாம் அல்லவா? அதனால் மனதால் மட்டுமன்றி மடலாலும் எனது பாராட்டை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.*

ப. கீதா, ஏறாவூர்-5.

**மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# அனைவருக்கும் இராணுவப் பயிற்சி

# விடுதலைப் புலிகள் புதிய திட்டம்!

**தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்கள் அனைவருக்கும் இராணுவப் பயிற்சி வழங்க தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது.**

வன்னிப் பகுதியில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள சகல மக்களுக்கும் முதற்கட்டமாக இராணுவப் பயிற்சிகள் வழங்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

சமீபத்தில் வன்னியில் படையினரால் கைப்பற்றப்பட்ட தட்சினாமடு, மூன்றுமுறிப்பு போன்ற பகுதிகளில் புலிகளது முன்னாள் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

புலிகளுக்கு ஆதரவாக இருந்த சிலரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அனைவருக்கும் புலிகள் இராணுவப் பயிற்சி கொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

அனைவருக்குமே இராணுவப் பயிற்சி கொடுத்துவிட்டால், குறிப்பிட்ட சிலர் மட்டும் மாட்டிக்கொள்ள வேண்டி இருக்காது. கைது செய்வதானால் அனைவரையும்தான் கைது செய்ய வேண்டியிருக்கும்.

அதுமட்டுமன்றி வன்னியில் அடுத்த கட்ட படைநகர்வுகள் கேந்திரமான பகுதிகளை நோக்கி முன்னெடுக்கப்பட்டால், பாரிய தாக்குதல் ஒன்றை தொடுக்கவும் புலிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

அனைவருக்கும் பயிற்சி கொடுத்து வைத்திருந்தால், முக்கியமான தருணங்களில் தம்மோடு இணைந்து சண்டையில் ஈடுபட பலர் முன்வருவார்கள் என்று புலிகள் நம்புவதாகத் தெரிகிறது.

எனினும் எவரையும் கட்டாயப்படுத்தி சண்டைகளில் ஈடுபடுத்தும் உத்தேசம் அறவே கிடையாதாம். ஆனால் பயிற்சி மட்டும் கட்டாயமாக வழங்கப்படும் என்று தெரிகிறது.

இதற்கிடையே வன்னியில் மல்லாவிப் பகுதியில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அங்குள்ள மக்களைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

மல்லாவியை விட்டு வெளியேற வேண்டிய அவசியம் நேராது என்று தமிழ்ச் செல்வன் கூறியுள்ளாராம்.

## பெருமளவு மக்கள் இணைகின்றனர்

### மேதினக் கூட்டத்தில் கரிகாலன்

விடுதலைப் புலிகளது மேதினக் கூட்டமும், ஊர்வலமும் மல்லாவி, யோகபுரம் பகுதிகளில் பிரமாண்டமான அளவில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவிலும் மேதினக் கூட்டம் நடைபெற்றது.

யோகபுரத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளது அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில்: "பெருமளவு மக்கள் எமது போராட்டத்தில் இணைந்து வருகின்றனர். தேசிய சக்தியாக மக்கள் எம்மோடு அணி திரண்டுள்ளனர்.

நாளைய சந்ததி சுதந்திரத் தமிழீழத்தில் வாழ்வதற்கு இன்றைய போராட்டம் வழி வகுக்கும்.

வவுனியாவரை சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்லக்கூடிய போர் நுட்பம் எமது தலைமையிடம் உள்ளது. வன்னிப் பிரதேசத்தை மீட்கும் ஆற்றல் எம்மிடம் உண்டு. இதற்கு மேலும் மக்கள் அணி திரண்டு எமது தலைவரின் கரத்தை பலப்படுத்த வேண்டும்!" என்று கரிகாலன் கூறினார்.

கரிகாலன் புலிகளது கப்பலில் இலண்டன் சென்று விட்டதாகவும், இலண்டன் அலுவலகத்தில் முக்கிய பொறுப்பில் உள்ளதாகவும் ஆங்கிலப் பத்திரிகைகள் சில தகவல் வெளியிட்டமை தெரிந்ததே. அதனை முரசு மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு கிளிநொச்சி சமரின் பின்னர் படையினரின் உடல்களின் ஒரு தொகுதியை கரிகாலன் ஒப்படைத்ததும் குறிப்பிடத்தக்கது.

மேதின ஊர்வலத்தில் அலங்கார ஊர்திகளின் பவனியும் இடம்பெற்றது. பிரபாகரனது உருவப் படங்களும் கொண்டு செல்லப்பட்டன.

## அறிவிப்பும்-பதிலடியும்

### உயிலங்குளத்தில் மீண்டும் தாக்குதல்

மன்னார் உயிலங்குளம் போக்குவரத்து பாதை திறப்புக்கு படையினருக்கும், புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடே காரணம் என்று செய்திகள் கூறப்பட்டன. ஆனால் அவ்வாறான உடன்பாடுகள் எதுவும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

உயிலங்குளம் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தியதாக கூறியே போக்குவரத்தை படையினர் தடைசெய்தனர்.

மறுபடி பாதை திறக்கப்பட்ட பின்னரும் புலிகள் உயிலங்குளம் பகுதியில் இருந்த காவலரண் நோக்கி மோட்டார் தாக்குதல் நடத்தினர். மூன்று பொலிசார் படுகாயமடைந்தனர். படையினருக்கும், புலிகளுக்கும் இடையே இப் பகுதியில் தாக்குதல் நடத்துவதில்லை என்று உடன்பாடு ஏற்பட்டிருந்தால், புலிகள் தாக்குதல் நடத்தியதும் உடன்பாடு மீறலாக பெரிதாக அறிவித்திருப்பார்கள்.

போக்குவரத்துத் தடையைத் தொடர்ந்தால் பாரிய கண்டனங்கள் ஏற்படும் என்ற நிலையில்தான் மறுபடி அனுமதிக்க படையினர் முன்வந்தனர்.

மூடிவைத்துவிட்டு திறப்பதற்கு ஒரு காரணம் கூறவேண்டுமே என்பதற்காக, புலிகளோடு உடன்பாடு ஏற்பட்டபின்னரே பாதை திறக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புக்கு பதிலடியாகவே அதே உயிலங்குளம் பகுதியில் உள்ள காவலரண்மீது புலிகள் மோட்டார் தர்க்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது.

## திடீரென்று கேட்ட வேட்டொலிகள்

### கூட்டத்தைக் குழப்ப நடந்த சதி!

வவுனியாவில் புளொட் அமைப்பினர் மேதின ஊர்வலம் ஒன்றையும், கூட்டத்தையும் நடத்தினர்.

ஊர்வலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட ஊர்திகளில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் சித்தரிக்கப்பட்டிருந்தன.

இவற்றை கண்ணுற்ற சீருடைத் தரப்பினர் முகம் சுளித்தனராம். எனினும் ஊர்வலத்திற்கு பாதுகாப்பும் வழங்கப்பட்டது.

வவுனியா நகரசபை மைதானத்தில் கூட்டமும்இசைக்கச்சேரியும் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, திடீரென்று நள்ளிரவு 12 மணியளவில் துப்பாக்கி வேட்டுக்கள் முழங்கின.

வவுனியா காமினி வித்தியாலயத்தில் உள்ள பொலிசாரும், வவுனியா பொதுப் பூங்காவில் உள்ள விசேஷ அதிரடிப்படையினருமே துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகக் கூறப்படுகிறது.

பிறிதொரு தகவலின்படி, நகரசபை மைதானத்துக்கு சமீபமாக நின்று இளைஞர் ஒருவர் வேட்டுக்களை தீர்த்துவிட்டு ஓடியதாகவும், அச் சத்தத்தைக் கேட்டே பொலிசாரும், அதிரடிப்படையினரும் வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் கூறப்படுகிறது.

எது எப்படி இருப்பினும் புளொட்டின் மேதின கூட்டத்தைக் குழப்ப நடந்த சதி என்றே வேட்டொலிகள் பற்றி பரவலாகப் பேசப்படுகிறது.

## பிஸ்டல் குழு சூடு-நகரப் பகுதியில் நடமாட்டம்

திருமலையில் ஆனந்தபுரி என்னும் இடத்திற்கு அருகே சத்திய சீலன் என்னும் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் முன்பு புலிகள் அமைப்பில் இருந்தவர். பின்னர் விலகி, படையினரின் உளவுப்பிரிவுடன் தொடர்பு வைத்திருந்ததாக தெரிகிறது.

நீண்ட நாட்களாக இவரைத் தேடித் திரிந்த புலிகள், 30.04.99 அன்று ஆனந்தபுரி அருகே வைத்து சுட்டுக் கொன்றனர். புலிகளின் பிஸ்டல் குழுவினரே இவரைச் சுட்டுக் கொன்றனர்.

இவரது மரணச் சடங்கில் கலந்து கொண்ட சப்-இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷவும் புலிகளது துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானார்.

சத்திய சீலனின் மரணச் சடங்கில் கசிப்பு வியாபாரி ஒருவரை சப்-இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ சந்தித்தார். அவர் கொடுத்த தகவலை வைத்து கசிப்பு தயாரிக்கும் வீடொன்றுக்கு சென்று கதவைத் தட்டியிருக்கிறார்.

இதற்கிடையே கசிப்பு வியாபாரிகளை புலிகள் சமீபத்தில் கடுமையாக எச்சரித்திருந்தனர். கசிப்பு தயாரிப்பில் ஈடுபடக்கூடாது என்று கூறியிருந்தனர்.

02.05.99 அன்று ராஜபக்ஷ சென்ற அதே வீட்டுக்கு அவருக்கு முன்னரே இரண்டு புலிகள் அவரைச் சென்று எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தனர்.

ராஜபக்ஷ சென்று கதவைத் தட்டியதும், அவரைக் கண்ட புலிகள் சுட்டுவிட்டு தப்பியோடிவிட்டனர்.

இதனையடுத்து குறிப்பிட்ட வீட்டு உரிமையாளரும் தலைமறைவாகியுள்ளார். சந்தேகத்தில் அந்தப் பகுதி இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

திருமலை நகரப் பகுதியில் புலிகளது பிஸ்டல் குழுவினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

## படையில் தமிழ் இளைஞர்கள்

### அறிவிப்பையடுத்து சந்தேகம்

இலங்கை இராணுவத்தில் யாழ்ப்பாண வாலிபர்களையும் சேர்க்கப்போவதாக அரசாங்கம் திடீர் அறிவித்தல் ஒன்றை விடுத்திருப்பது இந்நாட்டில் வாழும் சகலரையும் திகைப்படைய வைத்திருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் இராணுவத்தினரும் பொலிசாரும், படையில் சேர்வதற்கான நேர்முகப்பரீட்சைக்கு வரும் தமிழ் இளைஞர்களை எவ்வாறு நம்பப் போகிறார்கள்? என்ற கேள்வியே பரவலாக எழுந்துள்ளது.

இந்தத் திடீர் அறிவித்தலை தமிழ்க் கட்சிகள் ஒரு கேலிக்கூத்து என்று வர்ணிக்கின்றன. இது இன்றுள்ள நிலையில் நடைமுறை சாத்தியமா, என்றும் பலர் ஐயம் தெரிவிக்கின்றனர்.

இன்று நடைபெறும் போர், புலிகளுக்கு எதிரான போர் என்று அரச தரப்பினர் கூறிவந்த போதிலும், தமிழர்களுக்கு எதிரானதொரு போர் என்றே கருதப்படக் கூடியதாகவே நடைமுறை இருந்து வருகிறது.

சிறீலங்கா ஆயுதப்படையில் தமிழர்கள் எவரும் இல்லை என்பது உலகறிந்த உண்மை. பல நாடுகள் இக்குறைபாட்டைச் சுட்டிக்காட்டி வந்துள்ளன. திடுதிப்பென தமிழ் இளைஞர்களை படையில் சேர்த்துக் கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'இனப்பாகுபாடு எம்மிடம் கிடையாது.' என்ற எண்ணத்தை வெளிநாடுகளுக்கு எடுத்துக் காட்ட அரசு இத்தகைய அறிவித்தலை விடுத்திருக்க வேண்டும் என்றே கருதப்படுகிறது.

இம்மாதம் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கிறது. இதனை ஒட்டியும் சிறீலங்கா அரசு இத்தகைய ஆரவாரமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் பத்து வயதுடையோருக்கும் விசேஷ அடையாள அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் யாழ் வாலிபர்களை படையில் சேர்க்கப் போவதாக கூறுவது வேடிக்கையாக இருப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

## வலிகாமம் காணிச் சுவீகரிப்பு

### மீண்டும் அதே உத்தரவாதம்

வலிகாமத்தில் காணி சுவீகரிப்பு தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளரால் தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்கு குறிப்பொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அக் கட்சிகள் மூலம் அது பத்திரிகைகளுக்கும் கூறப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் புதிதாக எதுவும் காணப்படவில்லை. வலிகாமம் காணி சுவீகரிப்பு தொடர்பாக ஜனாதிபதி ஆவன செய்வார். தற்போது இடை நிறுத்தியுள்ளார் என்றே கூறப்பட்டுள்ளது. இதையேதான் கடந்த மாதமும் ஜனாதிபதியின் செயலர் கூறியிருந்தார்.

காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நீக்குவதற்கு இதுவரை அரசு முன்வரவில்லை.

வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வது, அப்பகுதி மக்கள் மீளக் குடியமர அனுமதிப்பது போன்ற இரண்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதனை அரசு மேற்கொள்ளாதிருப்பதே உண்மையான பிரச்சனையாகும்.

அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது பழைய உத்தரவாதத்தையே ஜனாதிபதியின் செயலர் மீண்டும் அறிவித்துள்ளார்.

அதேசமயம் இது தொடர்பாக வெளியான செய்தியில் பாரிய தவறான தகவலும் இடம்பெற்றுள்ளது.

வடமாகாணம் தொடர்பாக ஆராய்வதற்கு 23.03.99 அன்று தமிழ்க் கட்சிகளுடன் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டில் வலிகாமம் காணிப் பிரச்சனை பற்றி தமிழ்க் கட்சிகள் முன்வைத்த கோரிக்கை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதனையடுத்தே ஜனாதிபதி இடைநிறுத்த உத்தரவைப் பிறப்பித்தார் என்று ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளதாகச் செய்தி காணப்படுகிறது.

ஆனால் இந்த மாநாடு நடைபெற முன்பாகவே ஜனாதிபதி இடைநிறுத்த உத்தரவை வெளியிட்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருந்தன. குறிப்பிட்ட மாநாட்டிலும் ஜனாதிபதி இடைநிறுத்த உத்தரவு பிறப்பித்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளரால் அறிவிக்கப்பட்டது.

எனவே, தாம் கூறித்தான் இடைநிறுத்தம் நடந்ததாக காண்பிக்க தமிழ்க் கட்சிகள் தவறான செய்தியை பத்திரிகைகளுக்கு தெரிவித்தனவா? அல்லது தமிழ்க் கட்சிகளை திருப்திப்படுத்த ஜனாதிபதியின் செயலாளர் அப்படிக் குறிப்பிட்டுள்ளாரா?

## முகாமைக் கடக்க அச்சம்

### பணம், பொருள் கேட்கிறார்கள்!

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையிலுள்ள மைலம்பாவெளி முகாமைக் கடந்து செல்ல வாகனக்காரர்கள் அஞ்சுகின்றார்கள். அங்குள்ள சீருடை உயரதிகாரி தனது முகாமைத் தாண்டிச் செல்லும் வாகனக்காரர்களை அச்சுறுத்திப் பணமும், பொருட்களையும் அன்பளிப்பாகப் பெறுவதில் அதிக அக்கறை காட்டுகிறார் என்று வாகனக்காரர்கள் கூறுகிறார்கள். தினமும் நடக்கும் சாதாரண நிகழ்வாக இதனைக் காணமுடிகிறது.

சீருடையினர் கொண்டுவந்து தரும்படி கூறும் பொருட்களை வாங்கிக் கொடுக்கத் தாமதமானால் அல்லது தவறினால் "வாகனத்தை ஓடவிடாது தடுத்து விடுவோம்" என எச்சரிக்கப்படுகிறார்கள். சமீபத்தில் நெரிசலாக பயணிகளுடன் மினி பஸ் ஒன்று வந்து கொண்டிருந்தபோது அதனை வழிமறித்த சீருடையினர் தாம் முன்னர் குறிப்பிட்ட பொருளை உடனே ஏன் வாங்கி வரவில்லை என்று கடிந்து கொண்டதுடன் பயணிகளை அங்கே இறக்கிவிட்டுத் திரும்பிச் சென்று பொருளை வாங்கித் தருமாறு கேட்டனர்.

குறித்த இந்த சீருடையினரின் முகாமில் லொறி, மினிபஸ், பஸ் போன்ற வாகனக் காரர்களிடமிருந்து ரூபா 300/=, 600/= வரையான பணமோ அல்லது பொருட்களோ, இவ்விதம் அபகரித்துப் பெறப்படுகின்றன.

'குடி' பானங்கள், கிளாஸ் பெட்டி, பீங்கான் பெட்டி, மின் விசிறி, நுளம்புவலை, மின் விளக்குகள், மற்றும் வீட்டுபயோகத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் என்பனவே சீருடையினரால் வாங்கி வருமாறு கேட்கப்படும் பொருட்களாகும்.

மேற்படி வற்புறுத்தலின் பேரில் கேட்கப்படும் பொருட்களைக் கவனித்தால் அவை முகாம் பாவனைக்கு அல்ல, விடுமுறையிற் போகும்போது வீட்டுக்குக்கொண்டு செல்வதே நோக்கம், என்று ஊகிக்கப்படுகிறது. இதுதொடர்பாக உயரதிகாரிகளது கவனத்திற்கு கொண்டுசெல்ல முயற்சிகள் நடக்கின்றன.

## மின்மாற்றிகள் தகர்ப்பு

கொழும்பில் பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி ஆகிய பகுதிகளில் இரு மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

சமீபகாலமாக செவ்வாய்க்கிழமை தோறும் தொடர்ச்சியாக மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டு வந்தன. இம்முறை ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக புலிகளின் குரலிலும் செய்தி தெரிவிக்கப்பட்டது. சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் இரு மின் மாற்றிகள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## நாய்கள் குரைக்கக் கூடாது!

### பொது மக்களுக்கு எச்சரிக்கை!

மட்டக்களப்பு-கொம்மாதுறைப் படை முகாம் சுற்றாடலில் இரவு வேளையில் நாய்கள் குரைப்பதால் சீருடையினர் கலக்கமடைகின்றனர். இதன் வெளிப்பாடு அப்பகுதியிலுள்ள பொதுமக்கள்மீது காட்டப்படுகிறது.

சமீப சில நாட்களாக தமது முகாம்களின் சுற்றாடலில் மாலையாகியதும் நாய்கள் குரைக்கத் தொடங்குவதால் சீருடையினர் பொதுமக்கள் மீது ஆத்திரம் கொண்டுள்ளனர்.

இனிமேல் இரவு வேளையில் நாய்களைக் குரைக்க விட வேண்டாமென்று பொதுமக்களுக்குப் சீருடையினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அவ்வாறு எச்சரிக்கப்பட்டும் நாய்கள் குரைப்பதைத் தடுத்து நிறுத்தத் தவறிய சில பொதுமக்கள் தாக்கப்பட்டுமுள்ளனராம்.

ஏதும் அரவத்தைக் கேட்டாலும், அசைவுகளைக் கண்டாலும் நாய்கள் குரைப்பது இயற்கை நிகழ்வு. இதை நம்மால் எப்படித் தடுக்க முடியும் என்று கவலைப்படக் கூறுகின்றனர் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள்.

## தமிழ்ப் பிரதேசங்களில் வெசாக் நிதி சேகரிப்பு!

### வீட்டுக்கு வீடு தெருவுக்குத் தெரு டிக்கற் விற்பனை!

"வெசாக் தோரண ராஜா- அலங்கார மின் தோரண நிதி" என அச்சடித்த டிக்கட்டுகளை மட்டக்களப்பு எங்கும் விற்பனை செய்வதில் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வீட்டுக்கு வீடு, கடைக்குக் கடை, மற்றும் பயணிகளின் போக்குவரத்து வாகனங்களிலும், மேற்படி 20/= ரூபா கொண்ட டிக்கட்டுகள் கட்டாயத்தின் பேரில் விற்கப்படுகின்றன. ஏற்கனவே தாம் இந்த டிக்கட்டுகளை வாங்கியிருந்தாலும் கூட மீண்டும் மீண்டும் கொண்டுவரும் படையினரிடம் டிக்கட்டுகளை வாங்க வேண்டிய கட்டாயமிருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

டிக்கட்டுகளை வாங்க மறுத்தால் தம்மீது குறிப்பு வைத்திருந்து பின்னர் பழிவாங்கப்படும் என்ற பீதியின் காரணமாக பலர் மீண்டும் மீண்டும் டிக்கட்டுகளை வாங்குகிறார்கள்.

இந்த டிக்கட்டுகளை மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி யட்டியன பஞ்ஞாலோக தேரர் அச்சிட்டு விற்பனைக்காகப் படையினரிடம் ஒப்படைத்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள இராணுவ முகாம்களைக் கடந்து செல்லும் பொதுமக்களின் வாகனங்களை வழிமறிக்கும் இராணுவத்தினர் டிக்கட்டுகளைக் கட்டாயப்படுத்தி விற்று விடுகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்துக் கோயில்கள் பலவும் அதனைச் சூழவுள்ள புனிதப் பிரதேசங்களும் கடந்த பல வருடங்களாக இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.

பல இந்து ஆலயங்கள் ஷெல் வீச்சு, மோட்டார் குண்டுவீச்சு, துப்பாக்கிச்சூடு போன்ற தாக்குதல்களுக்கு இலக்காகியுமுள்ளன.

இவற்றை புனரமைக்குமாறு பலமுறை கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# ஜே.வி.பி.யிடம் அச்சம்
## விஜயவீர மனைவிக்கு தூண்டில்

தென் மாகாண சபைக்கான தேர்தல் அண்மித்து வருவதை கருத்தில் கொண்டு, ஆளும் பொதுஜன முன்னணியினர், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மீது அக்கறை காட்டத் தொடங்கியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஜே.வி.பி. தலைவர் ரோஹன விஜயவீர கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவருடைய மனைவி சித்திராங்கனியும் அவருடைய ஆறு பிள்ளைகளும் திருகோணமலை சீனக்குடாவில் கடற்படைத் தளத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அண்மையில் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு; ஜனாதிபதியையும் சில அமைச்சர்களையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனால், தனது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு நல்ல ஏற்பாடு செய்து தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடவே அவர் வந்ததாக மற்றொரு செய்தி கூறுகிறது.

திருமதி விஜயவீர, தான் எப்போதும் அரசியலில் பங்கேற்பதில்லை என்று ஏற்கனவே சபதமெடுத்துள்ளதாகவும் தெரிகிறது.

வடமேல மாகாணம் உட்பட நடைபெற்று முடிந்த ஆறு மாகாணசபைத் தேர்தல்களிலும் ஜே.வி.பி. போட்டியிட்டது. அக் கட்சிக்கு வாக்காளர்கள் முன் எப்போதும் இருந்ததைவிட அமோக ஆதரவு தர முற்பட்டுள்ளனர் என்பதை அக்கட்சி வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளே சான்று பகர்கின்றன.

தென் மாகாணத்தில்தான் ஜே.வி.பி.யின் செல்வாக்கு முன்பு மிக உன்னதமான நிலையிலிருந்தது. அத்தகைய செல்வாக்கு இப்போதும் குறைந்துவிடவில்லை என்பது அவதானிகளின் கருத்து. இம்முறையும் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சவாலாக ஜே.வி.பி. ஏராளமான வாக்குகளைக் குவிக்கும் என்றே நோக்கர்கள் கருதுகின்றனர்.

எப்படியிருந்தாலும் ஏற்கனவே நடைபெற்ற ஆறு மாகாண சபைத் தேர்தல்களிலும் ஆளும் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியை படுமோசமாக விமர்சித்து பிரசாரம் செய்தன. ஆனால் தென் மாகாணத் தேர்தல் பிரசாரங்களில் இரு கட்சிகளும் ஜே.வி.பி. பற்றி அடக்கியே வாசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், தேர்தல் முடிந்து ஆட்சி அமைக்கும் காலகட்டத்தில் ஜே.வி.பி.யின் ஆதரவை நாடவேண்டிய நிர்ப்பந்தம் அக் கட்சிகளுக்கு ஏற்படும்.

# தமிழ்க் கல்வி நூலில் காணப்படும் பிழைகள்

(கண்டி நிருபர்)

இப்பொழுது பாவனையில் இருக்கும் 9ஆம் தர சமூகக் கல்வி புதிய பாடத்திட்ட நூலில் எக்கச் சக்கமான சொற்பிழைகளும் எழுத்துப் பிழைகளும் சிங்களக் கலப்பும் காணப்படுவதால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர். இதுபற்றி சுட்டிக்காட்டப்பட்டும் கல்வியமைச்சு திருத்தம் செய்யவில்லை.

இப் புத்தகத்தில் காணப்படும் சில பிழைகள்:

| பக்கம் | பிழைகள் | திருத்தப்பட வேண்டியமுறை |
|---|---|---|
| XI- | ஒய்வுப் பெற்ற- | ஓய்வு் பெற்ற |
| XIII- | கல்விச் சேனவ- | கல்விச் சேவை |
| 1- | இந்து சாத்தறம்- | இந்து சமுத்திரம் |
| 3- | கோயூம்பு- | கொழும்பு |
| 7- | இன்தியா- | இந்தியா |
| 7- | பூட்டாள்- | பூட்டான் |
| 7- | செங்கால்- | செங்கடல் |
| 9- | நீரினை- | நீரிணை |
| 10- | அயஸ்கால்வாய்- | சுயஸ் கால்வாய் |
| 11- | அங்கறேஞ்- | அலஸ்கா |
| 71- | பெநக்கூடிய- | பெறக்கூடிய |
| 85- | இசரயன- | இரசாயன |
| 89- | இலங்னகயில்- | இலங்கையில் |
| 293- | இறமை- | இறைமை |
| 114- | ஜோர்டான்- | ஜோர்டான் |
| 114- | ஜேம்ஸ்- | ஜேம்ஸ் |
| 189- | ஜீவராசிகள- | ஜீவராசிகள் |

இவைபோல இன்னும் பல பிழைகள் இதில் புகுந்துள்ளன.

# வாகனங்கள் பலத்த அலசல்
## பல பகுதிகளில் நிறுத்தம்

(மட்டக்களப்பு நிருபர்)

ஏற்கனவே தமிழ் பிரதேசங்களிலிருந்து பெரும்பான்மை இனப் பகுதிகளுக்குள் நுழையும் போக்குவரத்து பஸ்கள்மீது கடுமையான கெடுபிடிகளும், சோதனைகளும் உள்ளன.

இது போதாக்குறைக்கு கண்டி "குட்ஷெட்" மத்திய பஸ்நிலையத்தில் சமீபத்தில் பஸ் வண்டி ஒன்றினுள் குண்டு வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்து சோதனைகளின் தீவிரம் மேலும் அதிகரித்துள்ளது.

தமிழ் பிரதேசங்களிலிருந்து பெரும்பான்மை இனப்பகுதிகளுக்குள் பிரவேசிக்கும் பஸ் வண்டிகள் பல இடங்களில் வழிமறித்துச் சோதிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு-கதுறுவெல நகர எல்லைப் புறபெரிய சோதனைச்சாவடி மாதுறு ஓயாச் சந்தியில் உள்ளது. மட்டக்களப்பிலிருந்து நாட்டின் எந்தப்பகுதிக்கும் செல்லும் வாகனங்களும் பயணிகளும் இங்கு சல்லடை போட்டுச் சோதிக்கப்படுவது ஒருபுறமிருக்க; மிக மரியாதைக்கேடாக அங்கு வரும் தமிழ்-முஸ்லிம் மக்கள் நடத்தப்படுவதையும் அவர்கள் திட்டித் தீர்க்கப்படுவதையும் நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது.

பயணிகள் தம்முடன் எடுத்துச்செல்லும் சகல பொருட்களும் சோதனை என்ற பெயரில் வீசி எறியப்படுகின்றன. இக்காரியங்களையும் அங்கு மக்கள் அதட்டி உருட்டப்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

தாமும் வாகனங்களும் சோதனை இடப்படுவதை எந்தவொரு பொதுமக்களும் நிராகரிக்கவில்லை. ஆனால் நாச வேலைத் தடுப்பு என்று கூறிக்கொண்டு துவேஷம் காட்டப்படுவதையே மக்கள் வெறுக்கிறார்கள்.

# நுளம்புத் தொல்லை

(புத்தளம் நிருபர்)

புத்தளம் மாவட்டத்தில் கடந்த மாதம் பெய்து வந்த மழையின் காரணமாக குட்டைகளிலும், வாய்க்கால்களிலும் தேங்கி நிற்கும் நீரினால் நுளம்புகள் பெருகுவதினால் பொதுமக்கள் குறிப்பாக- சிறுவர்களும், குழந்தைகளும் பலவிதமான நோய்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

மலேரியாவினால் அதிகமானவர்கள் புத்தளத்தில் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆகவே நகர சபையும், பிரதேச சபையும் இவ்விடயத்தில் கவனம் எடுக்குமா? என பொதுமக்கள் கேட்கின்றார்கள்.



மலையாள மாந்திரிகம்


மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ;.பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.




1 வது பிறந்த நாள் வாழ்த்து

புங்குடுதீவு மடத்துவெளியைச் சேர்ந்த திருதிருமதி மனோகரன்-ரஜனி தம்பதியினரின் செல்வப் புதல்வி

**மனோஷிஜா மனோகரன் 06.05.99**

செல்வி மனோஷிஜா தனது முதலாவது பிறந்த நாளை 06.05.99 அன்று சுவிற்ஸர்லாந்தில் (ஜெனிவா) உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, இலங்கை அப்பப்பா கனடா அம்மப்பா, அம்மம்மா. இலங்கை பிரபா பெரியப்பா, சுவிஸ் மோகன் பெரியப்பா செல்வி பெரியம்மா, கனடா சுதா பெரியப்பா, விமலை பெரியம்மா, ஜேர்மன் கரன் சித்தப்பா, கனடா குமார் மாமா, தியாகி அத்தை (நீர்கொழும்பு) அண்ணாமார் சத்தியா, இனியன். அக்காமார் லக்ஷா, சுவனி, செவ்வந்தி, சுதாரணி மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் ஊரதீவு பாணாவிடை சிவன் அருளுடன் மனோஷிஜாவை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*தகவல்:- என்.குமார் (மாமா) கனடா.*



பிறந்தநாள் வாழ்த்து

**டினேஸ் 02.05.1996 — நரேன் 05.05.1998**

புளியங்கூடலைச் சேர்ந்த நிறைமொழி-பவானி தம்பதியினரின் செல்லப் புதல்வர்களாகிய டினேஸ் தனது மூன்றாவது பிறந்த தினத்தையும், நரேன் தனது முதலாவது பிறந்த தினத்தையும் மே மாதம் 8ம் திகதி அன்று கனடாவில் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா (கனடா) அம்மப்பா அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அன்ரிமார், பெரியப்பாமார் பெரியம்மாமார், சித்தப்பா, அத்தைமார், மச்சாள்மார், அண்ணா, தங்கை, அக்கா மற்றும் இலங்கையில் இருக்கும் அத்தைமார், மச்சான், மச்சாள், சித்தப்பா, அப்பப்பாமார், அப்பம்மாமார் பாட்டி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்த்துகின்றனர்.

Mr.Mrs. M. Neraimoly
6755, Clarb.#5 MON Que, H2S-3G1, CANADA



ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 28.11.1934
விண்ணில் 23.05.1998

வடமராட்சி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட

**திரு இராசையா இராசரட்ணம்** *திதி 14.05.1999*

ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
உங்கள் ஆருயிர் அன்புக்கு இணையாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும்
உங்கள் மலர்ந்த முகத்துக்கு ஈடாகுமா?
ஆண்டொன்று சென்றிடினும் ஆறிடுமோ எங்கள் மனம்?
நீண்டு வரும் எம் நினைவில் நீங்கிடுமோ உங்கள் வடிவம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன் வாழும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன், உற்றார் உறவினர், நண்பர்கள்.

தகவல்:-திருமதி நாகம்மா இராசரத்தினம்
105,30 THUNDER GROVE, SCARBOROUGH, ONTARIO, CANADA. MIV 4 A3
தொலை பேசி 293-2995



2ம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் திரு செல்வத்துரை சிவசுப்பிரமணியம்**

**தோற்றம் 11.03.1927 — மறைவு 24.04.1997**

சீரோங்கு சண்டிலிப்பாய் பதி வாழ்ந்த செல்வத்துரை
பெருமகனாய் வந்துதித்து.
வனப்புறு 'மகேஸ் வாசா' தனில்
வளமுற வாழ்ந்த எம் திருமகனே!
எம் அன்புத் தெய்வமே!
எங்கள் துயர் துடைத்து
எமைக்காத்த திருவுருவே!
போனவழி சொல்லவில்லையே.
இங்கு நாம் ஏங்கி நிற்க
எங்குதான் ஓடிச்சென்றாயோ!
ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஈரேழு ஜென்மமும்-நின்
நினைவுதான் நெஞ்சைவிட்டகலாது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கும் என்றும் உங்கள் நினைவுடன்.

பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

*தகவல்:- எஸ்.மகேஸ்வரி, வவுனியா.*

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 07 1952



இறப்பு 22 04 1997

**அமரர் திரு எஸ்.ஏ.கே.கோவிந்தபிள்ளை**

**திதி 30.04.1999**

நிழல் கொடுத்த தந்தையே!
உங்கள் நினைவால் வாடுகிறோம்.
நிஜத்தில் நீங்கள் இல்லையே.
எங்கள் கண்ணில் நீர் வடிவதை சகிக்காத நீங்கள்
வாழ்நாள் முழுவதும் கண்ணீர் சிந்தவைத்து
விட்டீர்கள். பெற்றவரே நீங்கள் இன்றி
பொழுது விடியுமோ? இன்றும் உங்கள்
ஆத்மா சாந்தி அடைய அம்மனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி கௌசலியாதேவி, பாசமழலைகள் கௌசலதாசன், வினோதினி, தாய், தந்தை- கந்தையா, சிவபாக்கியம் மற்றும் உற்றார் உறவினர்.

*74 ,கொலேஜ் வீதி, கொழும்பு-13.*



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கடற் சமரும் கப்பல் கதையும்

நாரதர்

சம்பவம் ஒன்று, வியாக்கியானம் மூன்று.

முல்லைத்தீவுக் கடலில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக இலங்கை பத்திரிகைகள், வானொலி ஆகியவற்றில் வெளியான செய்திகளை ஒருமுறை நோக்கலாம்.

"முல்லைத்தீவுக் கடற்பகுதியில் விமானப் படை விமானங்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, நடுக் கடலில் ஒரு கப்பல் நிற்பதை அவதானித்தன. அதிலிருந்து பொருட்களை ஏற்றிக்கொண்டு புலிகளின் படகுகள் விரைந்து சென்றதை கண்டன. உடனடியாக விமானப்படை விமானங்களும் கடற்படையும் விரைந்து சென்று குண்டுவீச்சு நடத்தின."

மேலே இருப்பது ஒரு தகவல். மற்றொரு செய்தி இப்படிக் கூறுகிறது:

"சனிகாலையில் முல்லைத்தீவுக்கு வடகிழக்கே 80 முதல் 90 மைல் தூரத்திற்கு அப்பால் இனம்தெரியாத கப்பல் ஒன்று சென்றதை விமானப்படையினர் கண்டனர். எனினும் ஆயுதங்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த பகுதிக்கு அன்று இரவே கடற்படை படகுகள் சென்றன."

மூன்றாவது செய்தி அரச வானொலிச் செய்தி: அது என்ன கூறியது?

"கப்பல் ஒன்று முல்லைக் கடலில் நிற்பதாக தகவல் கிடைத்து விமானப்படை விமானங்கள் விரைந்தன. ஆனால் அங்கு கப்பல் எதனையும் காண முடியவில்லை." என்று விமானப் படை அதிகாரி கூறியதாக தெரிவித்தது.

முதல் இரண்டு செய்திகளை விட இந்த மூன்றாவது செய்தி பரவாயில்லை.

கப்பலில் ஆயுதம் இறக்கி கொண்டிருப்பதை கடற்படையினரோ, விமானப்படையினரோ கண்டால் என்ன செய்வார்கள்? கப்பலைத்தான் முதலில் குண்டுவீசி அழிப்பார்கள். இது சாதாரணமாகத் தெரிந்த விஷயம்.

படகுகளை குறிவைப்பதைவிட கப்பலை குறிவைத்து அழிப்பது நூறுமடங்கு சுலபம். படகுகள் தப்பி ஓடிவிடலாம். கப்பல் தப்பி யோட முடியாது. முல்லைத்தீவு கடலில் இருந்து நகர்ந்து சர்வதேசக் கடல் எல்லைக்குள் நுழைந்தால்கூட விமானப்படை விமானங்களால் வழிமறிக்கப்பட்டு கொண்டுவரப்படலாம்.

இதுவரை இரண்டு தடவைகள் புலிகளது ஆயுதக் கப்பல்கள் தாக்கியழிக்கப்பட்டன. விமானப் படையின் விமானங்களை கண்டதும் சுற்றி நின்ற புலிகளது படகுகள் துரிதகதியில் கரைக்கு தப்பிச்சென்றன. கப்பல் அழிக்கப்பட்டது.

கப்பலை மறைக்கவும் முடியாது. கப்பல் விமானப்படையின் கண்களுக்கு தென்படாமல் தப்பிச் செல்லவும் முடியாது.

எனவே கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அதனைக் கண்டுவிட்டே படகுகள்மீது தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்தியை ஏற்கமுடியாது.

கப்பலை காலையில் கண்டுவிட்டு இரவு கடற்படைப் படகுகளை அனுப்பியதாக வெளியான செய்தியும் வேடிக்கையாக இருக்கிறது.

இரவு வரை புலிகள் ஆயுதங்களை இறக்கி முடிப்பதற்கு அவகாசம் கொடுக்குமளவுக்கு படையினர் தாராளமனதுடன் நடந்து கொண்டார்கள் என்று நாம் நம்ப வேண்டுமாக்கும்?

புலிகளது ஆயுதக் கப்பல் நிற்பதாக தெரிந்தால் கடற்படைப் படகுகள் கிட்டவே செல்வதில்லை. பொறி இருக்கலாம் என்று எட்டத்தில் நிற்க, விமானப்படை விமானங்கள்தான் சென்று தாக்குதல் நடத்தும்.

யாழ் கடலில் புலிகளின் படகுகள் அணியாக செல்வதைக் கண்டால்கூட, விமானப் படை உதவியோடுதான் கடற்படையினர் தாக்குதல் நடத்துவது வழக்கம்.

அப்படியிருக்கும்போது, அதுவும் இரவு வேளையில் கடற்படை பீரங்கிப் படகுகள் கப்பலை தேடிச் சென்றன என்ற செய்தியையும் நிராகரித்துவிடலாம்.

ஆயுதக் கப்பலுக்கு ஐந்து படகுகள் பாதுகாப்பாக நின்றதாகவும், கடற்படையினர் ஆயுதம் எற்றிய படகை குறிவைத்து தாக்கியதாகவும் செய்தியில் கூறப்பட்டது.

ஆயுதக் கப்பல் ஒன்று வந்து தரித்து நிற்குமானால், குறைந்தது நூறு படகுகளாவது மளமளவென்று பொருட்களை ஏற்றி கரைக்கு கொண்டு சென்று இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும்.

இதற்காகவே கப்பல் வருவதற்கு சில நாட்களுக்கு முன்பே மீனவர்களிடமும் படகுகள் இரவல் பெறப்பட்டு தயார் நிலையில் நிறுத்தப்படும்.

கப்பலில் இருந்து பொருட்களை இறக்குவது ஒரு பணி. கப்பலை பாதுகாப்பது இன்னொரு பணி.

கப்பலை பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் கடற்புலிப் படகுகள் கப்பலுக்கு அருகே நிற்க மாட்டா.

கப்பலைத் தாக்குவதற்கு கடற் படையினர் வருவார்களேயானால், அவர்களை எட்டத்தில் வைத்து வழிமறித்து தாக்க வசதியான இடத்திலேயே கடற்புலிப் படகுகள் சுற்றித்திரியும்.

கடற்படையின் பீரங்கிகள் கப்பலையோ, கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கும் படகுகளையோ நோக்கி சுடமுடியாத தூரத்தில் வழிமறிக்கக்கூடியதாக கடற்புலிப் படகுகள் ரோந்து செய்யும்.

இதனால்தான் புலிகளது கப்பல்களைத் தாக்க விமானப்படை விமானங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுவதுண்டு.

இப்படியான சூழ்நிலை எதுவும் இல்லாமல், கடற்படை படகுகள் மிகச் சுலபமாக கப்பலை நெருங்கியதாகவும், கப்பலுக்கு அருகே நின்ற ஐந்து படகுகளில் ஆயுதம் ஏற்றப்பட்ட படகை குறிவைத்து தாக்கி அழித்ததாகவும் வெளியான செய்தி வேடிக்கையாக இருக்கிறது.

அப்படித் துல்லியமாக ஆயுதம் ஏற்றப்பட்ட படகை மட்டும் தாக்க முடிந்தால், கப்பலையே சுலபமாக அழித்திருக்கலாம்.

எவ்விதமான ஆராய்வும் இன்றி செய்திகள் எப்படி வெளியாகின்றன? என்பதற்கு இன்னொரு உதாரணம் பாருங்கள்.

ஆயுதம் ஏற்றப்பட்ட படகில் 25 புலிகள் இருந்ததாகவும், அத்தனைபேரும் பலியானதாகவும் மற்றொரு செய்தி கூறுகிறது.

ஒரு பெரிய படகில் 20 பேர்தான் சாதாரண மாக பயணம் செய்ய முடியும். அப்படிப் பயணம் செய்வதாயின் பொருட்களை ஏற்றிச் செல்ல முடியாது.

அப்படியிருக்கும்போது ஆயுதம் ஏற்றப்பட்ட படகில் எப்படி 25 பேர் செல்ல முடியும்?

கப்பலில் இருந்து ஆயுதம் இறக்கும் படகில் இரண்டுபேர்தான் இருப்பார்கள். ஒருவர் படகோட்டி இன்னொருவர் உதவியாளர். படகு கரைக்கு சென்றதும் அதிலிருந்த பொருட்களை இறக்க கரையில் ஆட்கள் தயாராக இருப்பார்கள்.

எனவே, நம்பமுடியாத, சாத்தியமே இல்லாத செய்திகள் பரபரப்பாக வெளியாகியதன் மர்மம் என்ன?

இத்தனைக்கும் அரசோ, படையினரோ உத்தியோகபூர்வமாக இப்படியான செய்திகளைக் கூறவேயில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

உண்மையில் நடந்தது என்ன?

01.05.99 சனிக்கிழமையன்று வன்னிக் கடற்பகுதியில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையே சமர் ஒன்று நடந்திருக்கிறது.

கடற்புலிகளது படகுகள் சில திருமலையில் இருந்து முல்லைத்தீவுக்கு சென்று கொண்டிருந்தபோதே இம் மோதல் மூண்டது.

இம் மோதலில் கடற்புலிகள் தரப்பில் கடற்புலித் தளபதிகளில் ஒருவரான லெப்ரினன்ட் கேணல் முத்துக்குமார் கலைஞானராஜா என்பவர் பலியானார். மேலும் சில புலிகள் காயமடைந்தனர்.

கடற்படைத் தரப்பில் பெரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

புலிகளது படகுகள் அணியாக சென்றதால், விமானப்படை விமானங்களும் கடற்படையினருக்கு உதவிக்கு விரைந்தன.

இச் செய்திதான் பலவிதமாக திரிபுபடுத்தப் பட்டு, முன்னுக்குப் பின் முரணாக வெளியாகின.

உண்மையில் இச் செய்தி படையினருக்கு பாதகமானதுதான். புலிகளின் கப்பலை கண்டும் அதனை தாக்காது தப்பவிடுவது என்பது கேலிக்குரிய சமாச்சாரம். கப்பலை விட்டு படகைத் தாக்குவது என்பது தும்பைவிட்டு வாலைப் பிடித்த கதை போன்றது.

அப்படியிருந்தும் உடனடியாக உத்தியோகபூர்வ அறிக்கை எதனையும் இது தொடர்பாக படையினர் வெளியிடாதது ஏன்?

புலிகளின் ஆயுதக் கப்பல் வந்து போனது போன்று செய்திகள் அடிபட விட்டது ஏன்?

அங்குதான் இருக்கிறது விஷயம்.

06.04.99 அன்று இலங்கை, இந்திய கடற்படை அதிகாரிகள் புதுடில்லியில் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த முடிவு செய்திருந்தனர்.

பாக்கு நீரிணையூடாக புலிகள் ஆயுதக் கடத்தலில் ஈடுபடுவதை தடுப்பது பற்றியே இப் பேச்சுக்கள் நடைபெற முடிவாகியது. இலங்கை அரசின் வேண்டுகோளின்படியே இப் பேச்சு ஒழுங்கு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இப்பேச்சில் இலங்கைத் தரப்பு தமது கருத்தை வலியுறுத்த வசதியாகவே புலிகளது ஆயுதக் கப்பல் மீண்டும் வந்து சென்றதாக தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இதற்கு 01.05.99 இல் நடந்த கடற்சமர் தோதாக அமைந்துவிட்டது.

சமீபகாலமாக புலிகளது ஆயுதக் கப்பல் செய்திகள் அடிக்கடி கூறப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாரதிய ஜனதா அரசு பதவிக்கு வந்த பின்னரே புலிகளுக்கு ஆயுதக் கப்பல் வந்து போவதாக அடிக்கடி செய்திகள் வர ஆரம்பித்தன.

பாரதிய ஜனதா அரசின் பாதுகாப்பமைச்சர் மீது இருக்கும் சந்தேகமே இந்த ஊகங்களுக்கு காரணம்.

இந்திய கடற்படைத் தளபதியான விஷ்ணு பகவத்தை பதவி நீக்கம் செய்த பின்னர் அச் சந்தேகம் மேலும் தீவிரமாகிவிட்டது.

கடந்த இரு மாதங்களில் மூன்று தடவைகள் புலிகள் ஆயுதங்களை கொண்டு வந்து முல்லைத்தீவில் இறக்கியதாக செய்திகள் கூறப்பட்டன.

அதனை ஒரு புகாராக இந்தியாவிடம் கூறியுள்ளது இலங்கைத் தரப்பு.

முதலில் செய்திகளை பத்திரிகைகள் ஊடாக வெளிவர செய்துவிட்டு, பின்னர் அதனை ஆதாரமான புகாராக கூறும் உத்தி இது.

இரண்டு மாதத்தில் மூன்று தடவை ஆயுதம் கொண்டுவர வேண்டுமானால் பல நூறு கோடி ரூபாய்கள் தேவை.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ஆட்டிலெறிகள் தவிர ஏனைய குறும்தூர ஆயுதங்கள் புலிகளிடம் தாராளமாகவும், மேலதிகமாகவும் இருக்கின்றன.

சமீபத்தில் கூறப்பட்ட கதையையும் சேர்த்தால் இரண்டு மாதத்தில் நான்கு தடவை கப்பலில் கொண்டுவந்து இறக்குவதற்குரிய ஆயுதங்களை புலிகள் கொள்வனவு செய்ய வேண்டுமானால், ஏதாவது நாடு இலவசமாக ஆயுதங்களை கொடுத்தால்தான் உண்டு.

இலங்கை அரசால்கூட இரண்டு மாதத்தில் நான்கு முறை ஆயுதங்களை வாங்கிக் குவிக்க நிதி வசதி போதாது.

புலிகளிடம் கப்பல்கள் இருப்பது உண்மை. புலிகள் ஆயுதக் கொள்வனவு செய்வதும் உண்மை. ஆயுதங்களை கொண்டு வந்து சேர்த்ததும் உண்மை. ஆனால் அடிக்கடி அதனை செய்ய முடியாது. அதற்கான நிதி வசதி போதாது.

அப்படி வசதி இருந்தால் எத்தனையோ ஆட்டிலெறிகளை வாங்கிக் குவித்திருப்பார்கள். படையினரிடம் ஆட்டிலெறிகளை கைப்பற்றும் வரை புலிகளிடம் ஆட்டிலெறிகளே இருக்கவில்லை.

ஆட்டிலெறிகளும், டாங்கிகளும் இருந்திருந்தால் யாழ் குடாநாட்டிலிருந்து புலிகள் பின்வாங்க வேண்டியும் நேர்ந்திருக்காது.

கப்பல் அடிக்கடி வந்து போவதாக இருந்தால் தமிழ்நாட்டிலிருந்து படகுகள் மூலம் மருந்துப் பொருட்களை புலிகள் கொண்டு வந்து சேர்க்கத் தேவையில்லை.

கப்பல் அடிக்கடி வந்து போவதற்கு கட்டுப்படியாகாது என்பதால்தான், படகுகள் மூலம் தமிழ் நாட்டிலிருந்து மருந்துப் பொருட்கள், எரிபொருட்கள் என்பவை கடற்புலிகளால் கொண்டுவரப்படுகின்றன. களஞ்சியப் படுத்தப்படுகின்றன.





பெட்டி பெட்டியாக ஆயுத தளபாடங்கள் ஏற்றப்படும் காட்சி

புலிகள் பெருமளவு ஆயுதங்களை குவிப்பது இந்தியாவுக்கும் அச்சுறுத்தலானது என்று உணரவைக்கத்தான் இந்தக் கப்பல் கதைகள் தற்போது அடிக்கடி கூறப்படுகின்றன.

இதன் மூலம் புலிகளது கப்பல் வந்து போவதை தடுப்பது மட்டும் நோக்கமல்ல. தமிழ் நாட்டிலிருந்து புலிகள் தமக்கு தேவையான பொருட்களை கொண்டு வந்து சேர்ப்பதைத் தடுப்பதே பிரதான நோக்கம்.

புலிகளது கப்பல் அடிக்கடி வந்து போகிறது. ஆயுதங்கள் குவிகின்றன என்று நம்ப வைத்தால், இந்திய கடற்படை விழிப்படையும். ரோந்துகள் அதிகமாகும். அதனால் புலிகளது படகுகள் தமிழ் நாட்டுக்கு சென்று வருவது தடைப்படும்.

இலங்கை கடற்படைத் தளபதியாக கிளன்ஸி பெர்னான்டோ இருந்தபோது, இந்தியக் கடற்படையோடு இலங்கைக் கடற்படையும் இணைந்து பாக்குநீரிணையில் கூட்டு ரோந்து ஒன்றுக்கும் உடன்பாடு ஏற்பட்டது.

அவர் கொல்லப்பட்ட பின்னர் அத் திட்டம் முடங்கிப் போனது.

இப்போது மறுபடி கூட்டு ரோந்துக்கு இந்தியாவை உடன்பட வைக்க நினைக்கலாம்.

இதுதவிர, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் இந்தியாவில் பெரும் பிரச்சனையாகியுள்ளது.

இதனையடுத்து இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பாக ரோந்தில் ஈடுபடும் சூழல் தோன்றியுள்ளது.

இப் பிரச்சனை இலங்கை, இந்திய உறவுகளிலும் கசப்பை ஏற்படுத்தும் அளவுக்கு மாறியுள்ளன.

அதுமட்டுமல்லாது, தமிழக மக்களிடம் மறுபடி இலங்கை அரசுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டும் நிகழ்வுகளாகவும் இருக்கின்றன.

பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க. போன்றவை இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை பெரும் பிரச்சனைகளாக கிளப்பியுள்ளன.

இவ்வாறான நிலையில் பாக்கு நீரிணையில் புலிகளது ஆயுதக் கப்பல் அடிக்கடி வந்து செல்வதாக செய்திகள் வெளியாவது, தமிழக மீனவர்மீதான தாக்குதல் தொடர்பான பிரச்சனையின் தீவிரத்தை சற்றுக் குறைக்கும் என்று இலங்கை அரச தரப்பு எண்ணலாம்.

அடிக்கடி ஆயுதக் கப்பல்கள் வருவதால் தான் கடற்படையினர் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்று இந்தியத் தரப்பிடம் விளக்கம் கூறமுடியும்.

உண்மையில் புலிகளது ஆயுதக் கப்பலை தடுப்பதுதான் அரசின் நோக்கம் என்றால், ஆரவாரம் காண்பிக்காது, காத்திருந்து பொறிவைத்து மடக்கவே முயலும்.

புலிகளது கப்பல்கள் வந்து போய்விட்டன என்று கூறுவது அரசுக்குத்தான் மரியாதை இல்லை.

அப்படியிருந்தும் அதனைக் கூறுகிறார்கள் என்றால், பலமான காரணம் பின்னணியில் இருக்கிறது என்றுதானே அர்த்தம்.

இந்தியாவுக்கும், புலிகளுக்கும் இடையே எவ்வகையான உறவும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் தலையாய கவனம் செலுத்தப் படுகிறது என்பதே முக்கியமானது.

இதற்கிடையே, சமீபத்தில் கைதான புலிகள் சிலர், கப்பலில் எத்தகைய ஆயுதங்கள் வந்து இறங்கின என்று கூறியதாகவும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் செய்தி போட்டிருந்தனர்.

கப்பலில் இருந்து எத்தகைய ஆயுதங்கள் இறக்கப்படுகின்றன என்பது அதனை இறக்குவோருக்கும் தெரியாது. அனைத்தும் பெட்டிகளுக்குள்ளேயே இருக்கும்.

ஆயுதங்கள் இறக்குவதற்கு பொதுமக்களும் அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் உள்ளே இருப்பது தெரியாது.

என்னென்ன ஆயுதங்கள் வந்துள்ளன என்பது மிக இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். புலிகளுக்குள்ளேயே இரகசியம் பேணப்படும். குறிப்பிட்ட ஆயுதத்தை பயன்படுத்துவோருக்கும், முக்கிய தளபதிகளும் தவிர புலிகள் பலருக்கே தம்மிடம் உள்ள விமான எதிர்ப்பு ஏவுகணை எந்த ரகம் என்பது தெரியாது.

இதனால்தான் இன்றுவரை படைத்தரப்பால்கூட அந்த இரகசியத்தை அறியமுடியவில்லை.

புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணையைப் பயன்படுத்திய பின்னர் புலிகள் சிலர் படையினரால் கைதாகினர். அப்படியிருந்தும் அந்த இரகசியம் மட்டும் வெளியாகவில்லை.

அப்படியிருக்கையில், கப்பலில் இருந்து இறக்கப்பட்ட ஆயுதங்கள் எந்தெந்த ரகம் என்று, சாதாரணமாக கைதான புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் மூலம் விலாவாரியாக அறிய முடியுமா?

எனவே, புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து இறங்கியுள்ளன என்று காண்பிப்பதில் அதீத அக்கறை காட்டப்பட்டுள்ளது என்று புரிகிறது.

எல்லாவகையிலும் புலிகளை பலவீனமாக சித்தரிக்கும் அரசு, கப்பல் விவகாரத்தில் மட்டும் புலிகளை பலமாகக் காட்டத்தக்க விதமாக செய்திகளை நழுவவிடுவதற்கு காரணம் இல்லாமல் போகுமா?

புலிகள் இரண்டாயிரம் பேரே உள்ளனர். விரைவில் அவர்களை ஓரம் கட்டி விடுவோம் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார்.

ஆனால், புலிகள் புதுப்புது ஆயுதங்களைக் குவிப்பதாக இலங்கைத் தரப்பால் இந்தியத் தரப்பிடம் கூறப்படுகிறது.

முன்னது, தென்னிலங்கை மக்களுக்கு தேர்தலில் உற்சாகமளிப்பதற்கு உபயோகம்.

பின்னது, இந்தியாவை அச்சுறுத்தி புலிகளுக்கு எதிராகத் தூண்டிவிட உபயோகம். ■

## அதிரடி அப்பாத்துரை



**கொழும்பு சிங்கள,** ஆங்கிலப் பத்திரிகைகள் சிலவற்றில் ரெண்டு எழுத்தாரைப் பற்றிய கற்பனைச் செய்திகள் இப்போது அடிக்கடி தலைகாட்டுகின்றன. ரெண்டு எழுத்தாருக்கு ஆயுதம் வாங்கும் கோடீஸ்வர வர்த்தகரை வெளிநாட்டிலிருந்து படகில் வந்தபோது பிடித்ததாக ஒரு 'டும்' செய்தி வெளியானது. அது வெளியாகி ஒரு வாரத்துக்குள் ரெண்டு எழுத்தாரின் ஆயுதக் கப்பல் வந்ததாக அதே பத்திரிகைகளில் செய்தி. வாங்குபவரைப் பிடித்தாலும் ஆயுதம் வந்து கொண்டிருக்குது போல கிடக்கு.

**வவுனியாவில்** விடுதிகளில் தங்கியிருப்பவர்களிடம் இரவு மிரட்டல் விடுத்து, பணம் திரட்டப்படுகிறதாம். வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் கொழும்பில் இறங்கியது முதல் ஒரு கண் வைக்கப்படுகினமாம். பின்னர் வவுனியா சென்றதும் வரி, வட்டி, திறை, கிஸ்தி! எங்களோடு வெளிநாட்டுக்கு வந்தாயா, அங்கு வெய்யிலிலும், குளிரிலும் வாடும் எங்களுக்கு ஒத்தாசை புரிந்தாயா? என்று கேட்கவோ முடியும்?

**தமிழ்க் கட்சிகளின்** இலட்சிய ஈடுபாடுகளுக்கு ஒரு சாட்சி மேதினத்தை முன்னிட்டு டமில் கட்சி ஒன்று பிரசுரம் வெளியிட்டிருந்தது. "எட்டு மணி நேர வேலை நாளை வென்றெடுத்த நாள்தான் மேதின நாள்!" என்று விளக்கம் கொடுத்திருந்தவை. மே தினம் என்பது சிக்காக்கோவில் தொழிலாளர் போராட்டம் இரத்தத்தில் தோய்ந்த நாள். அதன் பின்னர் பல காலமாக போராடிப் போராடித்தான் எட்டு மணி நேர வேலைநாள் கோரிக்கை வென்றெடுக்கப்பட்டது. போராட்டம் தோற்றுப் போனது என்று எல்லாவற்றையும் கைவிட்டு ஓடாமல், தொடர்ந்து போராடியதால் கிடைத்தது தானுங்கோ எட்டு மணி நேர வேலைநாள். இது பலர் அறிந்த உண்மை. போராட்டம் பற்றியே தெரியாமல் இயக்கம் தொடங்கிய ஆட்களல்லோ! மேதினம் பற்றியே தெரியாமல் மேதினம் கொண்டாடுவதில் என்ன ஆச்சரியம்! பிரசுரம் விடுத்த கட்சியின் பெயர்: ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

**வவுனியா சிகப்புச்** சங்க பிரதிநிதியின் கைதுக்கு பின்னால் அரசியல் காழ்ப்புணர்வு காரணமான தூண்டுதல்களும் இருக்கலாம் என்று ஒரு பட்சி சொல்லுது. அரசியலில் தமக்குப் போட்டியாகக் குதித்து விடுவாரோ என்று சிலர் கருவிக் கொண்டிருந்தவையாம். சிருடைதரப்பாருக்கும் அவருக்கு ஒரு செல்லக் குட்டு குட்டிவைக்க ஆசை இருந்ததாம். அதுதான் தருணம் கிடைத்ததும் வலையை வீசியிருக்கினம்.

**மலையக தனித்துவக்** கட்சியின் ஊர்வலக் குழப்பம் தலைவருக்கு பலத்த சந்தோசமாம். இதனை வைத்தே சரிந்த செல்வாக்கை தூக்கி நிறுத்திப் போடலாம் என்று அவருக்குத் தெரியாதோ?

**அடுத்த பிரதமராகவும்** அயலகத்தில் வாஜ்பேயிக்கு சந்தர்ப்பம் இருப்பதாக செய்திகள் வந்ததும், நம் அதிகாரத் தரப்பு வருத்தத்தில் இருக்கிறதாம். அதென்னவோ தெரியாது, எந்த அம்மணிக்கும் அந்த மனுசனை பிடிக்குதில்லை!

இந்த வாரப் பொன்மொழி.

"கீழே விழுந்து கிடப்பவனை
கை தூக்கி விடுவதற்காக
குனிகிறவனை விடவும்
உயரமான மனிதன்
இந்த உலகில் இல்லை!" ■

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

# கொலை வழக்கில் குற்றச்சாட்டுக்களும் அதில் இருந்த ஓட்டைகளும்




ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேர் மீதும் இந்திய மத்திய புலனாய்வு துறை (சி.பி.ஐ) சுமத்திய பிரதான குற்றச் சாட்டுக்கள் என்ன? அவற்றில் உள்ள ஓட்டைகள் யாவை? என்பதை 'தமிழர் நீதிக்குழு' வெளியிட்ட நூல் பட்டியலிட்டிருந்தது.

சென்ற வாரம் அதன் ஒரு பகுதியை தந்திருந்தேன் இது அதன் தொடர்ச்சி.

## சாந்தன்

குற்றஞ்சாட்டப்பட்ட 3வது எதிரி

*இலங்கைத் தமிழர்*

91.5.01 அன்று சிவராசனுடன் படகில் தமிழகம் வந்த எட்டுப்பேரில் இவருமொருவர். பொலிஸ் தரப்பு சாட்சியங்களின்படி கோடியாக்கரையில் வந்திறங்கிய இவர் 03ம் திகதி சென்னை வந்து ஏற்கனவே அவருக்கு அறிமுகமாய் இருந்த புகைப்படப் பிடிப்பாளர் ஹரிபாபு வீட்டில் பத்து நாட்கள் தங்கியிருந்தார்.

அதற்குப்பின் வெளிநாடு செல்வதற்காக 15வது எதிரி சண்முகவடிவேலுவை அணுகி அவரது உதவியோடு ஒரு பயணமுகவரிடம் சென்றார். அங்கே 80,000 ரூபா இந்தியப்பணத்தில் கொடுத்து கடவுச்சீட்டுப் பெற்று வெளிநாடு செல்வதற்காக ஏற்பாடுகள் செய்தார்.

இவ்வாறு அவர் ஏற்பாடுகள் செய்தபோது ஹரிபாபு வீட்டில் தொடர்ந்து தங்குவதற்கு வசதிகள் இல்லையென்பதால் ராபட் பயஸ், ஜெயக்குமார், விஜயன் ஆகியோர் வீட்டில் மாறிமாறி தங்கியிருக்கிறார்.



குற்றம் சாட்டப்பட்ட பெண்கள் நீதி மன்றத்துக்கு அழைத்துச் செல்லப் படும் காட்சி. தீர்ப்புக்கு முன்னர்.

இவ்வாறு இவர் தங்கியிருந்தபோது சிவராசனைஅடிக்கடி சந்தித்துள்ளார். அத்தோடு சண்முகவடிவேலுவுடன் சென்று இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட எட்டாவது எதிரி ஆதிரையையும் அந்த இலங்கைத் தமிழர் வீட்டில் இரண்டொருமுறை சென்று சந்தித்திருந்தார்.

இவ்வடிப்படையில் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சிலரின் வீடுகளில் தங்கியிருந்து வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டு எடுக்க முயற்சித்தார் என்பதைத் தவிர ராஜீவ்காந்தி கொலைச் சதியில் இவர் நேரடியாக ஈடுபட்டார் என்பது தொடர்பாக பொலிஸ் தரப்பில் இவர்மீது இந்தக்குற்றச்சாட்டுக்களும் வைக்கப்படவில்லை.

91.05.01ல் இவர் சிவராசனுடன் ஒன்றாக தமிழகம் வந்தவர். இதனால் சாந்தனுக்கு ராஜீவ் காந்தி கொலை பற்றிய சதித்திட்டம் தெரிந்திருக்கலாம். இவ்வனுமானங்கள் சாந்தனுக்கு இச்சதியில் நேரடியான பங்கிருக்கலாம் என நீதிமன்றத்தினை அனுமானிக்கவைத்தது. இவ்வடிப் படையிற்தான் இவருக்கும் நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சாந்தன் 91ம் ஆண்டு ஏப்ரல் மாத கடைசிவாரத்தில் சண்முகவடிவேலுவுடன் சென்று ஒரு பயண முவகரிடம் பயணச் சீட்டு வாங்கினார். இதற்கு சண்முகவடிவேலு உதவிசெய்தார் எனக் குறிப்பிட்டு நீதிமன்றம் சண்முகவடிவேலுவுக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

சாந்தனின் குற்றப்பத்திரிகையில் அவர் 91.05.01 அன்று தான் இலங்கையிலிருந்து இந்தியா வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியெனில் அவர் எப்படி ஏப்ரல் 28ம் திகதி சண்முகவடிவேலுவுடன் சென்று பயண முகவரிடம் வெளிநாடு செல்ல பயணச் சீட்டு வாங்கியிருக்க முடியும்?

இந்த சந்தேகங்களை எல்லாம் நீதிமன்றம் கருத்தில் எடுக்காமலேயே சாந்தனுக்கு தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.

## விஜயானந்தன்

குற்றஞ்சாட்டப்பட்ட 4வது எதிரி

*இலங்கைத் தமிழர்*

யாழ்ப்பாணத்திலுள்ள நூலகம் ஒன்றின் பொறுப்பாளராக இருந்தவர். இவர் 91.05.01 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்தில் உள்ள கோடியாக்கரை எனும் கிராமத்திற்கு படகில் வந்தார். இந்தப்படகில் சிவராசன் மற்றும் எட்டுப்பேர் இந்தியாவிற்கு வந்ததாக பொலிஸ் தரப்பின் குற்றச்சாட்டு.

அந்த ஒன்பது பேரில் விஜயானந்தனும் ஒருவர் இவர் 91.05.06 வரை கோடியாக்கரையிலேயே தங்கிவிட்டு 91.05.07 அன்று சென்னை வந்து கோமளவிலாஸ் எனும் விடுதியில் தங்கினார்.

அவர் இவ்விடுதியில் 91.05.07 வரை தங்கியிருந்தார். இவர் இவ்விடுதியில் தங்கியிருந்தபோது தனது இலங்கை முகவரியைக் குறிப்பிடாது, தமிழ்நாட்டில் இராமநாதபுர மாவட்டத்தின் ஒரு கிராமத்திலுள்ள முகவரியைக் கொடுத்தே அங்கு தங்கியிருந்தார்.

91.05.09 அன்று சிவராசன் தனது மோட்டார்சைக்கிளில் இவரை அழைத்துக் கொண்டுபோய் வசந்தகுமார் என்பவருடைய வீட்டில் தங்கவைத்தார்.

அந்த வீட்டில் தங்கியிருக்கும் வேளை வசந்தகுமாரின் உதவியுடன் தான் பொறுப்பாகவிருக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள நூலகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக பல்வேறு வெளியீட்டாளர்களிடமும் புத்தகக்கடைகளிலும் 50000 இந்திய ரூபாய்கள் பெறுமதியான புத்தகங்களை வாங்கிவந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்வதற்காக கட்டுக்களாக கட்டிவைத்திருந்தார்.

அதற்குப்பின் 91.05.21 அன்று ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டபின் இவர் இலங்கை செல்வதற்கு படகு கிடைக்கவில்லை.

இவரால் இலங்கை செல்வதற்கு படகு ஏற்பாடு செய்யமுடியவில்லை. இவருடன் 91.05.01 அன்று படகில் வந்த சிவராசனையோ மற்றவர்களையோ சந்திக்க இவரால் முடியவில்லை. அதனால் இவர் இலங்கைக்குப் போகாது அங்கேயே தங்கிவிடுகிறார். இவ்வாறு இவர் இந்தியாவிலேயே தங்கிவிட்ட பிறகு பொலிஸ் விசாரணையின் போது 91.05.01 அன்று சிவராசன் வந்த படகில் அவருடன் வந்த எட்டுப்பேரும் யார், யாரெனப் பார்த்த போது விஜயானந்தன் என்பவரின் பெயருமிருப்பதால் இவரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

பின்னர், கைது செய்யப்பட்ட இவர்மீது ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக குற்றவாளியாகக் கருதப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. வழக்கின் முடிவில் நீதிமன்றத்தினால் இவருக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது.

இத் தனைக்கும் இவர் இந்தியா வந்து செய்த ஒரேயொரு காரியம் யாழ்ப்பாணத்திலுள்ள நூலகத் திற்கு வேண்டிய புத்தகங்களை வாங்கியது மட்டுமே. ஆனால், நீதிமன்றம் எந்த அடிப்படையில் இவருக்கு தூக்குத் தண்டனை வழங்கியது எனப்பார்த்தால்,

1. 01.05.91 அன்று இவர் சிவராசனுடன் சேர்ந்து படகில் இந்தியா வந்தது.

2. சென்னையில் கோமளவிலாஸில் இவர் தங்கியிருந்தபோது தனது இலங்கை முகவரியைக் குறிப்பிடாது இராமநாதபுர மாவட்டத்தில் ஒரு கிராமத்திலுள்ள முகவரியைக் கொடுத்தது.

இந்த இரு அம்சங்களுக்கும் முடிச்சுப் போட்ட பொலிஸார் இவர் 91.05.01 அன்று சிவராசனுடன் படகில் வந்த போதே இவருக்கு ராஜீவ் கொலை பற்றிய சதித்திட்டம் தெரிந்திருக்கிறது. அதனாலேயே இவர் கோமளவிலாஸில் தங்கியிருந்தபோது தனது இலங்கை முகவரியை குறிப்பிடாதுவிட்டார் என அனுமானித்து இவரும் கொலைச்சதியில் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டினர். நீதிமன்றம் இவருக்கு தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

ஆனால், இவர் கொலைச்சதியில் ஈடுபட்டார் என்பதற்கு எந்தவித ஆதாரங்களும் நீதி மன்றத்தில் அரசு தரப்பினால் சமர்ப்பிக்கப்படவுமில்லை. இவருக்கு இந்த சதித்திட்டம் பற்றி ஏற்கெனவே தெரிந்திருந்தது என பொலிஸ் தரப்பில் குற்றஞ்சாட்டப்படவுமில்லை.

பொதுவாக, அந்தக்காலத்தில் இலங்கையிலிருந்து நேரடியாக வராமல் படகில் வருபவர்கள் தமது யாழ்ப்பாண முகவரியை குறிப்பிட சாதாரணமாக தயங்குவது இயற்கை. அந்த அடிப்படையிற்தான் இவர்கூட தன் இலங்கை முகவரியை குறிப்பிடாது விட்டார். இதனை நீதிமன்றம் கவனத்திற்கொள்ளாது வெறும் அனுமானத்தின் பெயரில் இவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.

## சங்கர்

குற்றஞ்சாட்டப்பட்ட 5வது எதிரி.

*இலங்கைத் தமிழர்*

91.05.01 அன்று சிவராசனுடன் இந்தியா வந்த எட்டுப்பேரில் இவரும் ஒருவர். இந்த எட்டுப்பேரும் யார், யாரென இந்தியப் பொலிஸாரால் விசாரிக்கப்படுகின்றபோது இவரது பெயரும் இருந்தது.

இறுதியில் 91ம் ஆண்டு யூன் மாதம் 7ம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.



இவரும் சிவராசனுடன் இணைந்து தமிழகம் வந்து ராஜீவ் காந்தி கொலைச்சதியில் உடந்தையாக இருந்தார் என்பது இவர் மீதான பொலிஸ் தரப்புக்குற்றச்சாட்டு. இந்த குற்றச்சாட்டின் பெயரில் நீதிமன்றத்தில் எந்த சாட்சிகளும் விசாரணை செய்யப்படவில்லை. ஆனால் நீதிமன்றம் எல்லோருக்கும் போல் இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

## ரூபன்

குற்றஞ்சாட்டப்பட்ட 6வது எதிரி

*இலங்கைத் தமிழர்*

இவரும் 91.05.01 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்த படகில் சிவராசனுடன் வந்த எட்டுப்பேரில் ஒருவர். இவர் கோடியாக்கரையில் இறங்கி சென்னை வந்து தங்கியுள்ளார். ஒரு காலினை இழந்த இவர் 91.05.17 அன்று பொய்க் கால் பொருத்துவதற்காக ஜெய்ப்பூர் சென்றார். ஜெய்ப்பூருக்குச் சென்றபோது இவரை சிவராசன் ரயில் நிலையம் சென்று வழியனுப்பி வைத்தார்.

ஜெய்ப்பூர் சென்ற இவர் ஒரு விடுதியில் தங்கியுள்ளார். இவர் விடுதியில் நான்கைந்து நாட்கள் தங்கியிருந்த போது தான் ராஜீவ் காந்தி கொலைச்சம்பவம் நடைபெற்றது.

கொலைச் சம்பவம் நடைபெற்றதின் பின் இவர் தங்கியிருந்த அந்த விடுதியை விட்டு வேறொரு விடுதிக்குச் சென்று அங்கே ஏறத்தாழ ஒருமாத காலம் தங்கியிருந்தார்.

இந்த விடுதியின் பொறுப்பாளர் இவருக்கு உதவியாக இருந்து மருத்துவமனைக்குச் சென்று இவருக்கு பொய்க்கால் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் அத்தனையிலும் உறுதுணையாகவிருந்தார்.

இவர் முதல் தங்கியிருந்த விடுதிக்கும், மாற்றலாகி வந்து தங்கியிருந்த விடுதிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 50 அடி தான்.

இவர் கால் ஊனம் என்கிற பெயரில் இந்தியா வந்து, பொய்க்கால் பொருத்துவது என்ற பெயரில் சிவராசன் தங்குவதற்கு மறைவிடம் ஏற்பாடு செய்வதற்காக ஜெய்ப்பூர் சென்றார், அதனால்தான் இவர் ஒரு விடுதியிலிருந்து இன்னொரு விடுதிக்கு மறைமுகமாகச் சென்று தங்கியிருந்தார் என்பது இவர்மீதுள்ள பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு நான்கு நாட்கள் முன்னரே இவர் ஜெய்ப்பூர் சென்றுவிடுகிறார்.

ஜெய்ப்பூர் என்பது டில்லியிலிருந்து ஏறத்தாழ 150 மைல் தொலைவிலுள்ள இடம். சென்னையில் இருக்கின்ற சிவராசன் எப்படி ஜெய்ப்பூர் சென்றடைய முடியும்?

ஜெய்ப்பூரில் இவர் தங்கியிருக்கிற இடமே ஒரு விடுதி. அந்த இடத்தில் சிவராசன் மறைமுகமாக தங்குவதற்கு இவர் எப்படி இடம் ஏற்பாடு செய்ய முடியும் என்கிற சந்தேகம் எழுந்தாலும், நீதிமன்றம் இவர் பொய்க்கால் பொருத்துவது என்ற போர்வையில் சிவராசன் மறைமுகமாக தங்குவதற்கு ஒரு இடம் ஏற்பாடு செய்வதற்காகத்தான் ஜெய்ப்பூர் சென்றார் என முடிவு எடுக்கிறது.

அந்தக் காரணத்தினாற்தான் இவர் சிவராசனுடன் ஒரே படகில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறார். எனவே, இந்த சதித்திட்டம் பற்றி ஏற்கனவே தெரியும் என்று நீதிமன்றம் கருதி இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

## கனகசபாபதி

குற்றஞ்சாட்டப்பட்ட 7வது எதிரி

*இலங்கைத் தமிழர்*

இவர் இவ்வழக்கின் எட்டாவது எதிரி ஆதிரையுடன் தமிழகம் வந்தவர். அப்போது இவருக்கு 72 வயது. பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். கண்பார்வை குறைவு. டில்லியில் சிவராசன் பாதுகாப்பாக தங்குவதற்கு ஒரு வீடு ஏற்பாடு செய்வதற்கான பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது இவர் தொடர்பான பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு. 91.07.01 அன்று இவரும் ஆதிரையும் டில்லிக்குச் சென்று விடுதி ஒன்றிற்குச் சென்றவுடன் கைது செய்யப்பட்டார்கள்.

(தொடர்ந்து வரும்)

## அனைவரும் குற்றவாளிகளா?

இந்திய சஞ்சிகையான 'எக்னாமிக் டைம்ஸ்' ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பையடுத்து வெளியிட்ட ஆசிரியர் தலையங்கம்:

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரணதண்டனை விதித்ததானது ஒரு விவாதத்தைத் தூண்டி விட்டே தீரும். இந்த வழக்கு அரசியல் ரீதியில் உணர்ச்சிகரமான வழக்கு என்பதால்தான் எல்லோருக்குமே மரணதண்டனை என்ற மிகையான எதிர் வினை ஏற்பட்டுள்ளதா? மரணதண்டனைக்கு உள்ளாகும் அளவிற்கு குற்றவாளிகள் எல்லோருமே செயலூக்கமுள்ள சதிகாரர்களா?

மிக முக்கிய பிரமுகர்கள் (வி.ஐ.பி) சம்பந்தப்பட்ட தேர்வு செய்யப்பட்ட வழக்குகளில் மட்டுமே குற்றவியல் நீதி அமைப்பு தானாகவே முன்வந்து செயற்படுகிறதா?

சாட்சியமனைத்தும் நமக்கு கிடைக்கும் போது மட்டுமே ஒருவேளை இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியும்.

மரண தண்டனை மிக அரிதாகவே வழங்கப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் தீர்ப்பொன்றில் கூறியிருப்பதால் இந்தக் கொடூரமான குற்றத்தைப் புரிவதற்கும் குற்றவாளிகள் எல்லாருமே விருப்பத்துடன்தான் சதி புரிந்திருக்கின்றனர் என்று தடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி தனக்குத் தானே உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார் போலும்.

ஆனால் 26 பேர் சேர்ந்து நடத்திய ஒரு சதி பற்றிய இரகசியம் இந்தக் குற்றத்தைச் செய்வதற்கு முன்பேயே அம்பலமாகியிருக்காது என்பது சாத்தியமற்றது. அரசியல் புள்ளிகளைக் கொலை செய்யும் திட்டம் ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்துள்ள மிக மிக இரகசியமான விஷயம்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இந்தக் குற்றத்தை நிகழ்த்துவதில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேர் எல்லாருமே விருப்பத்துடன் கூட்டுச்சதி புரிந்தனர் என்று சிறப்பு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும் போலும். அப்படியாயின் சிறப்பு நீதிமன்றம் கீழ்க்கண்டவற்றை நிரூபித்திருக்க வேண்டும்.

(அ) கொலை செய்யப்படப் போகிறவர் யார் என்பதைக் குற்றவாளிகள் அனைவருமே அறிந்திருந்தனர்.

(ஆ) இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் அவர்கள் எல்லாருமே ஒளிவுமறைவில்லாமல் பங்கேற்றனர்.

இந்த இரண்டு விஷயங்களுமே நீதிமன்றத்தால் நிறுவப்பட்டிருந்தால்தான் குற்றவாளிகள் சதியில் செயலூக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று கூற முடியும். இந்தத் தீர்ப்பில் நீதிமன்றம் சிக்கலான அம்சங்களைப் பரிசீலிக்கத் தேவையில்லை என்று கருதியிருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, கொலைகாரர்களாக ஆகக்கூடியவர்களைத் தங்கள் வீட்டில் இரகசியமாகத் தங்க வைத்தவர்கள் ஒன்று அச்சத்தின் காரணமாகவோ அல்லது கொலை செய்யப்படப் போகிறவர் யார் என்பதை அறியாமலேயோ அப்படிச் செய்திருக்கலாம்.

இந்தக் கேள்விகள் யாவும் தாராளவாதச் சிந்தனையுடைய பல்வேறு தனி நபர்களாலும் அமைப்புகளாலும் எழுப்பப்பட்டு வருகின்றன. ஏனெனில், ஒரு சதிச்செயலை நிறைவேற்றும் பொருட்டு 26 பேர் மீது ஒரு கணிசமான காலத்திற்கு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருப்பது என்பது அதிலும் குறிப்பாக தேச எல்லைகளுக்கு அப்பாலிருந்து சதிகாரர்களைத் திரட்டிச் சேர்க்கையில்- (திட்டம் தீட்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு) அபாயகரமானது.

சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகையான எதிர்வினையாக இருக்கும் பட்சத்தில், இத்தீர்ப்பு எதிர்கால பயங்கரவாதச் செயல்களுக்கான வித்துக்களை ஊன்றக்கூடும்.

போதுமான அளவிற்கு ஆத்திரமூட்டப்பட்ட, விரக்தியடைந்த ஒரே ஒரு தனிநபர் மட்டுமே ஒரு பயங்கரவாதத் தாக்குதலைச் செய்வதற்கு போதும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

www.padippakam.com

# சாதகமாக மாறிவரும் சர்வதேசச் சூழல்!

## அலசுவது - இராஜதந்திரி

ஏப்ரல் 25ல் இலண்டனில் ஈழத் தமிழர் ஒன்றுகூடல் ஒன்று நிகழ்ந்துள்ளது. இந் நிகழ்வில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மிகவும் எழுச்சிகரமாக இந் நிகழ்வு அமைந்திருந்ததாக அங்கிருந்து கிடைத்துள்ள தகவல்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

நமது நிலம், நமது மொழி, நமது உரிமை, நமது விடுதலை ஆகிய நான்கு முழக்கங்களுடன் இந்த ஒன்று கூடல் நடைபெற்றுள்ளது.

குறுகிய கால அறிவிப்போடு ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளிநாடொன்றில் ஒன்று கூடியமை ஆச்சரியமானதேயாகும்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் சமீபகாலமாக விழிப்புணர்வும், எழுச்சியும் அதிகரித்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

இதனை அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களும் நன்கு அவதானித்து வருகின்றன.

இலண்டனில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஒன்று கூடலைப் பற்றி கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகள் சில பெரும் புரளிகளை கிளப்பியிருந்தன.

அவற்றில் அரச கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரை ஆங்கிலப் பத்திரிகை முன்னணியில் நின்றது.

இலண்டனில் தமிழ் ஈழப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டதாக அப்பத்திரிகை செய்திவெளியிட்டிருந்தது.

இது தவறான தகவலின் அடிப்படையில் வெளியான செய்தியாக தெரியவில்லை.

திட்டமிட்ட சில நோக்கங்களோடு வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது.

பிரிட்டன் அரசுக்கு இராஜதந்திர ரீதியில் தர்மசங்கடத்தை ஏற்படுத்தி அங்குள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்கள்மீது அதிருப்தியை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்திருக்கலாம்.

இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் தமக்கு இராஜதந்திர சிக்கல்களை ஏற்படுத்த முனைவதாக பிரிட்டிஷ் அரசு நினைத்தால், அவற்றுக்கு நெருக்கடியை ஏற்படுத்த முனையும் என்றும் நினைத்திருக்கலாம்.

பிரிட்டனில் புலிகளை தடை செய்ய வேண்டும் என்று இலங்கை வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் பலமுறை நேரில் சென்று நெருக்குதல் கொடுத்திருந்தார்.

தமது நாட்டு சட்ட திட்டங்களுக்கு மாறாக புலிகள் நடக்காதவரை அவர்களை தடை செய்ய இயலாது என்று பிரிட்டிஷ் அரசு திட்டவட்டமாக கூறிவிட்டது.

இந்நிலையில் பிரிட்டனில் இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் வரம்பு மீறுகின்றன. அங்கிருந்தபடி தமிழீழப் பிரகடனம் செய்து இரு நாடுகளது உறவையும் கெடுத்திருக்கின்றன என்று பிரிட்டிஷ் அரசை நம்பவைக்கவே தவறான செய்திகள் தாராளமாக பிரசுரிக்கப்பட்டிருந்தன.

பிரிட்டனில் தமிழீழப் பிரகடனம் என்று செய்தி வெளியிட்டால், கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் புலிகளுக்கு பாதகமான அறிக்கையை வெளியிடக்கூடும் என்றும் அச் செய்திகளின் பின்னணியில் நின்றவர்கள் எதிர்பார்த்திருக்கலாம்.

சட்டத்தரணி குமார் பொன்னம்பலம்மீதும் பேரினவாத சக்திகளது கோபம் திரும்பியிருக்கிறது.

இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளுக்கு சென்றும் தமிழ் பேசும் தரப்பின் கருத்துக்களை அவர் கூறிவருவதால் அவரது குரலை ஒடுக்கவும் எண்ணியுள்ளனர்.

சமீபத்தில் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்ட குமார் பொன்னம்பலம், பத்திரிகையாளர் மாநாடுகளையும் நடத்தியிருந்தார்.

சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டும் இலங்கைத் தமிழர் நிலை குறித்து உரையாற்றியுள்ளார்.

எனவே குமார் பொன்னம்பலத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் விதமாக அவர்மீது பொய்யான புகார் ஒன்றை அரச பத்திரிகை சுமத்தியிருந்தது.

இலண்டனில் ஈழப் பிரகடனம் செய்யப்பட்டதாகவும், அதில் குமார் கலந்துகொண்டு உரையாற்றினார் என்றும் செய்தி வெளியிட்டிருந்தன.

பிரகடனம் நிகழாதது ஒருபுறமிருக்க, ஈழத் தமிழர் ஒன்றுகூடல் நிகழ்வில் குமார் பொன்னம்பலம் உரையாற்றவும் இல்லை.

மொத்தத்தில் தமிழ்பேசும் தரப்பை சர்வதேச அரங்கில் நாதியற்றவர்களாக தனிமைப்படுத்துவதே பேரினவாத சக்திகளது வெளிநாட்டுக் கொள்கையாகும்.

உள்நாட்டில் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் தமிழ் பேசும் தரப்பு முழுவதையும் பலவீனமாக்கும் இராணுவத்தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல சர்வதேச அரங்கிலும் புலிகளை தடை செய்ய கோரிக்கை விடுவது என்ற போர்வையில் தமிழ் பேசும் தரப்பின் குரலை ஒடுக்குவதற்கான முயற்சிகளே நடைபெற்று வருகின்றன.

முன்பிருந்த ஆட்சியாளர்கள் போலன்றி, இன்றைய ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்கிலும் தமிழ் பேசும் தரப்பை தனிமைப்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.

இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ்பேசும் தரப்புக்கு ஏதாவது ஒரு சலுகை காட்டுவதாக அறிவிக்கிறார்கள் என்றால், அதன் நோக்கமும் வெளியுலகை திருப்திப்படுத்துவதற்கான தந்திரமாக மட்டுமே அமைந்துள்ளது.

இங்கு தமிழர்கள் நியாயமாக நடத்தப்படுகிறார்கள் என்று காண்பிப்பதன்மூலம், இங்கு தலையிட அவசியம் இல்லை என்று வெளியுலகை நம்பவைக்கும் தந்திரமாகவே அவை அமைகின்றன.

பொதியை முன்வைத்ததும், அதனை பெரும்பாலானோர் ஏற்றுள்ளதாக கூறிவருவதும் அத்தந்திரத்தின் சிகரமாக அமைந்திருக்கிறது.

எனவே, ஆட்சியாளர் முன்வைத்துள்ள அரைகுறைப் பொதிகூட சர்வதேச அரங்கில் தமிழ் பேசும் தரப்புக்கான அனுதாபம் உருவாகாது தடுக்கும் சதியில் ஒரு பிரதான அங்கமேயாகும்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அந்த நாடுகளில் புகலிடம் தேடியுள்ள முன்னாள் ஈழப் போராளிகளுக்கு ஆசை வலைகளை வீசியுள்ளன.

அந்தந்த நாடுகளில் தமிழர் அமைப்புக்கள் மற்றும் புலிகளது நடவடிக்கைகள் பற்றி இந்த முன்னாள் போராளிகள் மூலமே தகவல்கள் திரட்டப்படுகின்றன.

இத்தகவல்கள் அந்தந்த நாட்டு பொலிஸ் உளவுத் துறைகளோடும் பகிர்ந்து கொள்ளப்படுகிறதாம்.

குறிப்பிட்ட நாடுகளில் புலிகளுக்கு எதிரான பிரசாரம் செய்வதற்கும் முன்னாள் போராளிகள் சிலருக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஏனைய தமிழ் கட்சிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மட்டுமன்றி, புலிகளில் இருந்து விலகிய சிலரும் வெளிநாடுகளில் ஆட்காட்டிகளாக செயற்பட்டு வருகின்றனர்.

கனடா உளவுத்துறையும் புலிகளது முன்னாள் உறுப்பினர்கள் சிலரை பணம் கொடுத்து பயன்படுத்தி வந்தது. இவர்கள்தான் கனடாவில் புகலிடம் தேடிய தமது முன்னாள் சகாக்கள் பற்றிய தகவல்களை கொடுத்திருந்தனர்.

எனினும் ஒப்பீட்டளவில் ஏனைய இயக்கங்களது முன்னாள் உறுப்பினர்களே அதிகமான ஆட்காட்டிகளாக உள்ளனர்.

இவர்கள் தவிர, தம்மை தீவிர புலி எதிர்ப்பாளர்களாக காண்பித்துக் கொண்டிருக்கும் குழுக்களும் உள்ளன. இவற்றில் உள்ள பலர் புலிகள் ஏனைய இயக்கங்களை தடை செய்ய முன்பாகவே, தமது இயக்க தலைமைகளால் போராட்டத்தை நடத்த முடியாது என்று கூறிவிட்டு வெளிநாடுகளுக்கு சென்றவர்களாவர்.

அவர்களும் தாம் வெளிநாடுகளுக்கு சென்றதுக்கு புலிகளின் தடைதான் காரணம் என்று இன்று கூறத் தலைப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது இயக்கங்களைவிட்டு சென்றபோது இருந்ததைவிட தற்போது மிக மோசமான நிலையில், கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போன்றே தமிழ்க் கட்சிகள் பல காணப்படுகின்றன.

அவ்வாறிருந்தும் முன்பைவிட தீவிரமாக அக்கட்சிகளை இவர்கள் தற்போது ஆதரித்து பேசுவதும், அவற்றின் சரணடைவுகளை நியாயப்படுத்த முனைவதும் கவனிக்கத்தக்கதாகும்.

இத்தகைய சக்திகளது நிலைப்பாடும் பேரினவாதிகளது நிலைப்பாடும் ஒரே விதமாக இருப்பதுதான் தற்போதைய துயரம் தோய்ந்த உண்மையாகும்.

இலங்கையில் ஆட்சியாளரது ஒடுக்குமுறைகள், மனித உரிமை மீறல்கள், போன்றவற்றுக்கு எதிராக குரல் கொடுப்பதை புலிகளுக்கு ஆதரவான செயற்பாடுகள் என்றே இவர்களும் கருதத் தலைப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போன கொடுமை முதற்கொண்டு, மக்களை பட்டினி போடும் கொடூரம் வரையான எந்தப் பிரச்சனை தொடர்பாகவும் இவர்கள் தாம் புகலிடம் தேடியுள்ள நாடுகளில் இருந்து இதுவரை ஒரு முறைகூட குரல் எழுப்பியதில்லை.

இத்தகைய சக்திகளின் நிலைப்பாடுகள் தமிழ் பேசும் தரப்புக்கு எதிரான சர்வதேச சதிக்கு துணைபோவதாகவே அமைந்திருக்கின்றன.

இவ்வாறான நிலைப்பாடுகளையும் மேற்கொண்டபடி, உலக ஆதரவு தமிழ் பேசும் தரப்புக்கு இல்லாமல் போய்விட்டது என்று இச் சக்திகள் நீலிக் கண்ணீர் வடிப்பது நகைப்புக்கிடமானதாகும்.

பூனை கண்களை மூடிக்கொண்டு உலகம் இருண்டு கிடக்கிறது என்று நினைத்துக் கொள்ளுமாம். அதுபோன்றே இவர்களது கூற்றுக்களும் விளங்குகின்றன.

இன்று உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பல தமிழ் பேசும் தரப்புக்கு நம்பிக்கை தரக்கூடியதாகவும், சாதகமானதாகவுமே இருக்கின்றன.

கொசோவோ பிரச்சனையில் அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகள் தலையிட்டுள்ளன. இப்பிரச்சனையில் தனது சுயநலனுக்காக அமெரிக்கா தலையிட்டுள்ள போதிலும், தனது தலையீட்டுக்காக அமெரிக்கா கூறிவரும் காரணங்கள் தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமானவையாகும்.

கொசோவோவில் இனப்படுகொலைக்கு எதிராக தலையிட்டுள்ளதோடு, கொசோவோவுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குமாறும் அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

கொசோவோவோடு ஒப்பிட்டால் இலங்கையில் இனப் பிரச்சனையும் அதன் விளைவுகளும் பாரதூரமானவையாகும். எனவே கொசோவோ பிரச்சனையில் மூன்றாம் தரப்பு தலையிடுவது நியாயமானால், இலங்கைப் பிரச்சனையில் மூன்றாம் தரப்பு தலையிடுவதற்கு அதனைவிடப் பல நூறு மடங்கு நியாயம் இருக்கிறது.

(இங்குள்ள பட்டியலைப் பார்த்துக் கொள்க)

அது மட்டுமல்ல, இந்தோனேசியாவில் கிழக்கு திமோர் தனியாக பிரிந்து செல்வதா, இல்லையா, என்று வாக்கெடுப்பு நடத்துமளவுக்கு நெருக்கடியும் சமீபத்தில் தான் உருவானது.

இத்தகைய சர்வதேச சூழலை பயன்படுத்தி சர்வதேச அரங்கில் பேராதரவை திரட்ட வேண்டியது தமிழ் பேசும் தரப்பின் முயற்சியிலேயே தங்கியுள்ளது.

## யூகோஸ்லாவியாவில் கொசோவோ இலங்கைத்தீவில் வடக்கு–கிழக்கு

| | | |
|---|---|---|
| நிலப்பரப்பு | கொசோவோ (செர்பியாவில் 1/5 பங்கு) | தமிழர் நிலப்பகுதி (சிறீலங்காவின் 1/3 பங்கு) |
| நிலங்கள் இணைக்கப்பட்டது | செர்பியாவுடன் 1989ல் கொசோவோ இணைக்கப்பட்டது. | 1878ல் தமிழ் இராச்சியம் சிறீலங்காவுடன் ஒன்று கலந்தது. |
| இன முரண்பாடு | செர்பியர்களும் கொசோவியர்களும் | சிங்களவர்களும் தமிழர்களும் |
| சனத்தொகை | கொசோவோவில் 90%மானவர்கள் அல்பேனியர்கள் | வடக்கு-கிழக்கில் 90% மானவர்கள் தமிழர்கள். |
| அதிகாரம் செலுத்துவோர் | செர்பியாவைச் சேர்ந்த செர்பியர்கள் 1 கோடியே 10 இலட்சம் பேரினால் கொசோவோவிலுள்ள கொசோவோ அல்பேனியர்கள் ஆளப்படுகின்றார்கள். | சிறீலங்காவில் வாழும் 1 கோடியே 80 இலட்சம் சிங்களவர்களால் தமிழ் மக்கள் ஆளப்படுகின்றார்கள். |
| இராணுவக் கட்டமைப்பு | 100% செர்பியர்கள் | 99% சிங்களவர்கள் |
| திட்டமிட்ட குடியேற்றங்கள் | செர்பியர்களால் கொசோவோ நிலப்பகுதி அபகரிக்கப்பட்டுள்ளது. | சிங்களவர்களால் தமிழர் தாயகம் அபகரிப்பு. |
| இராணுவ ஆக்கிரமிப்பு | கொசோவோவில் 40,000 செர்பியப் படைகள் | வடக்கு-கிழக்கில் 150,000 சிறீலங்காப் படையினர் |
| ஆயுதப்போராட்டம் தீவிரம் | மார்ச் 1998 | ஜூலை 1983 (15 நீண்ட ஆண்டுகள்) |
| விடுதலைப் போராட்ட இயக்கங்கள் | கே.எல்.ஏ. (கொசோவோ விடுதலை இராணுவம்) | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| பொருளாதாரத் தடை | வலியுறுத்தப்படவில்லை. | 1990 முதல் அமுலில் உள்ளது. |
| கொல்லப்பட்ட பொதுமக்கள் | 350க்கும் மேற்பட்டோர் (1999 மார்ச்வரை) | தமிழர்கள் 60,000க்கும் மேற்பட்டோர். |
| காணாமல் போனோர் | அறிவிக்கப்படவில்லை | 3 வருடங்களில் 1000ற்கு மேற்பட்டோர். |
| மனிதப் புதைகுழிகள் | அறிவிக்கப்படவில்லை | யாழ்ப்பாணத்தில் மட்டும் 3 கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. |
| அகதிகளாக இடம்பெயர்வு | ஒரு தடவை இடம்பெயர்வில் 2 இலட்சத்து 50 ஆயிரம். | பல இடம் பெயர்வுகளால் 10 இலட்சம் பேர் |
| சொத்து அழிப்பு | தெரியவில்லை | 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| மதவழிபாட்டு ஸ்தலங்கள் தாக்கப்பட்டமை | அறிவிக்கப்படவில்லை | 1900 கோயில்கள்/ தேவாலயங்கள் விமானக் குண்டுவீச்சால் சேதம். |

இவ்வறிக்கை 1990ல் ஸ்தாபிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான தமிழர் மையத்தினரால் ஐக்கியநாடுகள் பொதுச் சபையின் மனித உரிமை ஆணையத்திற்கு வழங்கப்பட்ட மனுவில் இடம்பெற்றுள்ளது. சமீபத்தில் பலியான கொசோவோ மக்கள்தொகை இதில் சேரவில்லை. 22 மார்ச் –30 ஏப்ரல், 1999– 55வது கூட்டத்தீர்மானம்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

வரதர் இலங்கை வந்ததும் எம்.பி. பதவி கிடைக்கப்போகிறது. அமைச்சர் பதவி கிடைக்கப் போகிறது என்று செய்திகள் பிரபலமாக அடிபட்டன.

அவ்வாறான எப்பதவியும் கிடைக்கப் போவதில்லை என்று 'முரசு' திட்டவட்டமாக செய்தி வெளியிட்டது.

இப்போது அச் செய்தி ஊர்ஜிதமாகிவிட்டது.

அரசே கொடுத்தால்கூட அதனை பெறுவதற்கு வரதர் தயாராக இல்லை என்று தெரிகிறது.

அரசில் சேர்ந்து அமைச்சர் பதவி பெறும் தமிழர்கள் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டே வந்துள்ளனர். எனவே அமைச்சர் பதவிகளோ, அரசால் தரப்படும் எம்.பி பதவியோ அரசியல் எதிர்காலத்திற்கு ஆபத்தானது என்பது வரதருக்கு தெரிந்திருக்கும்.

ஆனாலும் ஜனாதிபதி சந்திரிக்கா உட்பட அரசில் உள்ள முக்கிய அமைச்சர்கள் பலர் வரதரை முன்னுக்கு கொண்டுவர விரும்புகின்றனர்.

ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந்தபோதே பொது ஜன முன்னணியுடன் நட்பாக இருந்த கட்சி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அப்படியிருந்தும் பொதுஜன முன்னணி பதவிக்கு வந்த பின்னர் இவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

போனால் போகிறது என்று சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவி வழங்கப்பட்டது.

நியாயமாகப் பார்த்தால் இந்த பதவியை ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஏற்றிருக்கக்கூடாது. ஈழம் கேட்டு பின்னர் மாகாணசபை ஆட்சி கேட்ட கட்சிக்கு கிடைத்தது மீன்பிடி ஆலோசகர் பதவி.

பச்சையாகச் சொன்னால் எலும்புத்துண்டு.



இதனைத் தவிர வேறு உதவி எதனையும் பொ.ஜ.மு., அரசு ஈ.பி.ஆர்.எல்.எஃப்.புக்கு செய்து தரவில்லை.

சுரேஸ் பிரேமச்சந்திரன் கட்சியை நடத்த இலாய்க்கு அற்றவர். எல்லாவற்றையும் கெடுத்து விட்டார் என்று அரசின் தலைமையில் உள்ள 'சக்தி' பொருந்தியவரே தன்னைச் சந்தித்த சிலரிடம் அதிருப்திப்பட்டாராம்

ஈ.பி.ஆர்.எல்.எஃப் என்பது இப்போதும் இருக்கிறதா? எத்தனைபேர் இருக்கிறார்கள்? மிஸ்டர் சுரேஸ் தனது தேவைகளுக்காக கட்சி இருப்பதாக காட்டிக் கொள்கிறாரா? என்று மங்களகரமான அமைச்சர் ஒருவர் கிண்டல் பண்ணியிருந்தார்.

அந்த அமைச்சர்தான் பின்னர் வரதருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தொடர்பாளராக இருந்த தாகக் கூறப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்கு மறுபடி புத்துயிர் கொடுக்கக்கூடியவர் வரதர்தான். ஈ.பி.ஆர்.எல்.எஃப்.க்கு ஏதாவது உதவி செய்வது என்றால் வரதர் மூலமே அந்த உதவியைச் செய்யலாம் என்று அம்மணியும் கூறிவிட்டாராம்.

### ஜெயலலிதாவுடன் ஜனாதிபதி சந்திரிக்கா பேரம் பேசினாரா?

உடனடியாக பகிரங்க சந்திப்பு நடந்தால் எதிர்க்கட்சி ஏதாவது பிரச்சனை கிளப்பலாம் என்பதால்தான் ஜனாதிபதி, வரதர் சந்திப்பு தள்ளிப் போடப்பட்டதாம்.

ஆனாலும் தேவையான பாதுகாப்பும், வாகனங்களும் ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே வழங்கப் பட்டுள்ளன. அரச பாதுகாப்பே வழங்கப்பட்டுள்ளது.

தொலைபேசி மூலம் வரதருடன் தொடர்பு கொண்டு சக்திமிக்கவர் நலம் விசாரித்ததோடு, பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளனவா? என்றும் வினாவினாராம்.

இதற்கிடையே கடந்த மார்ச் மாதம் இந்தியாவுக்கு இரகசியமாக சென்று முக்கிய அரசியல் பிரமுகர்கள் சிலரையும், அரச அதிகாரிகள் சிலரையும் சந்தித்துவிட்டு ஏப்ரல் மாத இறுதியில் நாடு திரும்பியுள்ளார் வரதர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.மீது இந்திய வெளியுறவுத்துறை நம்பிக்கை இழந்திருந்தது.



சுரேஸ் இந்தியா சென்றபோதும் சந்திக்க மறுத்து விட்டனர்.

வரதர் மறுபடி அரசியலில் குதித்ததும் இந்திய வெளியுறவுத் துறையும் மறைமுகமாக ஊக்குவித்துள்ளதாம். நேரில் சில விஷயங்களைப் பேச வருமாறு அழைப்பு விடுத்ததும் அவர்கள்தானாம்.

பிரசாரத்திலும், அரசியல் காய் நகர்த்தல்களிலும் வரதர் புகுந்து விளையாடுவார் என்று இலங்கை அரசும் இந்தியத் தரப்பும் வரதரை நம்புகின்றன.

அடுத்த தேர்தலில் தமிழ் மக்களிடையே வாக்குகளை கவர வடக்கு கிழக்கில் வரதரைப் பயன்படுத்தும் எண்ணம் அரச தரப்புக்கு இருக்கக்கூடும்.

இறந்து கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்கு ஒரு தலைவர் கிடைத்தார். அரசுக்கும் நண்பர் ஒருவர் கிடைத்திருக்கிறார். தமிழ் மக்களுக்கு...?

★★★

தமிழக ஜூனியர் விகடன் சஞ்சிகையில் வாஜ்பேய் அரசு கவிழ முன்பாக வெளியான செய்தி.

"ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் மத்திய பாதுகாப்பு மந்திரியாக தொடரக்கூடாது என்பதில் ஜெயலலிதா இந்த அளவுக்கு உறுதி காட்டுவது ஏன் என்பதற்குப் பின்னால் ஒரு இரகசியம் இருக்கிறது. இதற்கு பின்னால் இலங்கை அதிபர் சந்திரிக்காவின் திடுக்கிடும் பங்கும் இருக்கிறது.

அது எப்படி?

சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவதில் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் முழு மூச்சாக இருக்கிறார். அந்த திட்டம் மட்டும் நிறைவேறிவிட்டால், பல முக்கிய நாடுகளது சரக்குக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு செல்லாமல், ராமேஸ்வரம் வழியாகப் பாக்கு நீரிணையில் புகுந்து போய்விடும்.

இதனால் கொழும்பு துறைமுக மதிப்பு உலக அளவில் அடிபடும். எனவே சேது சமுத்திர திட்டமே வராமல் தடுக்கும் முயற்சிகளில் இறங்கினார் சந்திரிக்கா. அதன் அங்கமாக ஜெயலலிதாவின் உதவியையும் நாடினார். பதிலுக்கு இலங்கை வழியாக ஜெயலலிதாவுக்கு ஆகக்கூடிய உதவிகளை முடித்துக் கொடுப்பதாகவும் பேரம் பேசப்பட்டது." இச் செய்தியை பாரதிய ஜனதாவின் முக்கிய பிரமுகரான வெங்கையா நாயுடு கூறியதாகவே ஜூனியர் விகடன் குறிப்பிட்டிருக்கிறது.


படிப்பகம்

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 60

**கடந்தவாரம்**

**உகண்டாவின் தலைநகரான கம்பலாவுக்கு அண்மையில் திறந்த வெளி சித்திரவதை முகாம் ஒன்று நிறுவப்படுகிறது. மக்களை மிரட்டுவதற்காகவே இந்த ஏற்பாடு. அங்கு கைதிகள் இடையே மோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கிறார்கள். பல கைதிகள் பலியாகிறார்கள். 'கக்வா' இனத்தவரை தவிர வேறு எந்த இனத்தவரையும் அமீன் நம்புவதில்லை. அதனால் உகண்டாவில் குடியேறிய நுபிய இனத்தவரையும், சூடானியரையும் தனது படைகளில் சேர்த்துக் கொள்கிறான்.**

**இனி...**

# இடி அமீன்

நுபிய இனத்தவரான அந்த மேஜருக்கு பெண் துணையில்லாமல் தூக்கம் வராது. பல பெண்களை அவன் வேட்டையாடி விருந்தாக்கியிருக்கிறான்.

அவர்கள் அனைவரும் வேற்று இனப் பெண்கள். இப்போதுதான் அமீனின் 'கக்வா' இனப் பெண் ஒருத்தியை முதன் முதலாகப் பிடித்து வந்திருந்தான்.

'கக்வா' இனப் பெண்கள் கவர்ச்சிகரமானவர்கள். காந்தமென கவர்ந்திழுப்பார்கள்.

அமீனின் இனத்தவரை தொடுவதற்கு எவருக்குமே துணிச்சல் வந்ததில்லை. நுபிய இன மேஜருக்கு கெட்ட நேரம். காமம் அவன் புத்தியைப் பேதலிக்கச் செய்துவிட்டது.

'கக்வா' இனப் பெண்களை அமீன் மட்டுமே தொட முடியும். அதுவும் மிகவும் அழகான பெண்ணாக யாராவது கண்ணில் பட்டுவிட்டால்தான் அமீனின் கை நீளும். மற்றப்படிக்கு ஏனைய இனப் பெண்களைத் தான் அமீனும் வேட்டையாடுவான்.

'நுபிய மேஜர்' அவளை வக்கிரமாகக் கையாண்டான். அவள் மூர்ச்சையாகும் வரை மூர்க்கமாக நடந்துகொண்டான்.

தங்கள் இனப் பெண்ணை நுபிய மேஜர் ஒருவன் பலாத்காரம் செய்வதா? என்று 'கக்வா' இனச் சிப்பாய்களுக்கு இரத்தம் கொதித்தது.

தங்கள் மேஜரது செயல் பற்றி உடனடியாக அமீனுக்கு தகவல் எட்டச் செய்தார்கள்.

இந்த விஷயம் வெளியே தெரிந்தால் 'கக்வா' இனத்தினர் மத்தியில் தனக்குள்ள ஆதரவும் தகர்ந்து போகுமே என்று சினந்தான் அமீன்.



"அந்த வேசி மகனை என்ன செய்கிறேன்பார்!" என்று கத்திக்கொண்டே, தன் மெய்க்காப்பாளர் பட்டாளத்துடன் நுபிய மேஜர் பொறுப்பாக இருந்த முகாமுக்குப் புறப்பட்டான்.

அமீனும் அவனது பட்டாளமும் முகாமுக்கு சென்றடைந்தபோது, 'கக்வா' இன சிப்பாய்கள் குழுமி நின்று மேஜரைப் பற்றி புகார்களை அடுக்கினார்கள்.

அந்த முகாமில் நுபிய இன சிப்பாய்களும் இருந்தனர். அவர்களுக்கு பெரும் தர்மசங்கடமாக இருந்தது.

அவர்களை தன்னருகே அழைத்த அமீன்: **"புகலிடம் தேடி வந்த உங்கள் இனத்துக்கு அடைக்கலம் தந்தவர்கள் நாங்கள். உங்களை படையில் சேர்த்ததோடு, பதவிகளும் தந்திருக்கிறேன். மேஜர் நன்றி மறந்து என் இனத்திலேயே கைவைத்து விட்டான். அதனால் அவனுக்கு தண்டனை கொடுக்கப் போகிறேன்!"** என்று கூறினான்.

எங்கே தங்களையும் துரத்தி விடுவானோ என்று பயந்து கொண்டிருந்த சிப்பாய்களுக்கு அமீன் தங்களிடம் பேசியதே பூரண திருப்தியாக இருந்தது.

இத்தனை சங்கதிகள் வெளியே நடந்து கொண்டிருக்க, அவை எதுவுமே தெரியாது கட்டிலில் அவளுக்கு மேலே பரவிக்கிடந்தான் மேஜர்.

மூர்ச்சையாகிக் கிடந்த அவள்மீது பிணத்தின்மீது கிடப்பதுபோல கிடந்து தூங்கிப் போனான்.

அறைக்கதவு தட்டப்பட்டதும் தூக்கக் கலக்கத்தோடு: "எவனடா இந்த நேரத்தில் தொல்லை கொடுப்பது? முட்டாள்கள் முழு முட்டாள்கள்!" என்று திட்டியபடி எழுந்து வந்தான்.

கதவைத் திறந்ததும் எதிரே அமீனைக் கண்டதும் நம்பமுடியாமல் திகைப்பில் ஆழ்ந்தான்.

கண்களைக் கசக்கிக்கொண்டு மறுபடி உற்று பார்க்கும்போது, அவனது மார்பில் கைவைத்து பின்னால் தள்ளி விட்டு, அறைக்குள் புகுந்தான் அமீன்.

கட்டிலில் வெற்றுடம்பாக மூர்ச்சையாகிக் கிடந்தாள் அந்தப்பெண்.

அமீன் உள்ளே நுழைந்து கட்டிலருகே சென்று பார்த்தபோது, மேஜருக்கு போதை சட்டென்று இறங்கியிருந்தது. அப்போதுதான் விபரீதம் மூளையில் உறுத்தியது.

என்ன செய்யலாம்? அமீனிடம் எப்படி மன்னிப்புக் கேட்கலாம் என்று அவன் முடிவு செய்வதற்குள், அமீனின் மெய்காப்பாளர்களால் அவன் தரதரவென்று வெளியே இழுத்துச் செல்லப்பட்டான்.

முகாமின் பயிற்சி மைதானத்தில் நிர்வாணமாக மேஜரை நிறுத்தி வைத்தனர். பயிற்சி மைதான இரவு விளக்குகள் ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன. சிப்பாய்கள் சூழ நின்றார்கள்.

அமீனின் குரல் நிசப்தத்தைக் கிழித்து ஒலித்தது.

**"இந்த மேஜரின் குற்றச் செயலை நான் கண்ணால் பார்த்திருப்பதால், இராணுவ நீதி மன்ற விசாரணைக்கு அவசியம் கிடையாது. அதனால் இப்போதே, இந்த நிமிடமே இவனை விடுதலை செய்கிறேன்!"** என்று அமீன் கூறியதும் சிப்பாய்கள் முகங்களில் கலவரம்.

அமீன் அவர்களது கலவரத்தை இரசித்துச் சிரித்தான்.

"நான் விடுதலை கொடுப்பதாகக் கூறியது, இங்கிருந்தல்ல, இந்த உலகத்தில் இருந்து..." என்று சிரித்தான். சிரித்த மறுகணமே, மேஜரின் உடலை துப்பாக்கிக் குண்டுகள் சல்லடை போட்டன.

அமீனின் மெய்காப்பாளர்கள் நான்கு பேரின் துப்பாக்கிகள் ஒரே நேரத்தில் குண்டுகளைக் கக்கியிருந்தன.

மேஜரின் தலையை வெட்டி நகரின் முக்கிய பகுதியில் போடுமாறும் அமீன் கட்டளை பிறப்பித்தான்.

''கக்வா' இனப் பெண்ணை பலாத்காரம் செய்த இராணுவ மேஜருக்கு மரண தண்டனை' என்று செய்திகள் வெளியாகின.

மேஜரின் தலையை வெட்டிப் போட்ட செய்தியும் நாடெங்கும் பரவியது.

'கக்வா' இன மக்களிடம் அமீனின் செல்வாக்கு இச் சம்பவத்தின் பின்னர் மேலும் ஒருபடி உயர்ந்தது.

அதேசமயம் உகண்டாவின் ஏனைய இன மக்களிடம் அதிருப்தி மேலோங்கியது.

பிற இனப் பெண்களை வேட்டையாடும் படையினருக்கும், அதிகாரிகளுக்கும் பதவி உயர்வும், சலுகைகளும் வழங்கப்படுகிறது. 'கக்வா' இனப்பெண் வேட்டையாடப்பட்டதும் அமீனுக்கு இரத்தம் கொதிக்கிறது.

## தருவது ரசிகன்

இனப் பாகுபாடான நீதி கண்டு 'கக்வா' இனம் தவிர்ந்த அனைத்து இனங்களும் பொருமின. ஆனாலும் பயத்தினால் தங்கள் அதிருப்திகளை மனதுக்குள்ளேயே வைத்திருந்தனர்.

தமது இனத்தைச் சேர்ந்த மேஜர் கொல்லப்பட்டதால், உகண்டா இராணுவத்தில் இருந்த நுபிய இனச் சிப்பாய்கள் பலர் படையை விட்டு தப்பியோடினர்.

அமீனது நம்பிக்கைக்குரியவளாக மாறி விட்ட பெண் மந்திரவாதி, அமீனது செயல்களைப் பாராட்டினாள்.

"உன் விரோதிகள்தான் ஓடியிருக்கிறார்கள். உனக்கு எடுத்த காரியம் யாவும் வெற்றி பெறும். நாடு முழுக்க உனக்குத்தான் பேராதரவு திரண்டு வருகிறது." என்று ஆருடங்களை அடுக்கினாள்.

அமீனுக்கு மனது குளிர்ந்து போய் விட்டது. தங்கக் கட்டிகளை தட்சணையாகக் கொடுத்தான்.

அவள் அமீனை தன்னோடு சேர்த்து அணைத்தாள். அமீனது தலையை தனது பருத்த மார்புகளுக்கு நடுவே அழுத்தினாள்.

இவள் மந்திரவாதியாகவும் இருக்கிறாள். மயக்கும் மோகினியாகவும் இருக்கிறாளே என்ற பிரமிப்புத்தான் இம் மாதிரியான தருணங்களில் அமீனிடம் எழுவதுண்டு.

அவளுடன் சம்போகம் அனுபவிக்கும் போதெல்லாம் புதிய அனுபவமாகவே எப்போதும் உணர்ந்தான்.

எந்தப் பெண்ணாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அமீனுக்குத் திகட்டிவிடுவார்கள்.

ஆனால் இவள் மட்டும் பலமாதங்களாகியும் திகட்டாதிருந்தாள். மேலும், மேலும் தேவையாக இருந்தாள். பயம் கலந்த பக்தியுடன் அவளது இழுப்புக்கு ஆடினான். உறவின் போதும் அவள்தான் இயக்கினாள்; அவள்தான் இயங்கினாள். அமீனை பெட்டிப் பாம்பாக தன் பிடியில் அடக்கி வைத்திருந்தாள்.

இப்போதும் அவள்தான் அமீனின் தலையைப் பிடித்து தன் உடம்பின் நாதம் எழும் பகுதிகளில் படிப்படியாக புரட்டுவித்தாள். அமீனின் கைகளை எடுத்து தன் உடம்பின் வளைவு நெளிவுகளில் வழிகாட்டினாள்.

அமீன் உணர்ச்சிக் கலவையாக அவள் காட்டும் பாதையில் சென்று அவளுடைய சுகத்தை பெற்றுக் கொண்டான்.

அவனது உடல் தெப்பமாக நனைந்திருந்தது. வாசனையான துணியினால் அவள்தான் வியர்வையை ஒற்றி எடுத்தாள். களைத்துப் போய் மூச்சிழுத்தது. அவள்தான் நெஞ்சை வருடி இளைப் பாற்றினாள்.

அவளது மந்திரக்குகையை விட்டுப் போகும்போது, அமீனுக்கு உடம்பெல்லாம் பஞ்சாக இருக்கும்.

கொஞ்சம் கொஞ்சமாக அவளது இரசிகனாக, தாசனாக மாறிவிட்டான் அமீன்.

உகண்டாவின் ஆட்சியில் இடி அமீனின் பின்னால் பெண்மந்திரவாதி ஒருத்தி இருப்பது மிகச் சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

அவளுக்கு மட்டுமன்றி, அவளது உறவினர்களுக்கும் மரியாதை கிடைத்தது.

தம்முடன் விரோதம் உள்ள பலரை அமீனின் எதிரிகளாகச் சித்தரித்து ஒழித்துக் கட்டினார்கள்.

மந்திர தந்திரங்களையும், அவற்றின் போலித்தனத்தையும் எதிர்த்த பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனால் எந்த மந்திரவாதியைக் கண்டாலும் மக்கள் பயந்து நடுங்கத் தொடங்கினார்கள்.

அதேசமயம் பெண்மந்திரவாதிக்கு போட்டியாக உருவாகிவந்த இன்னொரு ஆண் மந்திரவாதி ஒருநாள் பிணமாகக் கிடந்தான்.

சூட்டுக் காயங்களோ, கத்திக் குத்துக் காயங்களோ அவரது உடலில் காணப்படவில்லை.

அவனது கழுத்தில் பற்கள் பதிந்த அடையாளம் காணப்பட்டது. கழுத்தை பற்களால் குதறி, இரத்தத்தை உறிஞ்சிவிட்டு கொன்றுள்ளனர்.

இக் கொலைபற்றி அறிந்தவர்கள் பீதியடைந்தனர்.

'துஷ்ட தேவதை ஒன்று அந்த மந்திரவாதியை கொன்று பழிதீர்த்துவிட்டது' என்று கதை கட்டிவிட்டனர்.

இக் கொலைகள் பற்றி விசாரிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ வேண்டாம் என்று பொலிசாருக்கு அமீன் பணித்திருந்தான்.

"மந்திரவாதிகளது உலகத்தில் எத்தனையோ விநோதங்கள் நடக்கும். நாங்கள் வேடிக்கை பார்க்கலாம். மூக்கை நீட்டக் கூடாது. நீட்டினால் மந்திரத்தால் நோண்டி விடுவார்கள்" என்று சிரித்தபடி அமீன் கூறிய போது, கேலியாகக் கூறுகிறானா? உண்மையாகக் கூறுகிறானா? என்று தெரியாமல் பொலிஸ் பொறுப்பதிகாரி குழம்பித்தான் போனார்.

அமீனாக உத்தரவு போடும்வரை விசாரிப்பதில்லை என்று அந்தக் கொலை விவகாரங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

அத்தனை சலுகைகள் கொடுத்திருந்தும் அந்த பெண் மந்திரவாதிக்கும் அமீனுக்கும் இடையே ஒருநாள் உறவு முறிந்தது.

அதற்குக் காரணமாக இருந்தது அமீன் கண்ட காட்சி.

(இடி தொடரும்)

# அழகிகளும் எம்.பி.களும்

பாரதிய ஜனதா ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முன்னணியில் நின்ற கட்சி அ.தி.மு.க.

இக் கட்சியின் எம்.பிகளை வாக்கெடுப்புக்கு முன்னர் இரண்டு பங்களாக்களில் காவல் வைத்திருந்தார் ஜெயலலிதா.

இது பற்றி தமிழக சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ள பரபரப்பான தகவல் இது.

அ.தி.மு.க. எம்.பிகள் தரத்துக்கு ஏற்ப இரு பிரிவாக பிரிக்கப்பட்டனர். சென்னை பூந்தமல்லியில் முன்னாள் அமைச்சரது பங்களாவில் தங்க வைக்கப்பட்டவர்கள் முதல் தர எம்.பிகள்.

பையனூர் என்ற இடத்தில் தங்கவைக்கப் பட்டவர்கள் இரண்டாம் தர எம்.பிகள்.

எனவே தரத்திற்கு ஏற்ற கவனிப்பும் நடந்ததாம். அது என்ன கவனிப்பு?

பூந்தமல்லி பங்களாவில் இருந்த எம்.பிகளை குஷிப்படுத்த பிரபல நடிகைகள் அழைக்கப்பட்டனர்.

கஸ்தூரி, விநோதினி, ரசிகா ஆகியோர் தருவிக்கப்பட்டு எம்.பிகளுக்கு சோம்பல் போக்கினார்கள்.

பையனூர் 'பங்களாவில் தங்கியிருந்த எம்.பிகளுக்கு துணை நடிகைகள் மட்டும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டனர்.

இந்த விவகாரம் வெளியே தெரிந்ததால் எம்.பிகளுக்கு நஷ்டமில்லை. நடிகைகள்தான் பயத்தில் இருக்கின்றனர்.



தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது. அப்படியிருக்க 'அம்மா' கட்சியோடு குலாவுவதை அறிந்தால் என்னாகுமோ? என்றுதான் கலக்கத்தில் இருக்கிறார்கள்.

இவர்களில் ரசிகா தி.மு.க. தலைவரின் பவளவிழா மேடையிலும் ஆடி தி.மு.க.பிரமுகர்கள் பலரது அன்பைச் சம்பாதித்தவர்.

கருமம் கருமம் என்கிறீர்களா? நம் நாட்டு அரசியல் மட்டும் உசத்தி என்றா எண்ணுகிறீர்கள்?.

## அதிஷ்டப் பெண்

ஆம்பர் ஸ்காட் என்னும் 19 வயதான அமெரிக்கப் பெண்ணை மாபெரும் அதிஷ்டசாலி என்று அமெரிக்கர்கள் புகழுகின்றனர்.

செய்தி அறிந்தால் நீங்களும் தான் புகழுவீர்கள்.

அவர் செலுத்திச் சென்ற கார் ஒரு சரக்கு ரயிலுடன் மோதியது. மோதியதும் கார் நொறுங்கியது. ரயிலால் இழுத்துச் செல்லப்பட்டது.



அப்படி இழுத்துச் செல்லப்படும் போதே தன் செல்லிடப்பேசியை (செல் ஃபோன்) உபயோகித்து தாயாருக்கும், பொலிசாருக்கும் தகவல் கூறியிருக்கிறார்.

பொலிஸ் விரைந்து, ரயிலை நிறுத்தி அவரைக் காப்பாற்றியது. இச் செய்தியைக் கேட்டுத்தான் அமெரிக்கர்கள் வாய் பிளந்து நிற்கிறார்கள்.

## காருக்குள் கலாட்டா

இத்தாலியில் ஆண் பெண் ஜோடி ஒன்று பொது இடத்தில் அநாகரிமாக நடந்து கொண்டதைக் கண்டித்து நீதிமன்றம் ஏழாயிரம் ரூபா அபராதம் விதித்தது.

என்ன அநாகரிகம்? அவர்கள் காருக்குள் காதல் லீலைகளில் ஈடுபட்டதுதான் அநாகரிகம்.



ஆனால் ஜோடி விடவில்லை. தீர்ப்பை எதிர்த்து அவர்கள் மேன்முறையீடு செய்தார்கள்.

மேல் நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை இரத்துச் செய்தது. அத்தோடு நிறுத்தாமல் அந்த ஜோடிக்கு ஒரு அறிவுரையும் வழங்கியது.

"இனிமேல் காரில் உறவு வைத்துக் கொள்ளும் போது, மற்றவர்கள் பார்க்காத வகையில் காரின் கதவுக் கண்ணாடிகளை முழுவதுமாக ஏற்றிக் கொள்ளுங்கள்! என்பதுதான் அறிவுரை.

## ஜடேஜா காதலிப்பது யாரை?

இந்திய கிரிக்கெட் அணியின் சுறு சுறுப்பான மற்றும் துரு துருப்பான வீரர் ஜடேஜா. கிசுகிசுக்களில் அடிக்கடி சிக்கிக் கொள்ளும் ஜடேஜாவின் பேட்டியும் துருதுரு தான்.



**கேள்வி: சினிமாவில் கதாநாயகனாக நடிக்கிறீர்கள். எப்படி கிடைத்தது இந்த வாய்ப்பு?**

**ஜடேஜா:** *யெஸ்! நான் மாதுரி டிக்ஷித்துடன் நடித்த படம் ஏறத்தாழ முடிந்து விட்டது. இன்னும் டப்பிங் மட்டும் தான் இருக்கிறது. நான் ஏராளமான விளம்பரப் படங்களில் மொடலாகப் பணிபுரிகிறேன் இல்லையா? அப்படி என்னை வைத்து விளம்பரப்படம் செய்கிறவர்தான் முதன் முதலாக இந்தப் படம் எடுத்தார். அதில் தெரிந்த முகம் ஒன்றையே போடுகிறேன். அதில் நீயே நடி என்றார். சம்மதித்தேன். தவிரவும் அந்தச் சமயத்தில் நான் கிரிக்கெட் விளையாடவில்லை. டெஸ்ட் போட்டிகளில் என்னைத் தேர்வு செய்யவில்லை. ஓய்வு கிடைத்தது. வீட்டில் சும்மா இருக்க விருப்பமில்லாமல் சினிமாவில் நடித்தேன். கதாநாயகனாக ரசிகர்கள் ஏற்பார்களா? இல்லையா என்பது படம் வந்த பிறகுதான் தெரியும்.*

**கேள்வி: படம் சூப்பர் ஹிட்டானால் கிரிக்கெட்டை விட்டு விட்டு தொடர்ந்து சினிமாவில் நடிப்பீர்களா? வேறு ஏதாவது படம் நடிக்கிறீர்களா?**

**ஜடேஜா:** *கிரிக்கெட் தான் என் முதல் மனைவி. சினிமா என்பது என்னைப் பொறுத்த வரை ஒரு சைட்-டிஷ் மாதிரித்தான். 6 மாதம் பல்லாயிரம் லைட்டுக்கு நடுவில் மேக்கப்போட்டு நடிக்கிறதை, சில கிரிக்கெட் மேட்ச்களில் ஆடி சம்பாதித்து விடுவேன். கிரிக்கெட்டில் ஓய்வு கிடைத்ததால்தான் நடித்தேன். அவ்வளவுதான். மற்றபடி கரிஷ்மா கபூர், ரம்பா அகியோருடன் நடிக்கும் படம் ஒன்றை ராம்கோபால் வர்மா எடுக்கிறார். அதில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளேன். ஆனால் உலகக் கோப்பைக்கு அப்புறம்தான் நடிப்பேன் என சொல்லி விட்டேன். (சிரிக்கிறார்)*

**கேள்வி: எல்லாம் சரி! உங்களைப் பற்றி மட்டும் கிசு கிசு ஏன் அதிகமாக வருகிறது?**

**ஜடேஜா:** *என்னைப் பற்றி கிசு கிசுவா? என்ன அது?*

**கேள்வி: மாதுரி டிக்ஷித்துடன் அதிகமாகச் சுற்றுகிறார். மாதுரியைத்தான் திருமணம் செய்து கொள்ளப்போகிறார் என்பது ஒரு கிசு கிசு. தவிரவும் சென்னையில் நடந்த ஒரு விருந்தில் தபுவோடு ஆட்டம் போட்டீர்கள் எனவும் செய்திகள் வந்ததே...**

**ஜடேஜா:** *(இடையிலே மறித்து) அங்கே பாலிவூட்டில் கதாநாயகன், கதாநாயகியை இணைத்து வதந்தி கிளப்பி விடுவது சகஜம். மாதுரியும் நானும் பல விருந்துகளில் ஒன்றாகக் கலந்து கொண்டிருக்கிறோம். அது பாலிவூட் பாணி. அது தவறாக எனக்குத் தெரியவில்லை. தவிர அடிப்படையில் நான் ஒரு கிரிக்கெட்டர். எனவே நிறைய விருந்துகளில் கலந்து கொள்வேன். அம்மாதிரித்தான் தபுவோடு விருந்தில் கலந்து கொண்டேன். மற்றபடி ஆட்டம் போட்டேன் என்பதெல்லாம் வேண்டுமென்றே போடப்பட்ட சூடான செய்தி. எல்லாவற்றிற்கும் மேலாக மாதுரி என்னைவிட வயதில் பெரியவங்க என நினைக்கிறேன். அப்ப திருமணம் எப்படி? வாய்ப்பே இல்லை.*

**கேள்வி: மாதுரி இல்லை... சரி! அப்படியானால் வேறு யாரையாவது காதலிக்கிறீர்களா?**

**ஜடேஜா:** *விடமாட்டீர்கள் போலிருக்கிறதே! யெஸ் ஒரு டெல்லி பொண்ணை இரண்டு வருஷமா காதலிக்கிறேன். அவரும் என்னைக் காதலிக்கிறார். அடுத்த ஜனவரியில் திருமணம். அவரோட பெயர் இப்ப வேண்டாமே! என்னாலே அவருக்குப் பிரச்சனையாகி விடும்.*



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு தலைச் சிறுமி



இரண்டு தலையோடு வாழும் பிள்ளை [illegible] குவைத் சஞ்சிகையில் இச் செய்தியும் புகைப்படமும் பிரசுரமாகியுள்ளது.

இரண்டு தலைப் பிள்ளை ஒன்று சமீபத்தில் இந்தியாவில் பிறந்திருந்தமை தெரிந்த செய்திதானே.

இரண்டு தலைகளோடு வாழப்பழகிவிட்டது இந்தப் பிள்ளை. சைக்கிள் ஓடவும் கற்று வருகிறது. இப்படி வாழ்வது சிரமமான..... மிக மிக சிரமமான காரியம்தான். வாழவேண்டும் என்ற உறுதி என்றால் வாழ்ந்து காட்டலாம்தானே. (பட உதவி: ராஜா-குவைத்)

# தகவல் பெட்டி





தலைப்பகுதி மட்டும்தான் இரண்டு. ஏனைய உறுப்புகள் ஒன்றுதான். உடலில் வேறு எந்தக் குறையும் கிடையாது. அதனால்தான் இத்தனை காலம் உயிர்வாழ முடிகிறது.

# ஒரே தாவு

தமிழ்நாட்டில் பாண்டிய மன்னர்கள் மீன்கொடி பறக்கவிட்டு ஆண்ட பூமி மதுரை . அங்கு 16 வயதான மாணவர் ஏ.பி.டி.துரைராஜ் பாய்ச்ச லில் சாதனை படைத்திருக்கிறார்.

16 சைக்கிள்களை வரிசையாக நிறுத்தி வைத்துவிட்டு. ஜிம்னாஸ்டிக் முறையில் ஒரே பாய்ச்சலாக பாய்ந்து தாண்டியுள்ளார்.

இவரது இச் சாதனை 'லிம்கா' சாதனைப் புத்தகத்தில் இடம்பெற உள்ளது. கின்னஸில் ஏற்கப்பட்டதாக தெரியவில்லை.

ராஜ்குமார் படிப்பிலும் சூரராம். சாதனைகள் படைப்பதற்கு உடல் வலிமையைவிட மனவலிமைதான் முக்கியம். அது ராஜ்குமாரிடம் நிறையவே உண்டு.



# என்ன பறவை?

அன்னப்பறவை ஒன்று அமர்ந்திருக்கிறது என்று உங்கள் கண்கள் உங்களை ஏமாற்றலாம். அதற்கு நாம் பாத்திரவாளிகளல்ல.

தோட்டம் ஒன்றில் காய்த்த பீர்க்கங்காய்தான் இப்படி அன்னப்பறவையின் தோற்றத்தில் வியக்க வைக்கிறது.

தமிழ்நாட்டில் ராஜேந்திரன் என்பவரது தோட்டத்தில் இது காய்த்துள்ளது.



# குற்றச் சாதனை

துப்பாக்கி போன்ற கொலைக் கருவிகளைப் பயன்படுத்தி, கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற கொடுமைகள் மிக அதிகமாக இடம் பெறும் நாடு அமெரிக்காவே என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இங்கு இத்தகைய கொடும் குற்றங்கள் ஆண்டொன்றுக்கு சராசரி 6 இலட்சத்து 20ஆயிரம் வரை நடைபெறுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது ஒரு உலக சாதனையாகும். குற்றச் செயல் புரிவதில் அமெரிக்கா படைத்துள்ள உலக சதனை புல்லரிக்க வைக்கிறது அல்லவா!

துப்பாக்கியுடன் பள்ளிக்கு வரும் மாணவர்கள் சக மாணவர்களையும் ஆசிரியர்களையும் சுட்டுக்கொல்லும் அளவு கொடுமைகளும் நடந்தேறியிருக்கின்றன.

ஹொலிவூட் திரைப்படங்களிலும் பயங்கர வன்முறைகளுக்கே முதலிடம் தரப்படுகிறது. இதனால் சில ஸ்கன்ரினேவிய நாடுகளில் ஹொலிவூட் திரைப்படங்கள் திரையிட அனுமதியில்லை.

அமெரிக்க நகரங்கள் சிலவற்றில் நடைபாதைக் கடைகளிலேயே துப்பாக்கிகள் விற்கப்படுகின்றன. வயது வித்தியாசம் எதுவுமின்றி இவற்றை எவரும் வாங்கிக் கொள்ளலாம். சுட்டுப் பார்த்தும் கொள்ளலாம்.



# ஆழ்கடலில் அஞ்சல் பெட்டி

தெருவிலேதான் தபால் பெட்டி இருக்கும். ஆனால் இங்கோ நீருக்குள்ளேயே தபால் பெட்டி இருக்கிறது. கடல் ஜீவராசிளுக்கு காதல் கடிதம் போடவா இந்த தபால் பெட்டி? என்று கிண்டலாக இருக்கிறதா? தரையில் உள்ள காதலி அல்லது காதலனுக்கும் இதில் கடிதம் போடலாம்.

மேற்கு ஜப்பானில் வாக்கயாமா பகுதியில் கடல் திருவிழா நடப்பதுண்டு. அதில் ஒரு வியப்பான காட்சிதான் இது. சுசாமி கடலின் அடியில் தபால் பெட்டியை நிறுவினார்கள். அந்தத் தபால் பெட்டியில் தண்ணீரில் நனையாத தபால் அட்டையை ஒருவர் போடுகிறார்.

இந்த தபால் பெட்டியில் திருவிழாவில் கலந்துகொள்ளும் எவரும் கடிதம் போடலாம். அதற்காக தண்ணீரில் நனையாத அட்டைகள் விற்கப்படுகின்றன.

கடிதங்களை தபால்காரர் சேகரித்து உள்ளூர் தபாலகத்தில் சேர்ப்பிப்பார். இவ்வருடம் செப்டம்பர் மாதம்வரை இத் திருவிழா நடக்கும். அதுவரை தபால் பெட்டியும் கடலின் அடியில் இருக்கும்.




# பல நாள் திருடன்

'பலநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான்' என்ற முதுமொழிக்கேற்ப 10 வருட காலம் சட்டத்தின் கையில் அகப்படாமல் வர்த்தகத் துறையில் பல ஏமாற்றுகள் தில்லுமுல்லுக்கள் மோசடிகள் செய்துவந்த யசுவோ ஹமங்கா என்ற பிரபல செம்பு வர்த்தகர் (தொலைபேசியுடன் காணப்படுபவர்) 1997 பெப்ரவரியில் சட்டத்தின் கையில் மாட்டிக் கொண்டார்.

ஜப்பானில் மிகப் பிரசித்திபெற்ற 'சுமிற்றோமோ' வர்த்தக நிறுவனத்தை பெரும் பாதிப்புக்குள்ளாக்குமளவு இவர் [illegible] சென்று விட்டன்.

ஜப்பானிலுள்ள தாஜ்வா வங்கி. இங்கிலாந்தின் பேரிங்ஸ் வங்கி ஆகிய வங்கிகளும்கூட 1995ம் ஆண்டு இந்த மோசடிப் பேர்வழியின் வலையில் வீழ்ந்து சங்கடப்பட நேர்ந்துள்ளது.

சட்ட பூர்வமற்ற வகையில் மொத்தம் 2.6 பில்லியன் டொலர் வரை (18ஆயிரத்தி 200 கோடி ரூபாய்) இவர் மோசடி செய்துள்ளார். இத்தனைக்கும் இக்குற்றச் சாட்டுகள் எவற்றையும் மறுக்காமல் ஒப்புக்கொண்டு. குற்றவாளிக்கூண்டில் ஏறினார். இந்த பணத்தையெல்லாம் எங்கு கொண்டு போய் வைத்தாரோ?

வர்த்தக நிறுவனங்களையும். வங்கிகளையும் இதற்கு முன்னர் இந்தளவு தொகைக்கு யாரும் மோசடி செய்யவில்லை. அதனால் இந்த மோசடி மன்னரின் பெயர் கின்னஸில் இடம்பிடித்துள்ளது.





படிப்பகம்

www.padippakam.com




சாக்ஷி முகப்பில்

கார்த்திக் படம்: நிலவே முகம்காட்டு

## சுயேச்சை எம்.எல்.ஏ

சத்யராஜ் நடித்து வெற்றி குவித்த 'மாமன் மகன்' 'தாய் மாமன்' ஆகிய படங்களையும் சுமாராக ஓடிய 'பெரிய மனுஷன்' படத்தையும் இயக்கியவர் குருதனபால்.

சத்யராஜ் நடிக்க 'வந்தாங்க, ஜெயிச்சாங்க' படத்தை இயக்கவிருந்தார். பின்னர் அத்திட்டத்தை கைவிட்டிருந்தார். 'திருநாள்' என்னும் பெயரில் சத்யராஜ் நடிக்க மற்றொரு படம் தயாராகி இடை நடுவே கைவிடப்பட்டது.

இப்போது மறுபடி சத்யராஜ் நடிக்கும் படம் ஒன்றுக்கு கதை தயாராகியுள்ளது.

படத்தின் பெயர்: 'சுயேச்சை எம்.எல்.ஏ.' ஒரே ஒரு வாக்கில் வாஜ்பேய் ஆட்சி கவிழ்ந்தது அல்லவா! அதனை வைத்து கதையை தயாராக்கியுள்ளார்.

ஆட்சி அமைப்பது ஒரு வாக்கில் திண்டாடும்போது, ஒரு சுயேச்சை எம்.எல்.ஏ. உள்ளே புகுந்து இரு கட்சிகளையும் ஏமாற்றிவிட்டு தானே ஆட்சிக்கு வருகிறார்!

இந்த கதையை சத்யராஜ் பாணியில் கலகலப்பாக படமாக்கப்போகிறார் குருதனபால். கதாநாயகி மற்றும் நடிக, நடிகையர் தெரிவுகள் நடைபெற்று வருகின்றன.

## சிம்ரானுக்கு வாய்ப்பு கனவே கலையாதே

'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தில் பிரசாந்த் ஜோடியாக சிம்ரான் நடித்தார். அப்படத்தின் தயாரிப்பாளரான சிவசக்தி பாண்டியனுக்கு சிம்ரானில் ஒரு ஆர்வம் ஏற்பட்டுவிட்டது.

'காதல் கோட்டை', 'காலமெல்லாம் காதல் வாழ்க' போன்ற வெற்றிப்படங்களை வழங்கி இன்று முன்னணியில் உள்ள தயாரிப்பாளர் சிவசக்தி பாண்டியன்.

அவர் ஒரு சொடுக்குப் போட்டால் போதும், பல நடிகர் நடிகைகள் ஓடிவருவார்கள்.

புதிய இயக்குநர்களுக்கு களம் தரும் சிவசக்தி பாண்டியன் வித்தியாசமானவர். முழுப்படப்பிடிப்புகளிலும் இயக்குநரோடுகூட இருந்து ஆலோசனைகள் கூறுவார்.

பல இயக்குநர்களை கோபத்தில் அறைந்தும் இருக்கிறார். இயக்குநருக்கு அறையும் ஒரே தயாரிப்பாளர் இவர்தான்.

அவ்வாறாகப்பட்ட சிவசக்தி பாண்டியனை சிம்ரான் அனுசரித்ததில் ஆச்சரியம் இல்லை. அந்த அனுசரிப்பால் அடுத்தும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

சிவசக்தி பாண்டியன் தயாரிக்கும் 'கனவே கலையாதே' படத்தில் முரளி ஜோடி, சிம்ரான். இப்படத்தை வ.கவுதமன் இயக்குகிறார். இசை:தேவா. ஒளி ஓவியம்: தங்கர் பச்சான்.

## சிம்ரான் பற்றிய சிறப்புத் தகவல்கள்

சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் தமிழ்ப் பட ரசிகர்களை கனவில் தொல்லைப்படுத்தும் நடிகை சிம்ரான். இந்த கனவுத் தேவதை பற்றிய சிறப்புத் தகவல்கள் சில:

பஞ்சாபி இனத்தைச் சேர்ந்த சிம்ரான் பிறந்தது மும்பையில். பி.காம் வரை படித்து பட்டம் வாங்கியதாக கூறுகிறார். கூடப் பிறந்தவர்கள் மூன்றுபேர். இரண்டு தங்கை, ஒரு தம்பி.

முதலில் அறிமுகமான படம்: 'தேரே மேரே சப்னே' இந்திப்படம். தமிழில் முதல் நடித்த படம் விஐபி. ஆனால் வெளிவந்த படம்: ஒன்ஸ்மோர்.

தற்போது பதினொரு படங்கள் கைவசம் உள்ளன. கவர்ச்சி கலந்த நடிப்பே வெற்றிக்கு காரணம் என்று நம்புகிறார்.

'கவர்ச்சிக்கு டாட்டா' காட்டப்போவதாக சமீபத்தில் தமிழக பத்திரிகைக்கு பேட்டி அளித்திருந்தார். அதனை நம்பத்தேவையில்லை. கவர்ச்சிக்கு டாட்டா காட்டினால் ரசிகர்கள் தனக்கும் டாட்டா காட்டி விடுவார்கள் என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

சிம்ரான் என்றால் கவர்ச்சி, கவர்ச்சி என்றால் சிம்ரான்.

சிம்ரான்



கார்த்திக்-தேவயாணி
படம்: நிலவே முகம் காட்டு

## மனைவியின் நிபந்தனை

### தனி அறை ஒதுக்குக!

'ஹேராம்' படத்தில் ஷாருக் கான் நடிப்பது பழைய செய்தி. இப்படத்தில் ராணி முகர்ஜியும் நடிக்கிறார். ஷாருக்கானை ராணி முகர்ஜி வளைத்துப் பிடித்திருப்பதாக மும்பாய் படஉலகில் செய்திகள் வலம் வருகின்றன.

இந்நிலையில் 'ஹேராம்' பட இயக்குநரான நடிகர் கமலிடம் ஷாருக்கானின் மனைவி சில நிபந்தனைகள் விதித்துள்ளாராம்.

அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை உடனடியாக முடித்துக் கொண்டு திருப்பி அனுப்பிவிட வேண்டும். ராணி முகர்ஜி தங்கியுள்ள அறைப் பக்கமாக ஷாருக்கானுக்கு அறை ஒதுக்கக் கூடாது. தனி அறையாக எட்டத்தில் ஒதுக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளுக்கு கமல் இணங்கிய பின்னரே தன் கணவரை கமல் படத்தில் நடிக்க அனுமதி கொடுத்தாராம் ஷாருக்கானின் மனைவி. மும்பை பட உலகில் கவர்ச்சிப் புயலாக வலம் வருகிறார் ராணி முகர்ஜி.

'ஹேராம்' படத்தின் பின்னர் தமிழ்ப்பட ரசிகர்களையும் கவர்ந்திழுக்கப் போகிறார்.

## புதையல் சாக்ஷி

முகப்பில் ஒயிலாகவும், இங்கு கவர்ச்சி புயலாகவும் காட்சி தருபவர் சாக்ஷி. தமிழில் 'புதையல்' படத்தின் பின்னர் பிரபுவுடனும் நடித்தார்.

ஆயினும் இந்தப் புதையலை யாரும் சரியாக பயன்படுத்தவில்லை. அதனால் தெலுங்கில் திறமையைக் காட்டி அசத்துகிறார். மெருகு கூடியும் இருக்கிறார்.

சிரஞ்சீவியுடன் சாக்ஷி நடித்துள்ள 'இத்தரு மித்ருலு' படத்திற்கு மகா வரவேற்பு. இப்படத்தின் பாடல் கசட்டுகள் வெளியான ஒரு சில தினங்களுக்குள் மூன்று இலட்சம் விற்றுத் தீர்ந்துள்ளன.

தெலுங்கில் நாகார்ஜுனுடன் சாக்ஷி நடித்து வெற்றிபெற்ற படமும் 'மீசைக்கார அண்ணே' என்ற பெயரில் தமிழுக்கு வருகிறது.



படம்: 'மீசைக்கார அண்ணே'

## பப்படம்

'சின்னத்தம்பி' படத்தை தயாரித்தவர் 'திருப்பூர் பாலு, அவர் தயாரித்து இறுதியாக வெளியான படம் 'சின்னத் திரை'.

சரத்குமார், ரோஜா நடித்த இப்படம் பலத்த அடி வாங்கி பப்படமாகியுள்ளது. சரத்குமார் மார்க்கெட்டையும் சேதப்படுத்தியுள்ளது.

'சிம்மராசி', 'சின்னத்திரை' இரண்டும் அடுத்தடுத்து அடி வாங்கியதால் சரத் மார்க்கெட் ஆடிப்போய் இருக்கிறது. சுரேஸ் கிருஷ்ணா இயக்கும் 'ஒருவன்' படத்தை பெரிதும் நம்பியிருக்கிறார் சரத்.

## தெலுங்கில் 'படையப்பா'

'படையப்பா' தெலுங்கில் 'நரசிம்மா' என்ற பெயரில் சில காட்சி மாற்றங்களுடன் வெளியானது. அங்கும் சூப்பர் ஹிட். தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி நடித்த படங்களுக்கு குவியும் வசூல் போன்றே 'நரசிம்மா'வுக்கும் குவிந்துள்ளதாம்.

சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன் இருவரும் தெலுங்கில் பிரபலமானவர்கள். ரஜினியும் 'நாட்டாமை' போன்ற படங்கள் ஊடாக தெலுங்கில் வரவேற்பு பெற்றிருந்தார். ஆந்திரமாநில அரசியலில் சந்திரபாபு நாயுடு, சிவபார்வதி மோதலிலும் ரஜினி சம்பந்தப்பட்டிருந்தார் என்பதால் அங்கும் படம் பரபரப்பாக பேசப்படுகிறது.

தமிழ் நாட்டில் ரம்யா கிருஷ்ணனின் பாத்திரம் ஜெயலலிதாவைக் குறிப்பதுபோல, தெலுங்கில் சிவபார்வதியையும் லேசாகக் குத்துகிறது.



## குஷ்புவுக்கு குழந்தை உண்டா?

### அவரே கூறுகிறார் பதில்!

குஷ்புவுக்கு குழந்தை இருப்பதாகவும், அநாதை ஆசிரமத்தில் வளர்வதாகவும் தமிழக சஞ்சிகை ஒன்று செய்தி போட்டது. அது வதந்தி என்று 'சினி விசிட்'டில் விளக்கியிருந்தோம்.

இப்போது குஷ்பு கூறுவதைக் கேளுங்கள்:

"பிரபுவுடனான என் முதல் திருமணம் முறிந்து போனது பற்றியும் அடுத்து எப்போது திருமணம் செய்து கொள்வேன் என்றும என்னைப் பார்க்கும் போதெல்லாம் பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள்.

முடிந்துபோன கதை முடிந்து போனதாகவே இருக்கட்டும். அதைக் கிளறாதீர்கள் என்பதுதான் என் வேண்டுகோள்.

சமீபத்தில்கூட ஒரு பத்திரிகை எனக்கு குழந்தை ஒன்று இருப்பதாகவும், அநாதை ஆசிரமத்தில் வளர்வதாகவும் ஒரு கிசுகிசு வெளியிட்டது.

இது போன்ற விஷயங்களுக்கு நான் பதில் சொல்ல ஆரம்பித்தால் அப்புறம் அந்த வேலையைத்தான் நான் முழுநாளும் செய்ய வேண்டியிருக்கும்.

எனக்கு குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அப்படியிருக்கும்போது அதை நான் ஏன் அநாதை ஆசிரமத்தில் விட வேண்டும். நானும் மாமாவும் (சுந்தர்.சி) விரும்புகிறோம். இது எல்லோருக்கும் தெரியும்.

எப்போது திருமணம் என்று நாங்களே இன்னும் முடிவு செய்து கொள்ளவில்லை திருமணம் என்பது சம்பந்தப்பட்ட இருவரது நிலைமையைப் பொறுத்த விஷயம். அந்த நிலைமை கூடிய விரைவில் வர இருக்கிறது.

சூர்யா, விஜய், அப்பாஸ் போன்ற இளம் நடிகர்கள் என்னை அக்கா என்று கூப்பிட ஆரம்பித்துள்ளார்கள்.

"இது கிளாமரான பீல்டு. அக்கா என்ற வார்த்தை உங்கள் சினிமா வாழ்க்கையைப் பாதிக்கும்" என்று சிலர் எனக்கு ஆலோசனை கூறினவர்கள் அன்பாக ஒரு உறவைச் சொல்லி அழைப்பதால், அப்படியொரு பாதிப்பு ஏற்பட்டால் ஏற்பட்டுவிட்டுப் போகட்டுமே என்பது என் கருத்து.

அஜித்குமார் மட்டும் என்னைவிட ஒரு வயது பெரியவர். 'குஷ்' என்றுதான் கூப்பிடுவார்" என் நண்பர்கள் அனைவரும் என்னை 'குஷ்' என்றுதான் கூப்பிடுவார்கள்.

என்று குதூகலமாக கூறிக்கொண்டு போகிறார் குஷ்.



படிப்பகம்

www.padippakam.com

ிரையுலக
றுபக்கம் **92**
ழ்நாட்டிலிருந்து **மயன்**

# தொடரின் இயக்குநர் மாற்றம் நடனப் பள்ளியில் பிரச்சனை

**த**மிழ்நாட்டிலும், இலங்கையிலும் ஒளிபரப்பாகும் லைக்காட்சித் தொடர் ஒன்றின் இயக்குநர் மாற்றப்பட ப்பதாக இப்பகுதியில் சூசகமாக தெரிவித்து இருந்தோம். அத் தொடர் தயாரிப்பாளரான நடிகைக்கும், இயக்கு க்கும் இடையே பிரச்சனை ஏற்பட காரணமான சமாச் த்தையும் குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது அத்தொடரின் இயக்குநர் மாற்றப்பட்டு, கையின் கணவர் பெயர் இடம் பெறுவதைக் காணலாம். தனது கணவர் வேறு ஒரு நடிகையின் பிடியில் செல் இருப்பதற்காக அவருக்கு தன் தயாரிப்பில் முக்கிய கொடுத்திருக்கிறார் நடிகை.

கிசு, கிசு வெளிவராத பத்திரிகைகளே கிடையாது. யார் ண்டுமானாலும் கிசு, கிசு எழுதலாம். ஆனால் போதிய ல்கள் பெற்று எழுதப்படும் கிசு கிசுக்களே பின்னர் மையாகின்றன. ஒரு சில பத்திரிகைகள் மட்டுமே மையானவற்றை திரட்டி கிசு கிசு பாணியில் தருகின்றன. காலத்தின் பின்னர் அவை உண்மையாவதை வாசகர் காணலாம். இப் பகுதியில் இடம் பெற்ற பல தகவல்கள், தொடர் நிறைவுற முன்பே உண்மையாகியுள்ளன.

## விழாக்களுக்கு பணம்

**த**மிழ்ப் பட உலகில் 'வி' எழுத்தில் ஆரம்பிக்கும் ஐந்தெழுத்து நடிகை அவர்.

கடைத்திறப்பு விழா போன்ற வைபவங்களுக்கு நடிகைகளை அழைக்கும் ஜொள்ளர்களான வர்த்தகர்கள் பலர் இருக்கின்றனர்.

திறப்பு விழா என்று அழைத்து நடிகைகளோடு பரிச்சயம் ஏற்படுத்துவதுதான் நோக்கமாக இருக்கும்.

'வி' நடிகை உடனடியாக ஐம்பதாயிரம் ரூபா கேட்டார். தொகை அதிகமாக இருக்கிறதே என்றால், அங்கு வந்த பின்வால் தொடாமலா இருப்பீங்க. அதற்கும் சேர்த்துத் தான் இந்த 'ரேட்' என்று பட்டென்று கூறிவிடுவார்.

இந்த நடிகை இலங்கைக்கும் பலமுறை விஜயம் செய்து அங்குள்ள சில தொழிலதிபர்களின் நட்பையும் பெற்றுக்கொண்டவர்.

வெளிநாட்டுக்கு அழைத்தாலே ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கப் போகிறார்கள் என்று தெரிந்து, அதற்கு ஏற்பவே தொகை கறந்து கொள்வார்.

துபாய் போன்ற நாடுகளில் இருந்து அழைப்பு வந்தால் ஒரே குஷிதான். திரும்பி வரும்போது பை நிரம்பி வழியும்.

oo

## நடனப் பள்ளி

**ச**மீப காலமாக அந்த நடனப் பள்ளி பற்றி ஏகப்பட்ட விவகாரமான செய்திகள் கிளம்பியுள்ளன.

தமிழ்ப்பட உலக பெண் நடன இயக்குநர் நடத்தும் பள்ளி அது. அங்கு பாடல் காட்சிகளில் கதாநாயகிக்கு பின்னால் நின்று ஆடும் நடன நடிகைகளும் பயிற்சி பெறுவர். தனியான நடனக் குழுவும் வைத்திருக்கின்றனர்.

கற்றுக் கொடுக்கும் பெண்மணிக்கு சில இயக்குநர்களோடும், கதாநாயகர்களோடும் நெருங்கிய நட்பு இருக்கிறது. அதுதவிர அரசியல் உலகப் புள்ளிகளோடும் நட்பு இருக்கிறது.

பாடல் காட்சிகளுக்கு செக்சியான கோணங்களில் அசைவுகள், ஆட்டங்கள் சொல்லிக் கொடுப்பதில் அவர் வல்லவர். அந்த அசைவுகளை அவரிடம் நேரடியாக கற்றுக்கொள்ளத் துடிக்கும் இயக்குநர்களில் முக்கியமானவர்களுக்கு மட்டும் நேரடிக் கவனிப்பு கொடுப்பார். ஏனையோருக்கு தன் பள்ளியிலுள்ள அழகான பெண்களை அறிமுகம் செய்து வைப்பார்.

சினிமா ஆசை உள்ள பெண்கள் 'அக்கா' காட்டும் நபரோடு சில நாட்கள் தங்கியிருக்க சம்மதிப்பார்கள்.

இவ்வாறு சிலருக்கு நல்ல சந்தர்ப்பங்கள் வாய்த்ததும் உண்டு. வேறு பலர் ஏமாற்றப்பட்டதும் உண்டு.

பிரபல நடிகைகளும் நடனம் கற்க இவரது பள்ளியைத்தான் நாடுவார்கள்.

அந்த நடிகைகளை அடையத் துடிக்கும் வி.ஐ.பி.க்கள் 'அக்கா'வின் துணையை நாடுவார்கள். தூது பேசி படிய வைத்துவிடுவார்.

'காமசூத்ரா' நூலில் இடம்பெறும் அங்க அசைவுகள் அத்தனையையும் நடனம் என்ற போர்வையில் கற்றுத் தருவார். ஆண்களும், பெண்களும் ஒரு சேர நடனம் பழகுவதால் சில பெண்கள் வெட்கப்படுவார்கள். அப்போது கிளுகிளுப்பான ஜோக்கடித்து அக்கா, சகஜமாக்குவார்.

சில சலுகைகளுக்காக இயக்குநர்களோடு நட்பாக இருந்தாலும், பெண்களிடம்தான் இவருக்கு ஈடுபாடு அதிகம் என்பது சமீபத்தில் அம்பலமான செய்தி.

**'ர'வில் பெயர் ஆரம்பமாகும் முன்றெழுத்து நடிகையுடன் இவருக்கு 'பயர்' பட பாணியில்** நட்பு ஏற்பட்ட விஷயம் நடனப் பள்ளி மாணவிகள் சிலர் மூலம் வெளியே கசிந்து விட்டது. பத்திரிகைகளிலும் வெளியாகி சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.




பிரபுதேவா-ராதிகா சௌதரி
படம்: டைம்

# காதோடு சொல்லுகிறோம்

'**கா**தல் கோட்டை' குமார நடிகர் தன் காதலியை கழற்றிவிட்டது தெரிந்த சங்கதி. அந்த காதலியான நடிகைக்கு கணிசமான தொகை இரகசியமாக கொடுக்கப்பட்டதாம். பணத்தை வாங்கிக்கொண்டு கழண்ட 'ஹீர' நடிகை இப்போது வேறு ஒரு காதலருடன் வலம் வருகிறார். நடிகரும் எவ்வித இடையூறும் இல்லாமல் புதுப்புது ஜோடி பிடித்து வருகிறார்.

**த**மிழில் பிரபலமான இரண்டெழுத்து நடிகைக்கும் 'பொற்காலம்' படைத்த இயக்குநருக்கும் இடையே காதல் இருந்தது தெரிந்ததே. பின் 'டமால்' என்று முறிந்ததும் தெரிந்ததே. இந்த முறிவுக்கு பெரிய நடிகர் ஒருவர்தான் காரணமாம். குறிப்பிட்ட இயக்குநர் பெரிய நடிகரை சீண்டுவது போலப் பேட்டி கொடுத்திருந்தார். அதனால்தான் அவரது காதல் நடிகையை பணத்தால் வாங்கி பிரித்தாராம் நடிகர். சகலகலா வல்லவரல்லவோ நடிகர்.

**த**மிழ்நாட்டின் பிரபலமான நாளிதழின் விருது வழங்கும் விழாவை மூன்றெழுத்து இயக்குநர் தொகுத்து வழங்கினார். விழா முடிந்ததும் தொலைக்காட்சி அறிவிப்பாளரான அழகான பெண்மணியை தன் அறைக்கு அழைத்தாராம். எடுத்த எடுப்பிலேயே சில்மிஷம் செய்ய, அறிவிப்பாளப் பெண் ஒருவிதமாக சமாளித்துத் தப்பினாராம்.

'**கா**தலுக்கு மரியாதை' பட நாயகி காதல் கோட்டை நாயகனுடன் இணைந்து நடிக்கிறார். அவரிடம் தனது கைவரிசையை காட்டப் பார்த்தார் நாயகன். கையை தள்ளிவிட்டு முறைத்தாராம் நடிகை. ஆனாலும் முயற்சியைத் தொடர்கிறார் நாயகன். 'படப்பிடிப்பு முடிவதற்கிடையில் 'டச்' பண்ணாமல் விடமாட்டேன்' என்று சபதம் செய்திருக்கிறாராம்.

**வி**ருது ஒன்றின் பெயர் கொண்ட நான்கெழுத்து நடிகைக்கு 'ஊர்' அறிய விரைவில் டும் டும் நடக்கப் போகிறதாம். மலையாளப் பட கதாநாயகன்தான் கைப்பிடிக்கிறார். காதல், கல்யாணத்தில் முடியப்போகிறது.

# நடிகர்களின் கோஷ்டி

அரசியலில் இரு கோஷ்டிகள் இருப்பது போல, திரையுலகில் நகைச்சுவை நடிகர்களுக்கிடையேயும் இரு கோஷ்டிகள் இருக்கின்றன.

கவுண்டமணி, மணிவண்ணன், செந்தில், சின்னிஜெயந்த், வடிவேலு, சாலி, பாண்டு ஆகியோர் ஒரு கோஷ்டியாகவும், தாமு, விவேக், வையாபுரி, சாப்ளின் பாலு, பாலாஜி, பாரி வெங்கட் போன்றோர் இன்னொரு கோஷ்டியாகவும் இயங்குகின்றனர்.

இதில் இரண்டாவது கோஷ்டியில் உள்ளவர்கள் அனைவருமே ஒல்லியான உடல்வாகு கொண்டவர்கள். அதனால் முதல் கோஷ்டியினர் இரண்டாவது கோஷ்டிக்கு வைத்துள்ள செல்லப் பெயர், 'எடை மிஷின் கோஷ்டி'.

# மூன்று மகன்-ஆறு மகள்

உலக சாதனைப் படமாக 'சயம்பரம்' படப்பிடிப்பு ஒரே நாளில் முடிந்துவிட்டது தரிந்த செய்தி. இப்படத்தின் கதைச் சுருக்கம் என்ன தெரியுமா?

விஜயகுமார், மஞ்சுளா தம்பதிக்கு மூன்று மகன்கள். சத்யராஜ், பிரபு, அப்பாஸ் கியோர்தான் மகன்கள். ரோஜா, ரம்பா, மகேஸ்வரி, கஸ்தூரி, கலலட்சுமி, ப்ரீதா கியோர் மகள்கள். விஜயகுமாருக்கு அறுபதாம் கல்யாணம் நடக்கிறது. அப்போது வருக்கு மாரடைப்பு ஏற்படுகிறது. அவருக்கு சிகிச்சை செய்யும் நெப்போலியன் ங்கள் கடைசி ஆசை என்ன? என்று கேட்கிறார்.

'என் மூன்று மகன்களதும், ஆறு மகள்களதும் திருமணத்தைக் கண்ணாரக் ணவேண்டும்' என்று கூறுகிறார் விஜயகுமார்.

மூன்று நாட்கள் மட்டுமே விஜயகுமார் உயிருடன் இருப்பார். அதனால் மூன்று ட்களுக்குள் திருமணங்களை எப்படி நடத்தி முடிக்கிறார்கள் என்பதே கதை. ரபு தேவா ஜோடி ரோஜா, சத்யராஜ் ஜோடி குஷ்பு, பிரபு, ப்ரீத்தா, வினித், கேஸ்வரி, பாண்டியராஜன் கஸ்தூரி என்று பல ஜோடிகள்.

பிரபுதேவா ஜோடியாக ரம்யா கிருஷ்ணனை போட நினைத்தனர். ஆனால் ரோஜாவைப் போடுமாறு பிரபு தேவா நெருக்கியதால் ரம்யாவுக்கு வேறு பாத்திரம் கொடுத்தனர். அவர் நடிக்காது நழுவிவிட்டார்.



ரோஜா
படம்: சிவன்

## தாடி மணி

மணிவண்ணன் என்றாலே தாடிதான், நினைவுக்கு வரும். சத்யராஜ், அப்பாஸ் நடிக்க மணிவண்ணன் இயக்கும் 'ஆறுவது சினம்' படத்தில் மணிவண்ணன் தாடி இல்லாமல் நடிக்கிறார். தாடிக்கு பதிலாக பெரிய மீசை வைத்து நடிக்கிறார்.

இப்படத்தில் நடிக்க மீனா முயற்சி செய்தாராம். ஆனால் புதுமுகம் வித்தியாவைத்தான் நடிக்க வைத்துள்ளனர்.

## மினி சினி

- ✣ 'காதல் கோட்டை', 'தொடரும்' போன்ற படங்களில் இணைந்து நடித்த அஜித்-தேவயாணி ஜோடி மீண்டும் இணைகிறார்கள். இப்படத்திற்கு 'யாரடா நீ மன்மதா' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ✣ சூப்பர் குட்ஃபிலிம்ஸ் தயாரிப்பில் முரளி கதாநாயகனாக நடிக்கும் 'காமராசு' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் சரத்குமார்.
- ✣ செல்வா இயக்கத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் 'ரோஜாவனம்' படத்தில் கார்த்திக்கிற்கு இரு ஜோடிகள். ஒருவர் லைலா, இன்னொருவர் மாளவிகா.
- ✣ 'என்றென்றும் காதல்' படத்தை இயக்கிய மனோஜ் பட்நாகர் அடுத்து இயக்கத்திட்டமிட்டிருந்த 'காதல் தென்றல்' படத்தின் பெயரை 'குட்லக்' என்றுமாற்றி விட்டார்.
- ✣ டாக்டர் ராஜசேகர் தெலுங்கில் நடித்த படமொன்று தமிழில் 'ஆதிகேசவன்' என்று மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் மீனா கதாநாயகியாக நடித்துள்ளார்.
- ✣ 'காதலுக்கு மரியாதை' படத்தை அடுத்து பாசிலின் இயக்கத்தில் விஜய்-ஷாலினி ஜோடியாக நடிக்க இருந்த படம், சில மாதங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
- ✣ விஜய்காந்த்-சூர்யா நடித்துள்ள 'பெரியண்ணா' படத்திற்கு இசையமைத்தவர் புதிய இசையமைப்பாளர் பரணி. இவர் இளையராஜாவிடம் உதவியாளராக இருந்தவர்.
- ✣ முன்னாள் நடிகையும் விஜயசாந்தி போன்ற பிரபல நடிகைகளுக்கு பின்னணி பேசி வருபவருமான சரிதா மலையாளப்படம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளார். இதில் நாயகனாக நடிப்பவர் சரிதாவின் கணவர் முகேஷ்.
- ✣ கமலின் 'ஹேராம்' படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிக்கும் இந்தி நடிகை ராணி முகர்ஜி, இன்னொரு தமிழ்ப்படத்திலும் நடிக்கவுள்ளார்.
- ✣ கார்த்திக்-தேவயாணி நடிக்கும் 'நிலவே முகம் காட்டு' படத்தில் பிரதான வில்லனாக நடிப்பவர் இப்படத்தின் இயக்குநர் மு.களஞ்சியம்.



பிரபு
படம்: திருநெல்வேலி

## சூர்யா விளக்கம்

'மன்மத ராசா' படத்தில் சூர்யா நடிப்பதாக இருந்தது. பின்னர் திடீரென்று விலகிக் கொண்டார். இப்படத்தில் நடிகை சுமித்ராவின் மகள்தான் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்க இருந்தார்.

சுமித்ரா முன்பு சிவகுமாரை காதலிக்க துரத்தியவர். அது கைகூடவில்லை. இப்போது சிவகுமாரது மகனை தன் மகளைவிட்டு காதலிக்கப்போகிறார் என்ற செய்திகள் வந்தன.

இதனால்தான் சூர்யா நடிக்க மறுத்து விலகியதாக தகவல்கள் உலாவின.

சூர்யா அதனை மறுக்கிறார். "அப்படத்தில் இரட்டை அர்த்த வசனங்கள் இருந்தன. மாற்று மாறு கேட்டும், அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை அதுதான் விலகிக் கொண்டோம்" என்று கூறுகிறார்.

## ஓய்வு

'அமர்க்களம்' படப்பிடிப்பு முடிந்ததும் மூன்று மாதம் ஓய்வெடுக்கப் போகிறார் அஜித்குமார்.

மூன்று மாதமும் வெளிநாட்டில் கழிக்க போகிறார். இம்முறை அழைத்துப்போக ஹீரா இல்லை. வேறு யாரை அழைத்துப் போகப்போகிறாரோ?


படிப்பகம்

## என் டைரியில் இருந்து...

ஒன்று ஐந்து
தொண்ணூற்று ஏழில்
ஒருவரை
ஒருவர்
நோக்கினோம்.
*
இரண்டு ஆறு
தொண்ணூற்று ஏழில்
இருவரும்
ஒருவராக,
நான்
விண்ணப்பித்தேன்.
*
எட்டு ஏழு
தொண்ணூற்று ஏழில்
நீ என்னை
ஏற்றுக் கொண்டாய்
என எழுதித்தந்தாய்!
*
ஆறு எட்டு
தொண்ணூற்று ஏழில்
ஆற அமர
ஆறு மணிநேரம்
பேசினோம்!
*
மூன்று ஒன்பது
தொண்ணூற்று ஏழில்-நீ
முதல்
முத்தம்
தந்தாய்!
*
ஏழு பத்து
தொண்ணூற்று ஏழில்
எல்லோரும்
பார்க்க
'பாக்கில்'
'வோல்ஸ்'
குடித்தோம்.
*
இருபது
பதினொன்று
தொண்ணூற்று ஏழில்
இதயத்துக்குள்
கனவுகளை
நிரப்பிக் கொண்டேன்.
*
பதினாறு பன்னிரெண்டு
தொண்ணூற்று ஏழில்
கடற்கரை மணலில்
புதுக்கவிதை
எழுதிப் பழகினோம்.
*
ஒன்று ஒன்று
தொண்ணூற்று எட்டில்
ஒன்றாக
புகைப்படம்
எடுத்துக் கொண்டோம்.
*
எட்டு இரண்டு
தொண்ணூற்று எட்டில்.
என் அப்பாவிடம்-நான்
ஏச்சு
வாங்கினேன்.
*
ஐந்து மூன்று
தொண்ணூற்று எட்டில்
அம்மாவிடம்-உன்னை
பெண்கேட்க
அனுமதி வாங்கினேன்.
*
ஒன்று நான்கு
தொண்ணூற்று எட்டில்
நீ என்னை
ஒட்டுமொத்தமாய்
ஏமாற்றினாய்!
நான் ஒரு
முட்டாளாய்...!

பாலகமலன்-
கிழக்கு வளாகம்.

தேன் கிண்ணம்

## நீங்காத நினைவுகள்

மௌனத்துக்கு
கூட
ஆயிரம் அர்த்தங்கள்
உன்னுள்
புதையுண்டுபோன
இரகசியங்கள்
தோண்டப்படாதவையாக.
**
கனவுகளுக்கும்
இந்த
கணப்பொழுதுக்கும்
இடையே
எதைக்கொண்டு
பாலங்கட்டுவது....?
**
எட்டமுடியாத
தூரத்து
விண்மீன்களை
கைகளுக்கிடையே
சிறகடித்து திரியும்
பட்டாம் பூச்சியாக
நினைத்தது
தவறுதான்!
**
விடிவைத் தேடாத
விழிகள்
ஒரு நிரந்தர
இரவை தேடுகின்றன!
**
நிரப்பப்படாத
இடைவெளியாய்
நீண்டுகொண்டே
சிந்தனைகள்...!
சிந்தனையை
திசைத் திருப்ப
இது என்ன
மகாவலி கங்கையா?
**
உன்
ஞாபகங்களை
காற்றினில் -
எறிந்துவிட்டு
எப்படி
தனிமையில்
செல்ல முடியும்?
**
நினைவுகளை
கழட்டிவிட்டுப்போக
இது ஒன்றும்
செருப்பல்ல,
**
நீ விதைத்து
என்னுள்
வியாபித்து இருக்கும்!
இனி
எதை மறப்பது?

- இணுவை உத்திரன்.

## இதற்குதானா....?

என்
காதலைச் சொல்ல
உன் பின்னால்
நான் வரும்போதெல்லாம்
'பின்னால் வரும்
பேருந்தைக் கண்ட
தனியார் பேருந்துபோல்'-நீ
பறந்து போவாயே...
ஞாபகம் இருக்கிறதா...?
..
எனக்குள் எழுந்த
துணிச்சலால்
ஒரு கடிதத்தை
உனக்கு நீட்ட
'செய்யாத தவறை செய்த
குழந்தையை கண்டிக்கும்
தாயைப்போல்'
'பளார்' என்று அறைந்தாயே...
ஞாபகம் இருக்கிறதா...?
..
அறைவாங்கியும்
உன்னை மறக்க முடியாமல்
உன்னைப் பார்க்க வந்து
உன்
உறவுக்காரர்களிடம்
உதைவாங்கி தந்தாயே...
ஞாபகம் இருக்கிறதா...?
..
அடியே...!
இவையெல்லாம்
வட்டிக்கடை கஞ்சன்
தொப்பை வடிவேலுவுக்கு
பொண்டாட்டியாகத்தானா...?

இராம். யுவராஜ், கண்டி.




தவழும் இந்தக் குழந்தை தற்போதைய இந்திய துடுப்பாட்ட வீரர். கண்டுபிடிக்க முடியாதவர்களுக்கு விடை உதவி 18ம் பக்கம்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கீர்ணர்'

**09.05.99 முதல் 15.05.99வரை**

**மேடம்:**
இவ்வாரம் சனி நீசபலம் பெறுவததாலும் சுக்கிரன் ஸ்தானபலம் பெறுவதாலும் எதிர்பார்த்த கருமங்கள் நிறைவேறும். குடும்ப சிக்கல்கள் தீரக் கூடியவாறு அமையும். தொழில் பணவருவாய் ஓரளவு சிறப்பைக் கொடுக்கும். நோய் துன்பங்கள் குணமடையும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 12, 15.

**இடபம்:**
வியாழன் 11ம் இடத்தில் ஆட்சிபலம் பெறுவதும் கிரக அமைப்புக்கள் பலம் பெறும். குடும்பத்தில் தடைப்பட்ட கருமங்கள் வெற்றியைக் கொடுக்கும். தூர இடத்து செய்தி மனதை மகிழ்விக்கும். கல்வி வளர்ச்சி பெறும். காரியசித்தியும் பண உதவியும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 14, 10.

**மிதுனம்:**
ஆதிக்க வலுவுடைய புதன் வீட்டில் சனி 11ம் இடத்தில் நீச பலம் பெறுவதும் எடுத்த விடயங்கள் கைகூடும். ஆனால் 10ம் இடத்து வியாழன் அலைச்சல் கரைச்சலைக் கொடுக்கும். மனதில் புலம்பல் காணப்படும். பணச் செலவுகளைக் கொடுக்கும். உடல் பலமாக இருக்காது.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 10, 13.

**கடகம்:**
இவ்விராசியினருக்கு பாக்கியல்தான வியாழனும் 7ம் இடக் கேதுவும் பற்பல சிறப்புக்கள், வெற்றிகள் எனத் தந்தாலும் உடலில் நோய் துன்பங்கள் வந்து போனபடி காணப்படும். உறவினர், நண்பர்களது வரவு காணப்படும். எடுத்த கருமங்கள் பல சிக்கல்கள் மத்தியில் நிறைவேறும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 11, 15.

**சிம்மம்:**
அட்டமத்து வியாழன் அலைச்சல் கரைச்சலை தந்தாலும் புதியஸ்தானம் கிடைக்கும். உறவினர்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். தடைப்பட்ட காரியங்கள் காரிய சித்தி அடையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

**கன்னி:**
அட்டமத்துச் சனி பல விடயங்களில் தடைகளைக் கொடுத்தாலும் பண வரவு, தொழில் சிறப்படையும். எடுத்த கருமங்கள் கைகூடும். காரியசித்தி ஏற்படும். உடலில் நோய் துன்பங்கள் ஏற்படும். ஆலய தரிசனம், போசன சுகம் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 14, 15.

**துலாம்:**
கிரகபலம் ஒன்று சேருவதால் மனதை வாட்டிய நெடுநாள் கஷ்டங்கள் மனதை விட்டு அகலும். கல்வி, தொழில் சிறப்பைக் கொடுத்தபடி அமையும். சகோதரர்களின் உதவியும் வாழ்த்தும் மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 10, 14.

**விருட்சிகம்:**
சனி 6ம் சுகஸ்தானத்தில் உள்ளதாலும் வியாழன் 5ஆட்சிபலம் பெறுவதாலும், குடும்பத்தில் உள்ள கஷ்டம் கரைச்சல்கள் தீரக்கூடிய வழி பிறக்கும். எடுத்த விடயங்கள் வெற்றியளிக்கும். புதிய முயற்சிகள், தொழில் வாய்ப்புக்கள் தொடர வாய்ப்புகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 2.
அதிஷ்ட திகதிகள் : 13, 14.

**தனுசு:**
ஓரளவு கிரகபலம் உள்ளதால் எடுத்த கருமங்கள் தடைதாமதத்துடன்தான் நடைபெறும். மன உறுதி காணப்படும். கணவன் குடும்ப உறவில் பிரச்சனைகள் வந்துபோகும். வார இறுதியில் உத்திராட நட்சத்திரகாரருக்கு முன்னேற்றமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

**மகரம்:**
சனியோகக்காரனாக உள்ளதாலும், கிரக சஞ்சாரம் சாதகமாக உள்ளதாலும் எடுத்த விடயங்கள், திருமண முயற்சிகள் கைகூடும். உறவினர்களின் மூலம் சிக்கல் ஏற்படும். கல்வி, தொழில் சிறப்படையும். திருவோண நட்சத்திர காரருக்கு பல வழிகளிலும் நன்மையான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 4.
அதிஷ்ட திகதிகள் : 10, 15.

**கும்பம்:**
சனி 3லும் வியாழன் 2லும் இவ் விராசிகாரருக்கு பெருமையாக இயங்குவதால், வியாபாரம், தொழில் முயற்சிகள் சிறப்பைக் கொடுக்கும். காரிய வெற்றி ஏற்பட வாய்ப்பும், பணவசதி காணப்படும். சதய நட்சத்திரகாரர்கள் கவனம் எடுக்கவும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண் : 1.
அதிஷ்ட திகதிகள்: 10, 11.

**மீனம்:**
ஏழரைச் சனிகால முடிவும் ஜென்மக் குரு வீட்டில் ஆட்சிபலத்துடன் உள்ளதால் தூர இடத்துச் செய்தி மனதை திருப்திசெய்யும். பொருளாதார வசதிகள் மேம்படும். உத்திரட்டாதி நட்சத்திரகாரர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 14, 10.

## அடுப்போடு நெருப்பு



வன்னியில் எடுக்கப்பட்ட நிகழ்கால காட்சி இடம்பெயர்வு அவலம். போக்குவரத்து தடைகள். பொருளாதார முற்றுகை. துரத்தும் ஷெல்கள். பொழியும் குண்டுகள். இத்தனையையும் எதிர்கொண்டும் நிமிர்ந்து நிற்கிறது மானிடம்.

தம்மை மனிதர்களாகவே கருத மறுப்போரை எண்ணி இந்த அடுப்பைவிட கொதிக்கும் இங்குள்ள மனிதர் நெஞ்சுகள்! அடுப்போடு அருகில் சிறு நெருப்பு! எரிப்பதற்காக எழ நேரமாகாது! இதனைத் தடுக்க வேண்டுமானால் தகுந்த தீர்வுடன் போரைப் புதைக்க வேண்டும்.

## ஹலோ டாக்டர்



**கேள்வி: சில குழந்தைகளுக்கு காலை எழுந்தவுடன் வாய் துர்நாற்றம் இருக்கும். பல் துலக்கியபின் இருக்காது. இதனால் பின் விளைவுகள் ஏதேனும் ஏற்படுமா?**

**பதில்:** குழந்தைகளை இரவு படுக்கச் செல்லும் முன்னும் பல் துலக்கச் செய்ய வேண்டும். காலை எழுந்தவுடன் மட்டும் துர்நாற்றம். மற்ற நேரங்களில் இல்லையெனில், இது குறித்து கவலைப்பட வேண்டாம். மற்ற நேரங்களில் துர்நாற்றம் இருந்தால் அதற்கு பற்களின் ஈறுகளில் உள்ள நோயோ, நுரையீரல் மற்றும் உணவுப் பாதையில் உள்ள நோயோ காரணமாக இருக்கலாம்.

★★

**கேள்வி: சிலருக்கு உள்ளங்கை, உள்ளங்கால்களில் அடிக்கடி வியர்வை ஏற்படுகிறது. இதற்குக் காரணம் என்ன?**

**பதில்:** இந்தப் பிரச்சனைக்கு மன உளைச்சல் (Anxiety) காரணமாக இருக்கலாம். மிக அரிதாக தோல் தடிமன் நோய் காரணமாகவும் இப்பிரச்சனை இருக்கலாம். பெரும்பாலும் இப்பிரச்சனை தானாக நின்றுவிட வாய்ப்புண்டு. தேவையெனில் மனநல மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம். வியர்வை வடிந்து, எழுதுவது போன்ற வேலைகள் தடைபடுமானால் ஃபோர்மலின் (Formalin 40%) கரைசலைக் கொண்டு கையைக் கழுவி துணியால் துடைத்து விடவும் (தண்ணீர் கொண்டு கழுவக்கூடாது) இதனால் சில மணி நேரங்களுக்கு வியர்வை தடைப்படும்.

## நில்-கவனி-முன்னேறு

அமரர் கிருபானந்த வாரியாரின் 'ஒரு வரிப் பதில்கள்' என்ற நூலிலிருந்து உருவியது.

**எது பத்தியம்?**
தாமம்
**எது விஷம்?**
பெரியோர் வார்த்தையை அலட்சியம் செய்வது.
**எல்லாருக்கும் பயத்தைத் தருவது எது?**
மரணம்.
**நம்மை எல்லாரும் மதிப்பதற்கு உரிய தன்மை யாது?**
யாரிடமும் எதையும் கேட்காதிருத்தல்.
**அளவிட முடியாதது எது?**
பெண்களின் நடை
**வறுமை யாது?**
திருப்தி இன்மை.
**கீழ்மை யாது?**
மூடர்களிடம் யாசிப்பது.
**சவுக்கியம் எது?**
எல்லாவற்றையும் விட்டு விடுதல்.
**மரணத்தை விடப் பெரியது எது?**
அசட்டுத்தனம்.



**விலை மதிக்கப்படாதது எது?**
சமயத்தில் கொடுத்தது.

**அலட்சியம் செய்ய வேண்டியது எது?**
கெட்டவர்கள், பிறருடைய தாரம், பிறருடைய பொருள்.
**பகைவன் யார்?**
சோம்பேறித்தனம்.
**சூரன் யார்?**
துன்மார்க்கத்தில் மனதைப் போகவிடாமல் அடக்குகிறவன்.
**சமர்த்தன் யார்?**
பெண்களின் நடையினால் வஞ்சிக்கப்படாதவன்.
**விழிப்புள்ளவன் எவன்?**
விவேகமுள்ளவன்.
**குருடன் யார்?**
படித்திருந்தும் கெட்ட காரியங்களைச் செய்பவன்.
**செவிடன் யார்?**
நன்மையைக் கேட்காதவன்.
**ஊமை யார்?**
தகுந்த வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்ல முடியாதவன்.

**குருடனைக் காட்டிலும் குருடன் யார்?**
ஆசையுள்ளவன்.
**திருடர்கள் யார்?**
ஐம்பொறிகளை இழுத்துக் கொண்டு போகும் செயல்கள்.
**தாமரையிலைத் தண்ணீர்போல நிலை இல்லாதன எவை?**
இளமை, செல்வம், ஆயுள்.
**நண்பன் யார்?**
பாவம் செய்யாது தடுப்பவன்.
**அழகு எது?**
சீலம்.
**பொறுமையை யாரிடம் கற்றுக் கொள்ளவேண்டும்?**
மரத்திடம்.
**புகழப்படுவது எது?**
வள்ளல்தன்மை.
**இலட்சுமி யாரை விரும்புவாள்?**
தூய மனதுடைய நீதி தவறாத நடையுடையவனை.
**இலட்சுமி யாரை விட்டு விரைவில் விலகுவாள்?**
ஆன்றோர்களை, குருவை நிந்திக்கும் சோம்பேறித்தனம் உடையவனை.
**விஷம் எங்கிருக்கிறது?**
துஷ்ட ஜனங்களிடத்தில்.
**தீராப் பகைவன் யார்?**
காமம்.

**பயம் எது?**
பணந்தான்.
**எவன் சுகமுள்ளவன்?**
திருப்தியுள்ளவன்.
**எவன் முன்னுக்கு வருவான்?**
விநயமுடையவன்.
**எவன் நஷ்டமடைவான்?**
கர்வமுள்ளவன்.
**எவனை நம்பக் கூடாது?**
எப்பொழுதும் பொய் சொல்பவனை.
**உயிருக்குக் காரணம் யார்?**
மழை.
**யாருக்குத் துக்கமில்லை?**
கோபமுற்றவனுக்கு.
**கண்கண்ட தேவதை யார்?**
தாயார்.
**பூஜிக்க வேண்டிய குரு யார்?**
தகப்பனார்.
**எது முக்கியம்?**
தான் மகிழ்ச்சியாக இருப்பதை விட, மற்றவர்க்கு மகிழ்ச்சியைத் தருவது.
**பெருஞ்செல்வம் எது?**
திருப்தி.
**அதமன் யார்?**
"என்னுடையது என்னுடையது, உன்னுடையதும் என்னுடையதே என்பவன்."


படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குளிப்பது எப்படி?



குளிர்ந்த நீரில் குளிப்பதுதான் நம் நாட்டு வெப்பநிலைக்கு மிகவும் ஏற்றது.

குளிர்ந்த நீரில் அதுவும் அதிகாலையில் ஆறு மணிக்குள்ளாகக் குளிப்பது மிக நல்ல பழக்கமாகும். அதாவது சூரியனின் கதிர்கள் மேலெழும்பி வருவதற்குள் குளிக்க வேண்டும், என்று எமது முன்னோர்கள் கூறுவர்.

முடியுமானால் மாலையில் சூரியன் மறைந்த பின்பு மாலையிலும் ஒருமுறை குளிக்கலாம். இந்த நேரங்களில் தண்ணீரின் வெப்பமும், நம் உடலின் வெப்பமும் ஒரே அளவில் இருப்பதால், உடலில் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

ஆனால், நல்ல உச்சிவெய்யில் கொளுத்தும் நேரத்தில், குளிர்ந்த நீரில் குளிக்கக் கூடாது. அந்த வெப்பத்திற்கும் தண்ணீர் வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் நமது உடலுக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தும். பொதுவாக எப்போது குளித்தாலும் நம் உடலின் வெப்ப நிலைக்குச் சமமான வெப்பநிலையில் உள்ள நீரிலேயே குளிக்க வேண்டும்.

மேலும் எப்போது குளித்தாலும் தலைக்கும் சேர்த்தே குளிக்க வேண்டும், என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். சிலர் முகத்தை மட்டும் கழுவிக்கொண்டு தலையை நனைத்துக் கொள்ளாமல் விட்டுவிடுகின்றனர். இது தவறாகும்.

இதற்கு விஞ்ஞான ரீதியாக விளக்கம் தரப்பட்டுள்ளது. நம் உடலில் உள்ள நரம்பு மண்டலம் தான் குளியலின் மூலம் முக்கியமாகப் பயன்பெறுகிறது.

நரம்பு மண்டலம் இருவகைப்படும். அஃபெரண்ட் நரம்புகள், எஃபெரண்ட் நரம்புகள் ஆகும். அஃபெரண்ட் நரம்புகள் மூளையிலிருந்து மற்ற உறுப்புக்களுக்குச் செய்திகளையும் உத்தரவுகளையும் எடுத்துச் செல்லும்.

எஃபெரண்ட் நரம்புகள் நம் உறுப்புக்களில் ஏற்படும் உணர்ச்சிகளையும் மற்ற செய்திகளையும் மூளைக்கு எடுத்துச் செல்லக்கூடியன.

நாம் குளிக்கும்போது, இந்த அஃபெரண்ட், எஃபெரண்ட் ஆகிய இருவகை நரம்புகளிலும் உள்ள அதிக வெப்பம் சமமாகிப் புத்துணர்ச்சி பெறவேண்டும். தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் குளிக்காவிட்டால், இந்த அஃபெரண்ட் நரம்புகள் தூண்டப்படாது. ஆனால் இதற்குச் சில விதிவிலக்குகளும் உண்டு.

அதாவது பீனிச நோய் உள்ளவர்கள் தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் குளிக்கவே கூடாது. உடலின் வெப்பத்துக்கேற்ற சூடுள்ள நீரில்தான் குளிக்க வேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போதும் இத்தகையவர்கள் வெந்நீரில்தான் குளிக்க வேண்டும்.

## அழகோ அழகு



* காலையில் குளிக்கும் முன் ஒலிவ் எண்ணெயை முகத்தில் தடவி விரல்களால் முகத்தை மசாஜ் செய்து பின் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி வந்தால் முகம் பொலிவு பெறும்.
* ரோஜா இதழ்களை தண்ணீரில் வெகு நேரம் போட்டுவைத்துப் பிறகு, அத் தண்ணீரால் முகம் தேய்த்து வந்தால் முகம் ரோஸ் நிறமடையும்.
* இளஞ் சூடுள்ள தண்ணீரில் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து, அதில் கை விரல்களை அழுத்தி வைத்து வந்தால் நகங்கள் சுத்தமாகி அழகாகக் காட்சியளிக்கும்.
* புதினா இலையை அரைத்துத் தடவினால், பருக்களும் அதன் அடையாளங்களும் மறைந்து விடும்.
* முட்டையின் வெள்ளைக் கருவோடு, அதேயளவு தயிரையும் கலந்து தலைமுடியின் மயிர்க்கால்களில் படும்படி அழுத்தித் தேய்த்து இரண்டு மணி நேரங்கழித்து, சீயக்காய் தூள் தேய்த்துக் குளித்து வந்தால் கூந்தல் அடர்த்தியாகவும் நீண்டும் வளரும்.
* தண்ணீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து குளித்து வந்தால் உடம்பிலிருந்து வீசும் துர்நாற்றம் போய்விடும்.
* காலில் பித்தவெடிப்பு இருந்தால் ஒரு கரண்டி ஆமணக்கு எண்ணெயில் அதேயளவு சுண்ணாம்பு கலந்து குழைத்து, இரவில் படுக்கப்போகுமுன் பித்த வெடிப்புக்களின்மீது தடவி வந்தால் விரைவில் பித்தவெடிப்புக்கள் மறைந்து விடும்.
* மயக்கம் நீங்க வெங்காயத்தை நசுக்கி மூக்கருகில் காட்டினால் மயக்கம் தெளிந்துவிடும்.
* இருமலுக்கு சோற்றில் கொஞ்சம் மிளகுத் தூள் போட்டுச் சாப்பிட்டு வந்தால் இருமல் நிற்கும்.
* தேள் கடித்த இடத்தில் புளியங்கொட்டையளவுக்கு சுண்ணாம்பு எடுத்து பழப்புளியுடன் குழைத்துத் தடவினால் கடுப்பு குறைந்து விஷம் இறங்கிவிடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை FR

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-05-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 86

புவனா



ஆகஸ்ட் 30ம் திகதி சனிக்கிழமை, பாரிஸ் நகரின் வடக்கே உள்ள லாபௌகென் விமானத் தளத்தில் டோடியும், டயானாவும் சென்ற விமானம் தரையிறங்கியது.

டோடியின் பாரிஸ் நகர இல்லம் சாம்ப் எலிசீஸ் என்ற பகுதியில், ஆர்க் டி ட்ரியோம்ஃபே என்னும் நிறுவனத்துக்கு முன்பாக அமைந்திருந்தது.

டோடியும், டயானாவும் பாரிஸ் வருவதற்கு முன்னரே இந்த இல்லம் டோடியின் தந்தையினால் மெருகூட்டப்பட்டது.

காதலர்கள் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளும் இங்கு செய்யப்பட்டன.

அரச போகத்தில் வாழ்ந்த டயானாவுக்கு பொருத்தமாக குளியல் அறை முதல், படுக்கையறை வரை வசதி செய்யப்பட்டிருந்தது.

டயானா–டோடி இருவரும் மிக இரகசியமாக தமது பயணத் திட்டத்தை வகுத்திருந்தனர்.

ஆனாலும் விமான நிலையத்தில் அவர்கள் வந்து இறங்கியது உடனடியாக கசிந்து விட்டது.

பத்திரிகையாளர்களையும், புகைப்படப் பிடிப்பாளர்களையும் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

கார்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், வாடகை டாக்ஸிகளிலும் விமான நிலையம் நோக்கிப் பறந்தனர்.

அவர்களுக்கு அங்கு ஏமாற்றம் காத்திருந்தது. டயானாவும், டோடியும் விமான நிலையத்திலிருந்து கார் ஒன்றில் சென்றுவிட்டனர்.

### தேடுதல்

பட்சிகள் பறந்துவிட்டன. அதனால் என்ன? பிரான்சில், அதுவும் இந்த பாரிஸ் நகரில் தானே எங்கோ இருக்க வேண்டும். பிடித்து விடலாம்.

செய்தியாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர்.

அதற்கிடையே உலகின் மிகப் பெரும் செய்தி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு புகைப்படப்பிடிப்பாளர்கள் பலர் பேரம் பேசியும் முடித்தனர்.

"அருமையான புகைப்படமாக எடுத்துத் தந்தால், பணம் ஒரு பிரச்சனை கிடையாது. தாராளமாகத் தருவோம்!" என்று அந்தச் செய்தி நிறுவனங்கள் ஆசை காட்டியிருந்தன.

எப்போதாவது ஒருமுறைதான் இத்தகைய உலகப் பரபரப்பான புகைப்படங்களை எடுக்க சந்தர்ப்பம் கிடைப்பதுண்டு.

எனவே, கிடைத்த சந்தர்ப்பத்தை தவற விடுவார்களா?

பாரிஸில் டோடி குடும்பத்துக்குச் சொந்தமான மாளிகைகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்று ஆராய்ந்து ஒரு பட்டியல் போட்டனர்.

அவற்றில் வின்சர் மாளிகையும் முக்கியமானது.

அங்குதான் அநேகமாக தங்கியிருப்பர் என்றே பலரும் நினைத்தனர். வின்சர் மாளிகை முன்பு தொலைதூர காட்சிகளையும் துல்லியமாக படம் எடுக்கும் கமராக்களோடு சென்று காத்திருந்தனர்.

வின்சர் மாளிகையின் பிரமாண்டமான சன்னல்களில் தலைக்கறுப்பு தெரிந்தால் போதும், பதுங்கியிருந்த புகைப்படப்பிடிப்பாளர்கள் உஷாராகிவிடுவர்.

எப்படித்தான் காத்திருந்தும் ஏமாற்றமே மிஞ்சியது.

டோடியின் பல மாளிகைகளை கண்டறிந்து வட்டமிட்ட படப்பிடிப்பாளர்களால், சாம்ப் எலிசீஸ் பகுதியில் இருந்த உல்லாச மாளிகையை மட்டும் கடைசி வரையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

### குளியல்

புகைப்படப்பிடிப்பாளர்கள் தம்மை வலை வீசித் தேடிக்கொண்டிருக்க டோடியும், டயானாவும் உல்லாச மாளிகையில் தங்கள் பொழுதை இன்பமாகக் கழித்துக் கொண்டிருந்தனர்.

டயானாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த படுக்கையறையில், டயானாவுக்கு பொருத்தமான மாற்றுடைகள் தொங்க விடப்பட்டிருந்தன. அதன் அருகே டோடிக்குரிய உடைகளும் தொங்கிக் கொண்டிருந்தன.

தமது ஆடைகள் அருகருகே தொங்குவதைப் பார்த்த டயானா, டோடியை அர்த்த புஷ்டியுடன் நோக்கினார். டோடி கண்சிமிட்டினார்.

தம்பதியினரது ஆடைகள்தான் அவ்வாறு அருகருகே தொங்குவது வழக்கம்.

டயானா தன்னுடன் கரடிப் பொம்மையை எடுத்துச் சென்றிருந்தார்.

அந்தப் பொம்மையை படுக்கை அறையின் அழகான ஓரிடத்தில் வைத்தார்.

இருவரும் கட்டியணைத்து மென்மையாக முத்தமிட்டுக் கொண்டனர். பின்னர் இருவரும் இணைந்து குளிக்கச் சென்றனர்.

## டயானா கொடுத்த பரிசு



டோடியும், டயானாவும் ஒன்றுசேர்ந்த சந்தோஷத்தோடு அல் ஃபாயிட்

குளியலறை வட்ட வடிவமாக அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

நீர் வரும் குமிழ்கள் தங்கமுலாம் பூசப்பட்டிருந்தன. அந்த குளியலறைக்கு மட்டுமே கோடி ரூபாய்கள் செலவிட்டு மெருகூட்டியிருந்தனர்.

அரச குடும்ப குளியலறைக்கு ஈடாக இருந்தது. அந்தக் குளியல் அறையில் முயல் பொம்மையை வைத்தார் டயானா.

பின்னர் இருவரும் விசாலமான குளியல் தொட்டியில் இறங்கினார்கள். ஒருவரை ஒருவர் சீண்டியபடியும், முத்தங்களைப் பரிமாறிக் கொண்டும் நேரம் போவதே தெரியாமல் பல மணிநேரம் இருந்தனர்.

### பரிசு

படுக்கை அறையில் உடை மாற்றிக் கொண்ட பின்னர், தன் பையிலிருந்த பொருள் ஒன்றை எடுத்து டோடியின் தலையணைக்கு கீழே வைத்தார் டயானா.

அது ஒரு பரிசுப் பொருள். டோடிக்கு சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் இருந்தது. சுருட்டு நுனியைக் கத்தரிக்கும் கருவி ஒன்றையே டயானா கொண்டுவந்திருந்தார்.

தங்கத்தலான அக் கருவியின் மீது 'டயானாவிடமிருந்து ஆழ்ந்த காதலுடன்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்பும் பரிசுப் பொருட்களை பரிமாறிக் கொண்டபோதும், அன்று அத்தகைய இதமான சூழலில் பரிசுப்பொருள் பரிமாறுவது மனதுக்கு சுகமாக இருந்தது.

தலையணைக்கடியில் அதனைக் கண்ட போது டோடி சின்னக் குழந்தை போல துள்ளிக் குதித்தார்.

டயானாவுக்கு தருவதற்காக விலை உயர்ந்த பரிசு ஒன்று டோடியிடம் இருந்தது.

அதனை டோடி தன் கையில் வைத்து காட்டியபோது டயானாவின் கண்கள் அகல விரிந்தன.

அது ஒரு மோதிரம். விலை உயர்ந்த மோதிரம். "இதனை என் தந்தையின் முன்பாக உனக்கு அணிவிக்கப் போகிறேன்" என்று கூறி விட்டு, தன்னிடமே வைத்துக் கொண்டார் டோடி.

உணவு அருந்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. டயானா படுக்கையறையில் இருந்த மேசையில் கிடந்த ஃபைல்களை தட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஏதேச்சையாக அவர் பார்வையில் விழுந்தது அந்தக் கடிதங்கள். எல்லாமே கிளுகிளுப்பான கடிதங்கள்.

"டோடி" என்று கோபத்தோடு குரல் கொடுத்து அழைத்தார் டயானா.

அந்தக் கடிதங்கள் யாருடையவை? டயானாவை எப்படி சமாளித்தார் டோடி. என்ற விபரங்களும் கிளுகிளுப்பானவை தான்.

(அடுத்த வாரமும் வரும்)



பாரிஸ் செல்வதற்கு விமானத்தில் ஏறுகிறார் டயானா.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ திருமதி ஆர். மகாலட்சுமி, என்பீல்ட் எஸ்டேட், டிக்கோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்

### வைர மோதிரப் போட்டி

* முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
* 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
* பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
* இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு ஏ வைர மோதிரப் போட்டி





நாடு காப்ப தற்கே-உனக்கு
ஞானம் சிறிதுமுண்டோ?
வீடு காக்கப் போடா!-அடிமை!
வேலை செய்யப்போடா!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# விவேகம் வென்றது!



ஒருநாள் இரவு சில திருடர்கள் ஒரு வீட்டிற்குள் புகுந்தார்கள்.

அந்த வீட்டில் ஒரு வயதானவர் மட்டுமே இருந்தார். மற்ற அனைவரும் அவரை வீட்டைப் பார்க்கச் சொல்லி விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார்கள்.

கொஞ்சநாட்களாகவே திருடர்களின் நடமாட்டம் அந்த ஊரில் அதிகரித்திருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார் அந்த வயதானவர்.

எனவே அன்று பின்னேரமே அவர் வீட்டிலிருந்த விலையுயர்ந்த பொருட்களையெல்லாம், ஒரு பெரிய பழைய பெட்டி ஒன்றுக்குள் போட்டு வைத்திருந்தார்.

அவரது வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கு ஏதாவது பொருட்கள் அகப்படுமா என்று அங்குமிங்கும் தேடிக் கொண்டிருந்தனர்.

இவற்றையெல்லாம் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த, வயதானவர், விலையுர்ந்த பொருட்களைப் போட்டு வைத்திருந்த பெட்டிக்குள் தானும் பதுங்கிக் கொண்டார். பின் பெட்டியை உட்புறம் பூட்டிக் கொண்டார்.

வீடு முழுவது தேடியும் விலைமதிப்புள்ள ஒரு பொருளையும் திருடர்களால் திருட முடியவில்லை.

அவர்களில் ஒருவன் அந்தப் பழைய பெட்டியைப் பார்த்து விட்டான். அந்தப் பெட்டியைத் திறந்து பார்ப்பதற்காக அதன் மேல் கையை வைத்தான். இந்தச் சத்தம் உள்ளே இருந்த வயதானவருக்குக் கேட்டது.

உடனே அவர் உள்ளே இருந்தபடி,

"உள்ளே நான் தான் இருக்கிறேன்!" என்று குரல் கொடுத்தார் வயதானவர்.

"உள்ளே என்ன செய்து செய்து கொண்டிருக்கிறாய்? "என்று திருடர்கள் கேட்டார்கள்.

"நீங்கள் திருடுவதற்காக என் வீட்டிற்குள் நுழைந்ததை நான் பார்த்தேன். திருடிச் செல்வதற்கு இந்த வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் எதுவும் இல்லை என்பது எனக்குத் தெரியும்.

அதனால் எனக்கு வெட்கமாக இருந்தது. அதனால்தான் இந்தப் பெட்டிக்குள் வந்து நான் ஒளிந்து கொண்டேன்!" என்று சொன்னார் வயதானவர்.

இதைக் கேட்ட திருடர்கள், அவர் சொன்னது உண்மைதான் என நம்பி பேசாமல் சென்று விட்டார்கள்.

வயதானவரின் விவேகத்தால், அவர் திருடர்களை வென்று தமது பொருட்களைக் காப்பாற்றினார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!






→ மத்தியகால ரோம ராச்சியத்தில் குற்றவாளிகளை மார்க்கஸ் ஔரேலியஸின் வெண்கலச் சிலை அமைந்துள்ள குதிரையின் காதிலிருந்து தொங்கும் கயிற்றில் தொங்கவிட்டு தூக்கிலிடுவார்கள்

← ஆபிரிக்காவின் இர்டி பழங்குடிப் பெண்கள் தமது அழகை வளர்க்க உதடுகளில் குச்சியைக் குத்திக்கொள்வார்கள்.

↓ மெப்ஃபிஸ் என்னுமிடத்தில் உள்ள ஷெரடான் பீ-பாடி ஹொட்டல் கட்டடத்தின் உச்சியில் சரிந்த மேற்கூரையில் வாத்துக்கள் வசிக்கிறன. இவை தினமும் லிஃப்ட் (உயர்த்தி) மூலம் வழியாக இறங்கி அணி வகுத்து நடந்து நீந்திச் செல்லும்.



## ஆசிய விளையாட்டுப் போட்டி



* ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எவ்வாறு ஆரம்பித்தன?

இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு, ஆசிய நாடுகள் அனைத்தும் இணைந்திருப்பது நல்லது என்ற எண்ணம் தோன்றியது. 'விளையாட்டுப் போட்டிகள் நடப்பதன் மூலம் நாடுகளின் ஒற்றுமையும் பண்பாடும் சிறந்தோங்கும்' என்று இந்தியா ஒரு கருத்தை முன் வைத்தது. அதன் மூலம் உருவானதுதான் ஆசிய விளையாட்டுப் போட்டிகள்.

* முதன் முதலில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எங்கு நடைபெற்றன?

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் 1951ம் ஆண்டு முதன்முதலாக நடைபெற்றது.

* எத்தனை வருடத்திற்கொருமுறை இப்போட்டிகள் நடைபெறுகின்றன?

ஒலிம்பிக் போட்டிகளைப் போன்று 4 வருடங்களுக்கு ஒரு முறை இப்போட்டிகள் நடைபெறுகின்றன. கடைசியாக 1998ல் தாய்லாந்தின் பாங்கொங் நகரில் நடைபெற்றது.

* இதில் எந்த நாடுகள் அதிகளவு தங்கப் பதக்கங்களைப் பெறுகின்றன?

சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள்தான் அதிகளவு தங்கப்பதக்கங்களைப் பெறுகின்றன.

* அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எங்கு நடைபெறவுள்ளன?

2002ம் ஆண்டு ஒக்டோபர் 14ம் திகதி முதல் நவம்பர் 3ந் திகதிவரை கொரியாவில் நடைபெறவுள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **08.05.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **295**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 293

**பரிசுக்குரியவர்:**
சித்தி ரிஸ்னா,
மஹியங்கன வீதி, பதுளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆர்.நிஷாந்தினி,<br>R.B. தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | ஆர்.விமல் பிரசாத்,<br>பெல்வோர் தேசிய கல்லூரி, டிக்மன்ஸ் வீதி, கொழும்பு-05. |
| எஸ்.சப்ரான் முகமட்,<br>சாகிரா தேசிய கல்லூரி, மாவனல்ல. | ஐ.ஹரிதரன்,<br>றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை. |
| கி.ஷர்மினா,<br>கொ/சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. | த.உத்தரன்,<br>மாத்தளை இந்து தேசிய பாடசாலை, மாத்தளை. |
| சி.உமாரமணன்,<br>தரவளை-தமிழ் வித்தியாலயம், டிக்கோயா. | ஏ.எம்.சப்றாஸ் முகம்மட்,<br>முஸ்லிம் மகாவித்தியாலயம், கண்டற்குளி. |
| டி.எஸ்.கிளின்டன்,<br>கதிரேசன் கனிஷ்ட வித்யாலயம், நாவலப்பிட்டி. | ரி.சுமந்திரன்,<br>மத்திய கல்லூரி, மட்டக்களப்பு. |

## அறிவியல் செய்திகள்

* துத்தநாகம், மக்னீசியம், இரும்பு போன்ற உலோகங்களுடன் நீர்த்த அமிலங்கங்கள் தாக்கம் புரிவதாலேயே ஹைதரசன் தோன்றுகிறது.
* ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு முன்னால் காந்தத்தின் அற்புத ஆற்றல் கண்டறியப்பட்டுள்ளது.
* நெப்டியூன் கோள் சூரியனை ஒரு தடவை சுற்றிவர 165 ஆண்டுகள் ஆகின்றன.
* பூமிக்கடியில் ஆழத்திற்குத் தக்கவாறு வெப்பம் அதிகரிக்கிறது. 3000 மீட்டர் ஆழத்தில் 260 பாகை செண்டிகிரேட்டும், 6000 மீட்டர் ஆழத்தில் 650 பாகை செண்டிகிரேட்டும் வெப்பம் இருக்கும்.
* சுத்தமான யுரேனியம் வெள்ளியைப் போல பளபளப்பாக இருக்கும். காற்றுபட்ட சில நிமிடங்களில் பளபளப்பு மங்கி பழுப்பு நிறமாகிவிடும்.
* ஒரு தேனீயால் ஒரு தடவைதான் கொட்ட முடியும். ஒரு தடவை கொட்டியதும் அதன் கொடுக்கை இழந்து விடும்.
* ஒட்டகங்களுக்கு பார்வை சக்தி மிக அதிகம். ஒரு மைலுக்கு அப்பால் தண்ணீர் இருப்பதைக்கூட ஒட்டகத்தால் எளிதாகக் கண்டு பிடித்துவிடமுடியும்.
* 0 பாகை செண்டிகிரேட்டில் நீர் திரவ நிலையில் இருந்து திடப்பொருளாக மாறுகிறது. இதையே உறைதல் என்று அழைப்பர். 100 பாகை செண்டிகிரேட்டில் இருந்து ஆவியாக மாறுதலை ஆவியாதல் என்பர்.
* நமது கண்களில் அமைந்துள்ள விழித்திரையில் 13 கோடி ஒளி உணர்வுள்ள செல்கள் உள்ளன. இவை அடுக்குகளாக உள்ளன. இவை இழை நரம்புகளால் நடுவிழி நரம்புடன் இணைக்கப்பட்டிருக்கும்.
* ரேடியம் என்பது, இருளில் கூட ஒளி வீசக் கூடிய ஒரு பொருளாகும். யுரேனியத்தை விட பல இலட்சக்கணக்கில் அதிக அளவில் கதிர்வீசும் ஆற்றல் ரேடியத்திடம் அமைந்துள்ளது.
* ஓரிடத்தில் திடீரென்று காற்றின் அழுத்தம் குறைந்து விட்டால் அந்த அழுத்தத்தை ஈடுசெய்ய சுற்றுப்புறக் காற்று அதிவேகத்தில் அவ்விடத்தை நோக்கி வீசும். இந்த நிகழ்ச்சியே புயல் என அழைக்கப்படுகிறது.

## எப்படித் தெரியுமா?



பல்லியின்வால் வெட்டுப்பட்டதும் அது துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். பல்லியின் வால் வெட்டுப்பட்டாலும் அந்த இடத்தில் மீண்டும் வால் முளைத்துவிடும். எப்படி என்று தெரியுமா?

எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இந்த ஆற்றலைப் பெற்றுள்ளது பல்லி. இதன் வால் பகுதியில் உள்ள வால் முள்ளெலும்பு கடினமில்லாத பகுதியாகும். இது எளிதில் துண்டாகி விழுந்து விடும்.

துண்டாகி விழுந்து துடித்துக் கொண்டிருக்கும் வால் பகுதியை எதிரி பார்த்துக் கொண்டிருக்க பல்லி தப்பித்துவிடும். பல்லியின் வெட்டப்பட்ட வால் மறுபடியும் வளர்ச்சி பெற்று விடும்.

இந்த ஆற்றலுக்கு 'இழப்பு சக்தி மீட்டல்' என்று பெயர்.

## கோடை கால விழாக்கள்



* பல்கேரியா நாட்டில் நாட்டிய விழா, இசைவிழா நடக்கும். ஜூலை மாதத்தில் நடக்கும் இவவிழாவின்போது திறந்த வெளியில் நாடகம் நடைபெறும்.
* ஹொங்கொங்கில் கோடை விழா மே மாதம் நடைபெறுகிறது. 'டிங்கு' பிறந்தநாள் இங்கு கோடை விழாவாகக் கருதப்படுகிறது. அன்றைய தினம் மீனவர்கள் தங்களுடைய படகுகளை விதவிதமாக அலங்கரிப்பர். 26ம் வருடத்தில் அதிக மீன்கள் பிடிபட வேண்டும் என்றும் வேண்டிக் கொள்வர்.
* அயர்லாந்தில் மே 1ம் திகதி 'பெல்டைன்' என்னும் பெயரில் கோடை விழா கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் இருபுறமும் நெருப்பை மூட்டி கால் நடைகளை அதன் நடுவில் அழைத்துச் செல்வார்கள். அப்படிச் சென்றால் நோய் நொடிகள் வராது என்பது அவர்கள் நம்பிக்கை.
* இந்தியாவின் கோவா மாநிலத்தில் மார்ச், ஏப்ரல் மாதத்தில் கோடை விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் மக்கள் விதவிதமான முகமூடிகளை அணிந்து வீதிகளில் ஆடிப்பாடி மகிழ்வர்.
* இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் 'பாய் சக்தி' என்னும் கோடை கால விழா கொண்டாடப்படுகிறது. ஏப்ரல் 13ல் நடைபெறும் இவ்விழாவில் கண்காட்சிகள், நடனங்கள், நாடகங்கள் நடைபெறும், கிராமங்களில் படகுப் போட்டி, நீச்சல்போட்டி போன்றவை நடைபெறும்.

www.padippakam.com

# கை 2 உயிர் சிக்கிய மின்னல்


பாக்யமும், வர்ணாவும் பார்வைகளைப் பயத்தோடு மொட்டை மாடிப் பரப்பில் போட நாற்பது வாட்ஸ் பல்ப் வெளிச்சத்தில் இரத்தம் ஸ்டிக்கர் பொட்டுக்களாய்ச் சிதறித் தெரிந்தது.

இரத்தத் துளிகளை அடியொற்றி இருவரும் கலக்கமாய் நடையைப் போட்டார்கள்.

பதினைந்து அடி நடந்திருப்பார்கள்.

ஓவர் டேங்குக்குப் பக்கத்தில் அந்த நாய்க்குட்டி ஒருக்களித்து விழுந்து கிடந்தது.

"பி...ங்...கி...." வர்ணா வீறிட்டுக்



கொண்டே நாயை நோக்கி ஓடினாள்.

பிங்கி துடித்துக் கொண்டிருந்தது. கடைவாயில் இரத்தமும் நுரையும் கலந்த கலவை.

வர்ணா நாய்க்குப் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து அதன் உடம்பை மெல்லப் புரட்டினாள்.

"டேய்... பிங்கி... உனக்கு என்னடா ஆச்சு?" வர்ணா கைபட்டதும் பிங்கி சோர்வாய் ஒரு தடவை கண்களைத் திறந்து பார்த்து மெலிதாய் ஒரு முனகல் முனகிவிட்டு மறுபடியும் நிசப்தமாயிற்று.

பாக்யம் பதட்டமாய்ச் சொன்னாள்,

"வர்ணா...! பிங்கிக்கு சாப்பிட்ட எதுவோ சேரலைன்னு நினைக்கிறேன். அதான். ஃபிட்ஸூம் இரத்த வாந்தியும். நாயை ஒரு துணியில் சுத்தி எடுத்துக்க, பக்கத்துத் தெருவுல வெடினரி டாக்டர் ஒருத்தர் இருக்கார், கொண்டு போய்க் காட்டிட்டு வந்துடலாம்..."

வர்ணா பரபரவென்று செயல்பட்டாள். ஒரு பழைய துணியைக் கொண்டு வந்து நாயின் வாயில் வழிந்து கொண்டிருந்த இரத்தத்தைச் சுத்தம் செய்து-வேறு ஒரு துணியில் சுற்றி எடுத்துக் கொண்டாள்.

"அம்மா...! பிங்கிக்கு எதுவும் ஆமிடாதே...?"

"கொண்டு போய்க் காட்டலாம். அதனோட தலைவிதி எப்படியிருக்குன்னு டாக்டர் கிட்டே போனாத்தானே தெரியும்...!"

"சீக்கிரம் கிளம்பும்மா... பிங்கிக்கு ஏதாவது ஒண்ணு ஆமிடுச்சுன்னா அதை என்னால தாங்கிக்க முடியாது."

இருவரும் வீட்டைப் பூட்டிக்கொண்டு தெருவுக்கு வந்து காலியாகப் போன ஓர் ஆட்டோவை நிறுத்தி ஏறிக்கொண்டார்கள்.

"பக்கத்துத் தெருவுக்குப் போப்பா."

ஆட்டோ கிளம்பியது.

நீளமான அந்த ரோட்டை முடித்துக் கொண்டு பக்கத்துத் தெருவுக்குள் ஆட்டோ நுழைய, பாக்யம் சொன்னாள்,

"அதோ... அந்தப் பச்சை பெயிண்ட் கேட் தெரியுதே அந்த வீடுதான். வாசலிலேயே நிப்பாட்டிக்க... வண்டி வெயிட்டிங்கில் இருக்கட்டும்...."

"மீட்டருக்கு மேல அஞ்சு ரூபா போட்டுக் குடுத்துடணும்மா..."

"வாங்கிக்கப்பா.."

ஆட்டோ வேகத்தைக் குறைத்துக் கொண்டு, பச்சை பெயிண்ட் அடித்த கேட்டுக்கு முன்னால் போய் நின்றது.

டாக்டர்: ரத்னவேல் (வெடினரி) போர்டு காம்பௌண்ட் சுவரின் இடது பக்க ஓரத்தில் தெரிய கேட்டைத்தள்ளிக் கொண்டு இருவரும் உள்ளே போனார்கள்.

வாசல் கதவு சாத்தப்பட்டிருக்க பாக்யம் காலிங் பெல்லுக்குரிய பட்டனை அழுத்தி வீட்டுக்குள்ளே . ஒரு கிளி கூட்டத்தைப் பறக்க வைத்தாள்.

உடனடியாகக் கதவு திறந்தது- ஒரு பெண் எட்டிப் பார்த்தாள்.

"யாரு வேணும்?"

"டாக்டரைப் பார்க்கணும். நாய்க்கு உடம்பு ரொம்பவும் முடியலை..."

"உள்ளே வந்து உட்காருங்க..." கதவை நன்றாகத் திறந்து முன்பக்க அறையைக் காட்டி விட்டுப் போய் விட க்ளினிக் மாதிரி இருந்த அந்த அறைக்குள் போய் சுவரோரமாய்ப் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

பிங்கி ஈனஸ்வரத்தில் முனக, வர்ணா அதன் தலையை மெல்லத் தடவிக் கொடுத்தாள்.

"பிங்கி! உனக்கு ஒண்ணும் ஆமிடாது. டாக்டர் வந்து ஊசி போட்டதும் நீ எழுந்து ஓடுவியாம்."

அடுத்த சில நிமிடங்களில் டாக்டர் ரத்னவேல் பனியன் லுங்கியோடு உள்ளேயிருந்து கேஷுவலாக வந்தார். ஒடிசலாய், சிவப்பாய், உயரமாய் இருந்த டாக்டருக்கு ஐம்பது வயது உடம்பு. ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

"நாய்க்கு என்ன ப்ராப்ளம்...?"

"திடீர்னு ஃபிட்ஸ் வந்து இரத்த வாந்தி பண்ணியிருக்கு டாக்டர். மாடிப் படிக்கட்டிலிருந்து மொட்டை மாடி வரைக்கும் சொட்டுச் சொட்டாய் இரத்தம்..."

"நாயைக் கொண்டு வந்து இந்த மேஜை மேல இப்படிப் படுக்க வையும்மா..."

வர்ணா துணியைப் பரப்பி அதன்மேல் பிங்கியைப் படுக்க வைத்துவிட்டு டாக்டரின் முகத்தையே கவலையாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

டாக்டர் நாயின் காதுகளைப் பிடித்துத் தூக்கிப் பார்த்துக் கொண்டே கேட்டார்.

"நாய்க்கு தடுப்பு ஊசியெல்லாம் போட்டிருக்கா?"

"போட்டிருக்கு டாக்டர்.."

"இது என்ன வெரைட்டி?"

"டேஷ்ஹௌண்ட். விலை ரெண்டாயிரம் கொடுத்து ஏற்காட்டிலிருந்து வாங்கிட்டு வந்தோம் டாக்டர்."

டாக்டர் நாயைத் தீவிரமாய் ஒரு பத்து நிமிஷ நேரம் பரிசோதித்துப் பார்த்துவிட்டு கவலை நிரப்பிக் கொண்ட கண்களோடு வர்ணாவை ஏறிட்டார்.

"ஸாரிம்மா...! ஒரு நாய்க்கு என்ன நோய் வரக்கூடாதோ அந்த நோய் வந்திருக்கு. இந்த நோய்க்குப் பேர் டிஸ்டெம்பர். இந்த டிஸ்டெம்பர் நோய் வந்து இதுவரைக்கும் எந்த நாயும் பிழைச்சது இல்லை. இதுவும் உயிர் பிழைக்காது. மீறிப் போனா இந்த நாய் இன்னும் அரை மணி நேரம் உயிரோடு இருக்கும். நீ இதை வீட்டுக்குக் கொண்டுட்டுப் போறதுக்குள்ளே செத்துடும்."

வர்ணா வீறிட்டாள்.

"நோ... டாக்டர்...! என்னோட பிங்கியை நான் சாக விட மாட்டேன்..."

***

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"நாங்க போலீஸ் ஸ்டேஷனிலிருந்து பேசறோம்" என்று மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட்டதும் நீலமேகம் அதிர்ந்து போய் குரல் கம்ம கேட்டார்.

"என்ன விஷயம்...?"

"நீங்க உடனே ஜி.ஹெச்சுக்குப் புறப்பட்டு காஷுவாலிடி வார்டுக்கு வாங்க..."

"விஷயம் என்னான்னு...?"

"ஃபோன்ல எதுவும் வேண்டாம். நேர்ல வாங்க பேசிக்குவோம்.."

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டு விட நீலமேகம்தான் அப்பிய மாதிரி முகம் கறுத்துப் போய் மனைவி சொர்ணத்திடம் திரும்பி விஷயத்தைச் சொல்ல, அவள் ஒரு பெரிய அழுகைக்கு ஆயத்தப்பட்டு சுவருக்குச் சாய்ந்து அப்படியே உட்கார்ந்தாள்.

நீலமேகம் அவளை உசுப்பினார்.

"சொர்ணம்! இடிஞ்சு போய் உட்கார இது நேர மில்லை...! இன்ஸ்பெக்டர் ஜி.ஹெச்சுக்கு வரச் சொல்லியிருக்கார். அங்கே யாருக்கு என்ன உடம்புன்னு தெரியலை. வா... போய்ப் பார்க்கலாம். நம்ம பூவிழிக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. தைரியமா வா."

சொர்ணம் அரற்றிக் கொண்டே எழ, நீலமேகம் தரகரை வீட்டிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, தெருமுனைக்கு போய் ஒரு ஆட்டோவை அழைத்து வந்து மனைவியோடு புறப்பட்டார்.

மாலை நேரப் போக்குவரத்து நெரிசலில் இருபது நிமிஷங்களைக் கரைத்த பிறகு ஜி.ஹெச் வந்தது.

காஷுவாலிட்டி வார்டை நோக்கி வேக வேகமாய் நடையைப் போட்ட இன்ஸ்பெக்டர் ஒருவர் எதிர்ப்பட்டார். நீலமேகம் நடையை நிறுத்திக் குறுக்கிட்டார்.

"ஸார் என் பேர் நீலமேகம். கொஞ்ச நேரத்துக்கு முந்தி டெலிஃபோன்ல எனக்கு ஒரு தகவல் வந்தது. போலீஸிலிருந்து பேசறதா சொன்னாங்க..."

"ஓ.. அது நீங்கதானா... வாங்க என் பின்னாடி..."

அந்த இன்ஸ்பெக்டர் திரும்பி நடக்க நீலமேகமும், சொர்ணமும் அவரைக் கலக்கமாய்ப் பின் தொடர்ந்தார்கள். நீலமேகம் கேட்டார்.

"ஸார்... இப்பவாவது சொல்றீங்களா விஷயம் என்னான்னு..."

"உங்க டாட்டர் பேர் பூவிழி தானே?

"ஆமா...."

"நீங்க மனசைக் கொஞ்சம் திடப்படுத்திக்கிடணும். உங்க டாட்டர் பூவிழி இப்போ உயிருக்கு ஆபத்தான கட்டத்துல இருக்கா..."

"இ...ன்...ஸ்...பெக்...டர்....! என் பொண்ணுக்கு என்னாச்சு?"

"மொதல்ல உள்ளே வந்து பொண்ணைப்பாருங்க... எல்லாத்தையும் அப்புறமா சொல்றேன்..."

உடம்பெங்கும் தீப்பற்றிக் கொண்டது மாதிரியான பதைபதைப்போடு நீலமேகமும், சொர்ணமும் வார்டுக்கு உள்ளே ஓடினார்கள்.

இரண்டு டாக்டர்கள் மும்முரமாய் ட்ரீட்மெண்ட் கொடுத்துக் கொண்டிருக்க உயர்த்திப் போடப்பட்ட கட்டிலில் கழுத்து வரைக்கும் வெள்ளை விரிப்பால் போர்த்தப்பட்ட பூவிழி தெரிந்தாள். தலையில் கனமான பேண்டேஜ். பேண்டேஜ் இரத்தத்தை உறிஞ்சியிருக்க கண்கள் இறுக மூடியிருந்தது. உதடுகள் லேசாய் பிளந்திருக்க பல்வரிசை பளிச்சென்று தெரிந்தது.

சொர்ணம் பெரிய விம்மலோடு சேலைத் தலைப்பை வாயில் பொத்திக்கொண்டு அழ ஆரம்பித்துவிட, நீலமேகம் கண்களில் கட்டிக் கொண்ட நீரோடு பக்கத்தில் வந்து நின்ற இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

"இன்ஸ்பெக்டர்! எம் பொண்ணுக்கு என்னாச்சு...?"

"யாரோ மூர்க்கமா தாக்கியிருக்காங்க. தலை, கழுத்து, மார்புன்னு நாலஞ்சு இடத்துல கத்தியால குத்தியிருக்காங்க. வளசரவாக்கம் போற வழியில் ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத பகுதியில் ஒரு மரத்துக்குப் பின்னாடி உங்க டாட்டர் விழுந்து கிடக்கிறதைப் பார்த்துட்டு யாரோ போலீஸுக்கு தகவல் கொடுத்தாங்க... போலீஸ் உடனடியா ஸ்பாட்டுக்குப் போய்ப் பார்த்தாங்க... உயிருக்குப் போராடிக்கிட்டு ஆபத்தான நிலைமையில் இருந்த உங்க டாட்டரை ஹாஸ்பிட்டலைஸ் பண்ணிட்டு என்னுடைய பீட் போலீஸ் ஸ்டேஷனுக்கு மெஸேஜ் தந்தாங்க. நான் வந்து பார்த்தப்ப உங்க டாட்டருக்கு லேசா நினைவு திரும்பியிருந்தது. தன்னோட பேரையும், உங்க வீட்டு டெலிஃபோன் நெம்பரையும் சொல்லிட்டு ஆழ்நிலை மயக்கத்துக்குப் போயிட்டா."

"அவளை இப்படித் தாக்கினது யார்னு நீங்க கேட்கலையா இன்ஸ்பெக்டர்...?"

"அந்தக் கேள்வியைக் கேட்டு பதில் வாங்கறதுக்குள்ளே பூவிழி அன்கான்ஷியஸுக்குப் போயிட்டா. மறுபடியும் அவளுக்கு கான்ஷியஸை வரவழைக்கிறதுக்காகத்தான் டாக்டர்ஸ் இப்போ ட்ரீட்மெண்ட் கொடுத்துகிட்டு இருக்காங்க..."

நீலமேகம் கண்களில் நீர் சிதற பக்கத்தில் இருந்த டாக்டரின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

"டாக்டர்... எம் பொண்ணு உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

அந்த டாக்டர் தன் இரண்டு கைகளையும் விரித்துத் தோள்களைக் குலுக்கினார்.

"ஸாரி... உங்களுக்கு ஃபால்ஸ் ஹோப் தர விரும்பலை. விழுந்த கத்திக் குத்துக்கள் எல்லாமே ஆழமாய் உள்ளே போய், உள்ளுறுப்புக்களை மோசமான முறையில் சேதம் பண்ணியிருக்கு. உயிர் பிழைக்க வாய்ப்பேயில்லை. இப்ப நாங்க கொடுத்துட்டிருக்கிற ட்ரீட்மெண்ட் இந்தப்பெண்ணை கொஞ்சமாவது சுய உணர்வுக்குக் கொண்டு வந்து தன்னை யார் தாக்கினது என்கின்ற உண்மையைச் சொல்ல வைக்கத்தான்..."

டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பூவிழியின் முகத்தில் சின்னதாய் ஒரு துடிப்பு ஏற்பட்டு அவளுடைய கண்கள் ஒரு புஷ்பம் மலர்வது போல் பிரிபட்டது.

(தொடர்ந்து வரும்)

# நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

## ஒரு கதை

தம்பி கொடுத்த அட்வைஸ், 'நான் ஏதோ அவரிடம் தவறாகச் சொல்லிவிட்டேன்' என்கிற எண்ணத்தை ஏற்படுத்தியது. ரொம்பவும் கோபப்பட்டார். மனைவி, தம்பி எல்லோருமே தனக்கு எதிராகத் திரண்டு நிற்கிறார்களே என்கிற எரிச்சல் வேறு.

"உனக்கு நான் வேண்டாம். அதுதான் இப்படியெல்லாம் பேசற. உனக்குன்னு சொந்த வீடெல்லாம் கட்டி 'செட்டில்' ஆனவுடனே என்னைக் கழட்டி விடப்பார்க்கறே..." என்று ஆவேசமாகக் கத்தினார்.

"எனக்கு அந்த மாதிரி எந்தத் திட்டமும் இல்லை. ஏன்... இந்த வீட்டிற்கு வருவதற்கு முன் நாம் என்ன தெருவிலயா இருந்தோம்? நான் உங்க வீட்லதானே இருந்தேன்? என்னால இனிமேல் இங்கு நடக்கிறதெல்லாம் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியாது. 'நான் வேணுமா? அந்தம்மா வேணுமா?'ன்னு நீங்களே முடிவு பண்ணிக்குங்க. ஆனால் நீங்க இவ்வளவு கேவலமா நடந்த பிறகு, நான் இனிமேல் உங்களோடு வாழறதப்பத்தி யோசிச்சுத்தான் முடிவு எடுக்கணும்!" என்றேன்.

அடிபட்ட வேதனை இருந்தாலும், நடந்த சம்பவம் எனக்குள் பெரிய அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை. காரணம், இப்படி நடக்கும் என்பதை ஏதோ ஒரு சக்தி முருகன் கோயிலில் எனக்கு முன்பே உணர்த்திவிட்டதே!

'இனிமேல் இங்கிருந்தால் உன்னை தீர்த்திடுவான்' என்பதை மட்டும் உள்ளுணர்வு



உணர்த்தியது. 'வீட்டை விட்டு வெளியே போ' என்று மட்டும் ஒரு குரல் எனக்குள் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

'எங்கு போவது?,' 'யாரிடம் போவது?' ஒன்றுமே புரியவில்லை.

என் அம்மா வெளியூர் சென்றிருந்தார். என்ஹோர் டிரஸ்ஸரை அழைத்தேன். என்

நடப்பதெல்லாம் நன்றாகத் தெரியும்.

"அண்ணா பண்ணினது ரொம்பவும் தப்பு. அதுவும் அண்ணியை கை நீட்டி அடிச்ச தெல்லாம். ரொம்ப ரொம்ப தப்பு. இன்னிக்கு எந்த முஞ்சியை வைச்சுக்கிட்டு அண் ணியை தப்புன்னு சொல்றான். இவன் ஒரு நாளாவது வெளிய போய் சம்பாதித்திருப்பானா?" என்றான்.

"டாடி! எனக்கு டைவர்ஸ் வேணும்" என்று அவர் அப்பாவிடம் சொன்னேன்.

"கிறிஸ்டியன் கல்யாணத்தில அதெல்லாம் ரொம்ப கஷ்டம்மா" என்றார்.

"கஷ்டம்னா என்ன பண்றது? நான் பிரிஞ்சிருக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன். விவாகரத்து கிடைக்குதோ இல்லியோ எனக்குக் கவலையில்லை. என்னை இந்த நரகத்திலிருந்து காப்பாத்துங்க. எங்கப்பா, அம்மாவை வரச் சொல்லியிருக்கேன். அவங்களும் வரட்டும்" என்று பிடிவாதமாக இருந்தேன்.

### நள்ளிரவு நேரத்தில்....

இந்த வேதனைக்கு நடுவே அன்றிரவு இன்னொரு வேடிக்கையும் நடந்தது. நள்ளிரவு நேரத்தில் அவர் என்னிடம் வந்தார்.

"சொல்லு... 'என்னை விட்டுட்டு போகமாட்டேன்'னு சொல்லு. 'டைவர்ஸ் கேட்கமாட்டேன்: இந்த வீட்டை விட்டு போகமாட்டேன்'னு சொல்லு'" என்றபடி என்னைப் பிடித்து உலுக்கினார்.

"என்னை எதுக்கு வற்புறுத்தறீங்க? நான் சொல்லமாட்டேன். நீங்க இப்படிக் கேட்க, கேட்க இன்னும் எனக்கு உங்க மேல மரியாதைதான் குறையுது. குடிச்சுட்டு கண்டபடி கத்தினீங்களே! எதவெச்சு 'நான் நடத்தை கெட்டவள்'னு சொன்னீங்க? இதச் சொல்றதுக்கு உங்களுக்கு ஒன்பது வருஷம் தேவைப்பட்டதா? அதையும் குடிச்சுட்டுத்தான் சொல்வீங்களா? சுயநினைவோட சொல்ல உங்களுக்குத் தைரியம் இல்லியா?

நான் கல்யாணத்துக்கு முன்னாடி இன்னொருத்தரோட பழகினவங்கிறது உங்களுக்குத் தெரியாதா? நான் உங்ககிட்டே சொல்லலை...? அப்ப வாய் பேசாம தலையாட்டினீங்களே... இப்ப மட்டும் எப்படி அது உங்களுக்குக் குத்தமா தெரியுது?

இதுக்கு நடுவிலே நீங்க எத்தனை பேர் பின்னால போயிருக்கீங்க. அதெல்லாம் நான் சொல்லியா காட்டிக்கிட்டிருக்கேன். என் கண் முன்னாடி ஒரு பொண்ணு என் வாழ்க்கைய சூறையாடிட்டாள்னு தெரிஞ்சும் நான் அந்தப் பொண்ணை ஏத்துக்கல...?

அந்தப் பெருந்தன்மைகூட உங்களுக்கு இல்லியே? பத்து வருஷத்துக்கு முன்னாடி நான் யாரயோ காதலிச்சேன்னு இப்ப குடிச்சுட்டு, வாந்தியெடுத்துட்டு, என்னை அடிச்சுட்டுத்தான் சொல்ல முடியுமா? நீங்க என்னை ஒரு குப்பைத் தொட்டி மாதிரி நடத்தறதை இனிமேலும் நான் அனுமதிக்க முடியாது!" என்று கொட்டித்தீர்த்தேன்.

## ஸ்ரீவித்யா

அண்ணன் வீட்டில் தொலைபேசி இல்லை. அதனால் அம்மா ஊரிலிருந்து வந்துவிட்டாரா என்று பார்த்து வரச் சொன்னேன். அம்மா மறுநாள்தான் வருவதாகக் தகவல் வந்தது.

எனக்குள் ஏனோ ஓர் இனம் புரியாத பயம். இத்தனை நாள் தங்கியிருந்த வீட்டில் அன்று தங்குவதற்காகத்தான் அந்த நடுக்கம். அந்த ஒரு இரவை எப்படிச் சமாளிப்பது?

### தலையணைக்கடியில்

அன்றிரவு முழுவதும் தலையணைக்கடியில் ஒரு பாட்டிலை வைத்துக் கொண்டேன். 'குடிவெறியில் தலையணையை வைத்து அழுத்தி என்னைக் கொல்ல முயன்றால், தற்காப்புக்காக பாட்டிலால் தலையில் தாக்கி விட்டு ஓடிவிடலாம்' என்பதற்காக காலி பாட்லை வைத்துக் கொண்டேன்.

அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. அதற்குள் இரவு நடந்த அமர்க்களத்தில் அவருடைய பெற்றோர்கள் வந்தார்கள்.

"என்னடா அவளை அடிச்சியா?"என்று கேட்டார்கள். அதற்கு சரியான பதிலில்லை. போதை தலைக்கேறியிருந்ததால் உளறிக் கொண்டிருந்தார். நடுவே, போய் வாந்தி எடுத்துவிட்டு வந்தார்.

"இப்படி ஒரு நடத்தைக் கெட்ட பெண்ணைக் கல்யாணம் பண்ணி நான் அவளுக்கு வாழ்க்கை கொடுத்தேன். இவ வந்து இன்னிக்கு என்னை 'வீட்டை விட்டு வெளியே போ'ன்னு சொல்றா" என்று உளறிக் கொண்டேயிருந்தார். அப்போது அவருடைய கடைசித் தம்பியும் அங்கிருந்தான்.

அவன் போதை வஸ்துகளுக்கு அடிமையானவன். ஆனால் மிகவும் நல்ல பையன். என்னிடம் ரொம்பவும் பாசமாக இருப்பான். துரதிருஷ்டம் அவன் போதையில் சிக்கிக் கொண்டான். நல்ல காலம் அன்று அவன் தெளிவாக இருந்தான். அவனுக்கும் வீட்டில்

### துணிச்சல்

இப்படிப் பேசும்போது எனக்குள் ஒரு துணிச்சல் வந்தது. 'தெருவில் போய் பிச்சை எடுத்தாலும் பரவாயில்லை. இனி மேல் இப்படி ஒரு வாழ்க்கையை அனுமதிக்கக்கூடாது' என்று ஒரு முடிவிற்கு வந்திருந்தேன். அடி வாங்கிய பிறகுதான் எனக்குத் தைரியமே வந்தது.

"என் கூட வாழ உனக்கு பிடிக்கலைன்னா நான் செத்துப் போயிடறேன். நான் தற்கொலை பண்ணிக்கப்போறேன். 'நீதான் என்னைக் கொலை பண்ணினே'னு முன்னாடியே எழுதி பாங்க் லாக்கர்ல வெச்சிருக்கேன், தெரியுமா உனக்கு? போலிஸ் முதல்ல உன்னைத்தான் பிடிப்பாங்க" என்றார்.

"பிடிச்சா பிடிக்கட்டும். எனக்குக் கவலையில்லை. இப்படிப் பேசறவங்கள் ளாம் தற்கொலை பண்ணிக்கமாட்டாங்க."

நான் சொல்லி முடிப்பதற்குள் எங்கிருந்துதான் இத்தனை மாத்திரைகளை எடுத்தாரோ தெரியாது. அதை என்னிடம் காட்டிவிட்டு வேகமாக மாடியிலிருந்து கீழே ஓடினார். இதை நான் எதிர்பார்க்கவில்லை. நானும் அவர் பின்னால் ஓடினேன்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

01

அனந்தராமன் அந்த ஆங்கிலப் பத்திரிகையின் இருபது துணையாசிரியர்களில் ஒருவன்தான். எனினும் மற்ற துணையாசிரியர்களுக்கு இல்லாத தகுதியும் மதிப்பும் சலுகையும் அவனுக்கு உண்டு.

அதற்குக் காரணம் சனிக்கிழமை தோறும் வெளியாகும் அந்த ஆங்கில வார அநுபந்தத்தில் 'உலகத்தின் மேல் ஒரு கண்' என்ற தனித்தலைப்பில் அவன் எழுதிவரும் விசேஷக் கட்டுரைகள்தான்.

அந்தப் பகுதியில் இலக்கியம், அரசியல், கலை, பொருளாதாரம், தேசப் பிரமுகர்கள் எது பற்றி வேண்டுமானாலும் தனது சுதந்திரமான கருத்துக்களை அவன் வெளியிடுவான்.

அவனது அபிப்பிராயம் குறித்துச் சர்ச்சைகளும் கண்டனங்களும் எழுந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட தரத்திலுள்ள வாசகர்கள் அவனது எழுத்தின் மேல் வெறி மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

ஒரே சமயத்தில் டெல்லி, பம்பாய், சென்னை ஆகிய மூன்று இடங்களிலிருந்தும் பல இலட்சக்கணக்கான பிரதிகளை விநியோகம் செய்துவரும் அந்தப் பெரிய ஸ்தாபனத்தின் முதலாளிகள் அனந்தராமனின் கருத்துக்களின் மேல் கொண்ட ஈடுபாட்டினால் மட்டும் அல்ல- அவனது கருத்துக்களினால் ஆகர்ஷிக்கப்படும் வாசகர் கூட்டத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினாலும், அப்படி ஆகர்ஷிக்கத்தக்க கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஆனந்தராமனின் திறமையின் மேல்கொண்ட ஈடுபாட்டினாலும் அந்தத் தகுதியை, மதிப்பை, சலுகையை அவனுக்குத் தந்திருந்தனர்.

அனந்தராமன் தனது அலுவலகத்தின் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட தனி அறையில் அமர்ந்து தனது விசேஷக் கட்டுரையின் 'ப்ரூப் காலி' களைத் திருத்தியவாறு இருந்தான்.

இந்தியாவில், தேசிய ஒருமைப்பாடு குறித்து எல்லா அரசியல்வாதிகளும் தேசியப் பிரமுகர்களும் சகல பத்திரிகைகளும் ஏக காலத்தில் ஒரே குரலில் ஆவேசமாகப் பேச முற்பட்ட காலம் அது.

அந்த பிரச்சனை குறித்து அவர்களோடு அடிப்படை உடன்பாடு கொண்டிருந்த போதிலும், எதைப்பற்றியுமே ஆழமாகச் சிந்தித்து அலசும் அறிவியற் பார்வை கொண்ட அனந்தராமன்- ஒரு மாறிய திசையில் நின்று ஒரு புதிய கோணத்தில் ஒரு பொறுப்பான பார்வையோடு தேசிய ஒருமைப்பாடு பற்றிய தன் கருத்துக்களை அந்தக் கட்டுரையில் எழுதியிருந்தான்.

இரண்டு மூன்று முறை திருத்திய பிறகு- எப்போதுமே தனது கட்டுரைகள் தெளிவாகவும் தீர்க்கமாகவும் பிசிறற்றும் இருக்க வேண்டும் என்பதற்காக எவரையும் விட பிரத்தியேக சிரத்தை எடுத்துக்கொள்வான் அனந்தராமன். அதற்காக இரவு எத்தனை மணி நேரமானாலும் கூடத் தனது சொந்தக் காரியம் மாதிரி ஊணுறக்கமின்றி ஆபீசிலேயே தனிமையில் அடைந்து கிடப்பான். இப்போது படித்துப் பார்க்கையில் அந்தக் கட்டுரை மிகவும் பிரமாதமாக வந்திருப்பதாக அவனுக்கே ஒரு நிறைவு தோன்றிற்று. அந்த நிறைவும் மகிழ்ச்சியும் ஒரு சாதாரண கட்டுரையாளனுக்கு ஏற்படக் கூடியதன்று. அது ஒரு கலைஞனுக்கே உரிய சுகானுபவம்.

'ப்ருப் காலி'யில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அவன் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தான்.

'ஒருமைப்படுத்தல் என்பது முதலில் ஒவ்வொரு தனி மனிதனிலும் உருவாக வேண்டும். சமூகப் பார்வையே அற்ற, சமுதாயப் பொறுப்புக்களையே போற்றத் தெரியாத, வீட்டிலொரு மனிதனாய், வெளியிலொரு மனிதனாய், தனக்குத்தானே பிறிதொரு மனிதனாய்ப் பல கூறுகளாக மாறுபட்டுக் கிடக்கும் தனி மனிதர்கள் வாழும் சமூகங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு தேசத்தில் தேசியங்கள் ஒருமைப்படுத்தல் என்ற கோஷம் எவ்வளவு சிரம சாத்தியம்?' என்று தான் எழுப்பியிருந்த ஒரு 'பிரச்சனை பற்றிய பிரச்சனை'யை அவன் தனக்குத் தானே சிலாகித்துக் கொண்டான்.

'ஆம்! அதற்கு நானே ஓர் உதாரணம்' என்பது இப்போதுதான்- இதோ தனது மதிப்பிற்குரிய நாற்காலியில், நான்கு புறமும் 'கும்' என இரைச்சலிடும் அச்சு இயந்திரங்களின் நடுவே அமர்ந்திருக்கையில், அந்த ஃபோர்மேன் கதவைத் திறந்து கொண்டு 'ப்ரூ' புக்காக உள்ளே நுழைந்தபோது திறந்த கதவின் வழியே- அவனது கருத்துக்களை அச்சிட்டு அறிவுலகத்துக்கு வாரிவழங்கும் அச்சு இயந்திரங்கள் அவனை நோக்கிச் சிரிப்பது போல் முழங்குகின்ற சப்தம் பேரோசையாகக் கேட்கிறதே- இந்தச் சமயத்தில்தான் அவன் எண்ணிப் பார்த்தான்.

ஃபோர்மேன் மேஜையின்மீது திருத்தி வைக்கப்பட்டிருந்த புரூஃப் காகிதங்களை எடுத்துக்கொண்டு வெளியேறினான். அச்சு இயந்திரங்களின் ஓசை ஒருமுறை பெருகி அதிர்ந்து 'கும்'மென்று அடங்கி ஒலித்தது. அது போலவே அனந்தராமனின் உள்ளே அடங்கிக் கிடந்த ஏதோ ஒரு சுயசிந்தனை திடீரெனப் பேரதிர்ச்சியோடு கிளர்ந்து அவனுள்ளேயே அடங்கி ஆழ நீர்ப்பெருக்கின் உள்ளோட்டமாய் விரைந்து செல்லும் மின்சாரம்போல அவனை நிலைகுலையச் செய்தது.

'வீட்டிலொரு மனிதனாய் வெளியிலொரு மனிதனாய் தனக்குத்தானே பிறிதொரு மனிதனாய் என்று தானே பின்னிய வார்த்தைகளின் வலையில் தானே வீழ்ந்து சிக்கித் தவித்தான் அவன்.

புற உலகிலும் சமூகத்திலும் தனக்குள்ள அந்தஸ்தை அவன் ஒரு வினாடி எண்ணிப் பார்த்தான். ஆனால் அகத்தே,தனது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையில் தான் எவ்வளவு கேவலமான துயரங்களையும் முதிர்ச்சி அடையாத இளம்பிள்ளைப் பொறாமையும் கொண்டு அற்பமாக வதைபடும் பரிதாபத்திற்கும் பரிகாசத்திற்கும் உரிய சின்ன மனிதனாய் வாழ்கிறோம் என்பதையும் எண்ணிப் பார்த்து- தனது அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் இடையே உள்ள பள்ளத்தை அளந்து பார்த்தபோது அவனுக்குத் தன்மீதே- தனது அறிவாற்றல்களின் மீதே கசப்பான சலிப்பு ஏற்பட்டது. "வாட் எ ஹிப்பக்ரட் ஐ ஆம்!" என்று அந்தரங்கமான கைப்புடன் ஆங்கிலத்தில் முனகிக் கொண்டான்.

அவன் சிந்திப்பதே ஆங்கிலத்தில்தான். சொல்லப் போனால் எந்த இந்திய பாஷையும் அவனுக்குச் சுத்தமாகத் தெரியாது. தமிழும் மலையாளமும் கொஞ்சம் அசுத்தமாகத் தெரியும்.

'வீட்டிலொரு மனிதனாய் வெளியிலொரு மனிதனாய் தனக்குத் தானே பிறிதொரு மனிதனாய்...'- தானே ஓர் பன்முகப் படைப்பு என்று தோன்றிற்று அவனுக்கு.

அன்று காலை நிகழ்ந்த- ஒவ்வொரு நாளும் காலையிலோ மாலையிலோ ஏதோ ஒரு நேரத்தில் அவனது தாம்பத்திய வாழ்க்கையில் நிகழ்ந்துகொண்டிருக்கிற அவ்விதம் நிகழ்ந்து விட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பிறகு 'ஐயோ இவ்விதம் நிகழ்ந்துவிட்டதே' என்று வேதனையோடு வெட்கிக் குறுகி அற்பமாய் வதைபட்டும் மீண்டும் ஒருமுறை அவ்விதம் நிகழவொண்ணாமல் தவிர்க்கும் பலமில்லாத பலவீனத்தால் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டிருக்கிற- ஒரு நிகழ்ச்சி அவனது நினைவில் வந்தது. அவளோடு-அவனது மனைவி கோகிலத்தோடு நேர்ந்த கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள்...ஏன்? அவள் மட்டும் சும்மாவா இருந்தாள்?- இந்த வார்த்தைப் பரிவர்த்தனைகள் அவனது செவிகளில் ஒலித்தன. 'சீ! என்ன இருந்தாலும் இப்படி ஒரு நிலைமைக்கு அவளை நான் இழுத்திருக்கக் கூடாது!'

'நாம ரெண்டு பேருமே மனசுக்குப் பிடிக்காத ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் இல்லையா?' என்று காலையில் அவன் தன் மனைவியிடம் கேட்டதை நினைத்துப் பார்த்தான். அந்த மனமறிந்த உண்மையைத் தான் வாய் திறந்து கேட்டிருக்க வேண்டாமே என்று இப்போது தோன்றிற்று. ஒரு சிகரெட்டை எடுத்துப்பற்ற வைத்துக்கொண்டு உட்கார்ந்த நிலையிலேயே தனது நாற்காலியைப் பின்னால் தள்ளித்தன் பின்னாலிருந்த வெளிறிய பச்சை நிற ஸ்கிரீனை விலக்கிக் கண்ணாடி அடைப்பின் வழியாக அந்த நான்காவது அடுக்கு மாடியிலிருந்து கீழே பார்த்தான்.

அங்கே தெரிவது வீதி அல்ல. இந்தப் பிரமாண்டமான கட்டடத்தின் நிழலில் ஒதுங்கி உள்ள கூலிக்காரர்கள், கை வண்டிக்காரர்கள் முதலியோர் வாழ்கின்ற பிரதேசம் அது. அனந்தராமன் பார்த்த நேரத்தில் அந்த கூலிக்காரன் குடும்பங்கள் ஒன்றில் என்ன தாம்பத்தியப் பிணக்கோ...? அவளை அவன் ஒரு கையால் கூந்தலைப்பிடித்து முறுக்கிக் கொண்டு மற்றொருகையால் பிடரியிலும் முதுகிலும் அறைந்து கொண்டிருந்தது ஊமைப் படக் காட்சி மாதிரி ஓசையற்றுத் தெரிந்தது.

-'ஒரு புருஷன் தன் மனைவியை அப்படி ஒரு கேள்வி கேட்டிருக்கக் கூடாதுதான். அப்படியே தவறிக் கேட்டு விட்டாலும் சாதாரணமாக ஒரு மனைவி என்ன பதில் சொல்லக்கூடும்' என்று பலவிதமான பதில்களை மனசுக்கு இதமாகக் கற்பனை செய்து பார்த்துக்கொண்டான். ஆனால் அந்தக் கற்பனைகளுக்கெல்லாம் புறம்பாக அவள் அமைதியாகச் சொன்ன அந்த இரண்டு வார்த்தைகள்தான் அவன் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது.

(கோகிலா.... தொடரும்)

தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன்.
அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை.
பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.
ஒரு காலத்தில் ஓய்வே இல்லாது வெகுஜன சஞ்சிகைகளிலும் எழுதிக் குவித்தார்.
இப்போது அவர் எழுதுவதில்லை.
எத்தனை கோடி தந்தாலும் கதை எழுத மாட்டேன் என்று சபதம்.
அந்த மாபெரும் எழுத்தாளரது படைப்புக்களில் ஒன்றுதான் இது!
உங்கள் வரவேற்பை நிச்சயம் பெறும்.

# கோகிலா என்ன செய்து விட்டாள்?



## ஜெயகாந்தன்

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

10

சமுக ஒழுக்கத்துக்குச் சந்நியாசிகள் என்ன செய்து விட்டார்கள்?

மனு, மாந்தாதா, வள்ளுவன், பரந்தாமன், பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் இவர்களெல்லாம் என்ன சாதித்து விட்டார்கள்!

இதோ, நமது பொலிஸ் இலாகாவைப் பாருங்கள்!

அது சத்தியத்தின் திருக்கோவில்! தர்மத்தின் தீப ஸ்தம்பம்!

எந்த மனிதனாவது ஒழுங்கு தவறினால், சட்டத்தின் கரங்கள் கொண்டு அந்த மனிதனைத் திருத்துவதற்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டது நமது பொலிஸ் இலாகா!

பொலிஸ்காரன் திருடினால் நீங்கள் கண்டு கொள்ளக் கூடாது! ஏனென்றால் அவன் தர்மத்தின் காவலன்!

கொலை செய்வது குற்றம்! ஆனால் அதைப் பொலிஸ்காரன் செய்தால் தர்மம். ஏனென்றால் அவன் சத்தியத்தின் மொத்த வியாபாரி!

'நாளை உதயமாகக் கூடாது' என்று சூரியனுக்கு ஆணையிட்ட நளாயினியைப் போல யாருக்கும் ஆணையிடக்கூடிய சர்வ வல்லமை படைத்தது, நமது பொலிஸ் இலாகா!

இந்திர லோகத்தில் இந்திரன் மட்டும் அடிக்கடி மாறுவானாம்; ஆனால் இந்திராணி ஒருத்தியேதானாம்!

ஜனநாயகத்தில் எத்தனை அரசுகள் மாறினாலும் பொலிஸ்காரன் லத்தி மட்டும் மாறாது.

அதனால்தான் பல இலட்சம் மக்களுக்குத் தலைமை தாங்கும் ஒருவனைக்கூட, இருநூறு ரூபாய் சம்பளம் வாங்கும் பொலிஸ்காரன் விரட்ட முடிகிறது. மிரட்ட முடிகிறது.

அந்த சர்வ வல்லமை படைத்த பொலிஸ் இலாகாவில் ஒரு முக்கியமான அதிகாரி கமலநாதன்.



காந்திநகர் பங்களாவில் சந்தித்தோமே, அதே கமலநாதன்!

அவரது முதாதையர்கள் ஆடுமாடு வளர்ப்பதில் அக்கறை காட்டியவர்கள்.

அதனால் ஜனங்களையும் ஆடுமாடு போல் விரட்டுவது, அவருடைய சுபாவம். என்றாலும் மனிதர் மிகவும் துணிச்சல்காரர்.

தமிழகத்தின் ஒரு மூலையில் நக்சல் பாரிகள் தொல்லை அதிகமாக இருந்தபோது, அந்தப் பகுதியில் இருந்த கமலநாதன், அவர்களை அடக்கித் தன் சாமர்த்தியத்தைக் காட்டினார். அதிலே பதவி உயர்வு பெற்றார்.

கோரமான பார்வை; முரட்டுத்தனமான பேச்சு எடுத்தவுடனேயே கைநீட்டும் சுபாவம்- இவைதானே பொலிஸ்காரனின் இலக்கணங்கள்?

எத்தனைதான் மரியாதை வாரம் கொண்டாடினாலும், பொலிஸ்காரர்கள் அதைக் கற்றுக்கொள்ள பல தலைமுறைகளாகுமே!

ஆனாலும் கமலநாதன் முழுக்க அப்படி என்று சொல்லிவிட முடியாது.

கமலநாதன் மிகவும் மரியாதையாக நடப்பார் தனது மேலதிகாரிகளிடம்.

சூதாட்டம்-விபசாரம் என்றால் அவர் சும்மா விடமாட்டார்.

இலஞ்சம் வாங்குகிறவர்கள் விஷயத்தில் அவர் மிகவும் கடுமையாக இருப்பார்.

அவருக்குச் சம்பளம் என்னவோ ஆயிரத்துக்கும் கீழேதான். ஆனாலும் அவரது மகளை பாசில் கட்டிக்கொடுத்திருக்கிறார். அங்கே வேலை பார்க்கும் தன் ஜாதியைச் சேர்ந்த இளைஞனுக்கு.

எந்தக் குற்றத்தையும் அவர் கடுமையாகக் கருதுவார், அதைத் தன் ஜாதிக்காரன் செய்தாலொழிய!

ஜாதி அபிமானத்துக்கு அவர் ஒரு தனி இலக்கணம்.

தன் ஜாதிக்காரன் ஒரு கொலையையே செய்துவிட்டு வந்தாலும், அவனைக் காப்பாற்றி விடுவார்.

அன்று பொலிஸ் அதிகாரிகளின் மாநாடு நடந்தது.

பொலிஸ் மாநாடு என்றால், பூட்ஸ்களின் தாளவாத்தியம் கேட்டுக்கொண்டே இருக்குமே!

அவர் பொலிஸ்காரர்களுக்கு இட்ட ஆணை, 'ஒரு குற்றத்தைக் கண்டுபிடிக்க இன்னொரு குற்றத்தைச் செய்யலாம்' என்பதே.

"ஒட்டல்களில் ஆட்டுக் கறியில் மாட்டுக்கறியைக் கலக்கிறானா என்பதைக் கண்டு பிடிக்க வேண்டுமா? நீங்களே மாட்டுக்கறியை ரகசியமாகக் கொண்டுபோய் அவனிடம் விற்க வேண்டும். அவன் வாங்கிக்கொண்டால் கைது செய்துவிடவேண்டும்.

ஒருத்தி விபசாரம் செய்யும்போது உங்களால் பிடிக்க முடியவில்லையா? நீங்களே பணம் கொடுத்து ஒரு ஆளை அனுப்ப வேண்டும். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே பிடித்துவிட வேண்டும்.

ஒரு கடைக்காரன் கலப்படம் செய்கிறான் என்று கருதுகிறீர்களா? அவனைத் திடீரென்று கைது செய்யவேண்டும்.

அந்த நேரத்தில் கடையில் கலப்படப் பொருள் எதுவும் இல்லையா? நீங்களே எதையாவது எதிலாவது கலந்துவிட வேண்டும்.

மொத்தத்தில் அசல் குற்றவாளிகள் கிடைக்கவில்லை என்றால், நகல் குற்றவாளிகளை உற்பத்தி செய்ய வேண்டும்.

'குற்றங்களை அதிகமாகக் கண்டு பிடிக்கிறவர்களுக்குத் தான் பதவி உயர்வு' என்பதை மறந்துவிடாதீர்கள்.

குறைந்தபட்சம் அநாதையாகத் திரிகின்றவனையாவது தேடிப்பிடித்து, ஜாமீன் வழக்குப்போட்டு விடுங்கள். என்று பேசி முடித்தார் கமலநாதன்.

ஆம், 'இந்திய நிர்வாக சம்பிரதாயம்' அப்படித்தானே சொல்கிறது!

"இவர் நிறையக் குற்றங்களைக் கண்டு பிடித்தார்." என்று பரிசு கொடுக்கிறது. பதவு உயர்வு கொடுக்கிறது.

ஆனால், "உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்தாரா?" என்று எந்த அரசாங்கம் கேட்கிறது?

சைக்கிளைத் திருட்டுக் கொடுத்தவர்கள் பொலிஸ் ஸ்டேஷனிலே புகார் செய்கிறார்கள். திருடன் பிடிபடுகிறானா?

இல்லையே! முடியாதே! ஏன்?

காணாமற்போன சைக்கிள் பொலிஸ்காரன் வீட்டிலல்லவா இருக்கிறது?

'குற்றங்களை அதிகம் கண்டுபிடி' என்று பொலிஸ்காரனுக்கு உத்தரவிட்டதன் மூலம் நிரபராதிகள் ஜெயிலுக்குப் போவதற்கும், பொலிஸ்காரனுக்கு அதிகம் வருமானம் வருவதற்கும்தானே வழி வகுத்திருக்கிறோம்?

(அந்தரங்கம் வரும்)

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

-கண்ணதாசன்-


படிப்பகம்

www.padippakam.com

# "ஒண்ணு இரண்டு தொண்ணூறத்தெட்டில் அவரைச் சந்தித்தேன்"



## கா. அருளானந்தம்- கீழ்க் கருணையூர்

யாழ் நகரில் பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் கிளைவீதி ஒன்றில் நடந்து கொண்டிருந்தேன். கையில் முகவரி ஒன்று இருந்தது.

காய்கறிப் பையுடன் கூடவே வந்துகொண்டிருந்த அந்தப் பெரியவரிடம் விலாசத்தைக் காட்டி, வீட்டை அடைய வழி கேட்டேன்.

"நானும் அந்தப் பக்கம்தான். வாரும் நான் வீட்டைக் காட்டிரன். அதுசரி.. இவர் சங்கரப்பிள்ளையெட்டை நீர் என்ன விஷயமாய்..? ஏதாவது அந்தரங்கமெண்டால் பரவாயில்லை... வேண்டாம்."

"அப்பிடியொரு இரகசியமுமில்லை, நான் இப்ப இரண்டு வருடமாய் வெளிநாடு போறதுக்காக அலையாய் அலைஞ்சு களைச்சுப் போனேன். இந்த சங்கரப்பிள்ளை மூலமாய் எனக்குத் தெரிஞ்ச நாலு பேர் ஜெர்மனியும் ஹொலண்டுமாய் போயிருக்கினம்.... அந்த விஷயமாய்த்தான் நானும்... கொழும்பிலையிருந்து இப்ப இங்கை வந்து நிக்கிறாராம்... அதுதான்..."

"ஓமோம்... இப்ப இங்கை வந்து நிக்கிறார். அவர் இரண்டு இலட்சம் 'அட்வான்ஸ்' வாங்கிக்கொண்டுதான் பாஸ்போட் வாங்கி அலுவல் தொடங்கிறார் எண்டு கேள்வி...!" என்றார் பெரியவர்.

அவர் சொன்ன அட்வான்ஸ் விஷயம் என் வாயைக் கொஞ்சம் கூடுதலாகவே கிளற வைத்தது.

"அட்வான்ஸ் எண்டு கேக்கிறவன் எல்லாருமே வடிகட்டின பச்சை அயோக்கியன்கள் ஐயா! இந்த இரண்டு வருடத்து என் சொந்த அனுபவம் இது. அட்வான்சை வாங்கி வட்டிக்குக் குடுத்திட்டு, மாதக் கணக்காய் எங்களை நம்ப வைச்சு அலைச்சு, கடைசியாய் நம்பிக்கை இழந்து அட்வான்சைத் திருப்பி கேட்டால், தவணைக்குமேல் தவணை சொல்லி இழுத்தடிச்சு... ஐயோ! அதை ஏன் கேக்கிறியள்..! அலைஞ்சு களைச்சவன் கையைவிட, மீதிப்பேருக்கு ஆயிரமும் இரண்டாயிரமுமாய்... சொந்தப் பணத்தைச் சும்மா குடுக்கிறமாதிரி... போக்கிரிப் பயல்கள்...!"

"தம்பி சொல்லுறதும் சரிதான். ஆனாலும், கொழும்பிலை தங்க இடமோ, உதவிக்கு ஆளோ இல்லாத இளந்தாரிப் பொடியள், சங்கரப்பிள்ளையர் சொல்லுற விடுதியிலை-லொட்ஜ்ஜிலை தங்கினால் பொலிஸ் பாஸ் எல்லாம் லொட்ஜ்காரரே பதிவு செய்து எடுக்கிறதுக்கு ஒழுங்குகள் இருக்காம்... அபூர்வமாய் சிலவேளை நாலு பேரைச் சந்தேகத்திலை பிடிச்சுக்கொண்டு போனாலும் மற்ற நாளே அந்த லொட்ஜ்காரரே வெளியே எடுத்து வந்துவிடுவாராம்... அதைவிட முக்கியமாய்... தன்னை மட்டும் நம்பியிராமல் வேறை ஏஜென்ஸிக்காரரோடையும் தொடர்பு வைச்சு, எவர் மூலமாய் செதியாய்ப் போகலாம் எண்டு முயற்சி பண்ணுறவையாலை சிலவேளை சங்கரப்பிள்ளையர் செய்த அலுவல் எல்லாம் வீணாய்ப் போகுமல்லோ? அதுக்காகத்தான் அவர் அட்வான்ஸ் விஷயத்திலை இப்பிடி இறுக்கமாய் நிக்கிறாராம்!"

"அதுசரி ஐயா...! பத்துப்பேர் அட்வான்ஸ் கொடுத்துவிட்டு, நாலுமாதம் ஆறுமாதமாய் நிண்டுதூங்கி, நாலுபேருக்கு விஷயம் சரிவந்து, அவர்கள் போய்ச் சேர, மீதி ஆறுபேரும் பிறகு வரியக் கணக்காய் தூங்கி... கடைசியாய் அவர்கள் கதி அதோகதிதானே..? ஐயா! இந்தச் சங்கரப்பிள்ளையும் '2 இலட்சம் அட்வான்ஸ்' எண்டு ஏதாவது பேசத் தொடங்கினால் வேறை மூச்சுப்பேச்சு இல்லாமல் திரும்பி விடுவன்!

ஏஜென்ஸிவேலைத் தரகர்களின் சுத்துமாத்து விளையாட்டுக்களைப் பற்றிப் பேசிக்கொண்டே ஓர் ஒழுங்கைக்குள் திரும்பினோம். லேன் நம்பர் சரியாயிருந்தது. சிறிது தூரம் நடந்ததும் 'கேற்' ஓரத்தூணில் இருந்த இலக்கத்தைக் காட்டினார். கையிலிருந்த விலாசத் துண்டோடு ஒப்பிட்டுச் சரி பார்த்துக்கொண்டேன்.

பெரியவரின் உதவிக்கு கண்களாலேயே நன்றி சொன்னேன்.

கேற்றில் இருந்த 'கடிநாய் கவனம்' அறிவிப்பைப் பார்த்ததும் உள்ளே போகத் தயங்கி நின்றேன். என் தயக்கம் புரிந்து, பெரியவர் தாமே முதலில் உள்ளே புகுந்தார். நான் பின் தொடர்ந்தேன்.

"நாய் இல்லாத வீடுகளுக்குத்தான் தம்பி இந்த 'எச்சரிக்கை' அறிவிப்பு போட்டிருப்பினம். நாயுள்ள வீடுகளிலை நாயைச் சங்கிலியாலை கட்டி வைச்சிருப்பினம். இது நகர்ப்புற வழக்கம்."

பெரியவர் நகரத்து 'உண்மை' ஒன்றை உதிர்த்துக்கொண்டே விறாந்தையில் ஏறி, பாதி திறந்திருந்த கதவினூடே சற்று எட்டிப் பார்த்துவிட்டு, வெளியே இருந்த கதிரையில் உட்கார்ந்து காய்கறிப் பையையும் பக்கத்தில் வைத்தார். நானும் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன்.

கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்த பெரியவர், குரலைச் செருமிச் சரியாக்கிக்கொண்டு,

"தம்பி நான்தான் நீர் சந்திக்க வந்த சங்கரப்பிள்ளை. இரண்டு இலட்சம் அட்வான்ஸ் இல்லாத கேஸை நான் எடுக்கிறதில்லை. இப்ப நீர் என்ன செய்யப்போகிறீர்?" என்றார்.

"அப்ப நான் போயிட்டு வர்ர்...போகிறேன்!"

எழுந்து கடிநாய்ப் பயமின்றி வெளியேறினேன்.

# கடைசி ஆசை



## நிகில்

கிழவி கோடீஸ்வரியின் கழுத்தைப் பிற்பகல் பன்னிரண்டிலிருந்து ஒரு மணிக்குள் நெறித்துவிட்டு, அவள் மேலுள்ள நகைகளை மட்டும் கழற்றிச் சென்றாலே ஆயுளுக்கும் வசதியாக வாழலாம்.' என்று முத்தையா திட்டமிட்டுவிட்டான்.

அவள் கழுத்திலும் கை வைத்தாயிற்று. நெரிக்க வேண்டியதுதான் மீதி.

"கொல்லாதே, கொல்லாதே!" மன்றாடினாள் பணக்காரி. "இந்த உலகத்திலே எனக்குப் பண ஆசை கிடையாது. ஆனால் ரீ.வியிலே ஒரு மெகா தொடர் வந்துகிட்டிருக்குது. ஒண்ணரை வருசமா தினமும் பார்க்கறேன். இன்னிக்குத்தான் முடியுது. அந்தக் கடைசி அத்தியாயத்தைப் பார்க்கிறவரை நான் உசிரோடு இருந்தால் போதும். என் வாழ்க்கை அத்தியாயத்தை அதுக்குள்ளே முடிச்சிடாதே..."

கொலைகாரனுக்கு அவள் வேண்டுதல் விசித்திரமாயிருந்தது.

சாகப்போற கிழவிக்கு இப்படி ஒரு ஆசையா?

அவளைக் கட்டிப்போட்டுவிட்டு, ரீ.வி.யை போட்டான்.

"பார்த்துக்கிட்டே இரு கிழவி. நான் உன் நகையெல்லாம் கழட்டிக்கிறேன்," என்றவாறு அவள் நகைகளையெல்லாம் கழற்றி எடுத்து முட்டை கட்டிக்கொண்டு போய்விட்டான்.

பொலிஸ் வந்தது.

"கிழவிம்மா, உங்க நகைகளைக் கொள்ளை அடித்த ஆளோட அடையாளம் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாது. ஆனால் உங்களுக்கு அந்த ஆளை என்னாலே காட்ட முடியும்?"

"எப்படி?"

"ரீ.வி பெட்டிக்குள்ளே நான் ரகசியமா வெச்சிருக்கிற மூவி காமெரா அவனைப் படம் பிடிச்சிருக்கு. ரீ.வியை ஒன் பண்ணினா காமெரா தானா ஸ்டார்ட் ஆகும்."

"கில்லாடிப் பாட்டி நீங்க..." என்று புகழ்ந்தவாறு இன்ஸ்பெக்டர் ரீ.வி. பெட்டிக்குள்ளிருந்த மூவி கமெராவை எடுத்துச் சென்றார்.

கொலையாளி பிடிபட்டு, நகைகள் கிடைத்ததோடு பொலிசின் வெகுமதியும் கோடீஸ்வரிக்குக் கிடைத்தது.

# நீதான் எங்கள் பிள்ளை!



## செ. குணரத்தினம்

நல்லையாவர் திடீரென இருந்தாற்போல் இறந்துபோனார். மனைவி கமலம், பக்கத்தில் குந்தியிருந்து ஒப்பாரி வைத்தாள்.

"என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டீர்களே ஐயா! குடிக்கவேண்டாம், குடிக்கவேண்டாம் , என்று ஆயிரம் தடவைகள் சொல்லியும் கேளாமல் அநியாயமாகச் செத்துப்போனீர்களே. பெற்ற பிள்ளைகளில் ஒன்றுகூட பக்கத்தில் இல்லையே! நான் என்ன செய்வேன்...?"

இந்த ஒப்பாரிச் சத்தத்தைக் கேட்டு, அக்கம் பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் ஓடிவந்தார்கள்.

நல்லையாவர் வளர்த்த நாய் 'ஜிம்மி' எவரையும் அவர் பக்கம் நெருங்கவிடாமல் அதன் பாசையில் எதையோ முனகியபடி அவர் பிரேதத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.

"இந்த நாயைப் பிடித்து ஆரெண்டாலும் வெளியே கொண்டு போய்க் கட்டிவிடுங்கப்பா! ஒருத்தரையும் கிட்ட நெருங்க விடுகுதில்லை!" என்று அங்கே நின்ற ஒரு கிழவி சொன்னாள். எவரும் அதற்குத் தயாரில்லை.

துக்கத்தோடு துக்கமாக கமலம் எழுந்து, நாயின் பிரடியைப் பிடித்து, "வா சனியன்! உன்னால பெரிய ஆக்கின!" என்றபடி அதைக்கூட்டிச்சென்று, ஒதுக்குப்புறமாகக் கட்டிவிட்டுவந்து மீண்டும் நல்லையாவரின் பக்கத்தில் குந்தியிருந்து அழத் தொடங்கினாள்.

நல்லையாவர் ஒரு பென்ஷனியர். கமலத்தை மணம் செய்து, மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்தார். பிள்ளைகளை நன்றாகப் படிப்பித்து, நல்ல நல்ல உத்தியோகங்களைப் பார்க்கவைத்து, பின்னடி காலத்துக்குப் பிள்ளைகளின் நிழலிலேயே வாழ வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார். எக்காரணம் கொண்டும் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடாது என்பதும் அவர் எண்ணம்.

நல்லையாவர் பழைய கட்டை. ஊர்ப்பற்று, மண்பற்று எல்லாம் இருந்தன. ஆனாலும் நாட்டில் உண்டான குழப்பம் அவரது திட்டங்களையெல்லாம் சின்னாபின்னப் படுத்திவிட்டது.

பிள்ளைகள் மூவரும் கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா என்று ஓடிச்சென்று, அங்கங்கேயே குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஊர்ப் பக்கம் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. எப்போதாவது இருந்துவிட்டு கடிதம் வரும். ரெலிஃபோன் மணி கிணுகிணுக்கும். பேரப்பிள்ளைகளின் பிறந்த நாட்கள் வந்தால் 'காட்'வரும். போட்டோக்கள் அனுப்பப்படும். அவ்வளவுதான். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் எல்லோருமே தூரத்து நட்சத்திரங்களாகிவிட்டார்கள்.

இதையெல்லாம் சிந்திக்கச் சிந்திக்க நல்லையாவருக்கு துயரமே மேலிடும். அதை இல்லாமல் செய்ய தினமும் கொஞ்சம் மது அருந்திக்கொள்வார். ஆனாலும் துயரம் போகாது. மேலும் அழுகையும், துயரமும் தான். கமலம் இவருக்குப் புத்தி சொல்லிச் சொல்லி அலுத்துப் போனார்.

ஒருநாள் ஏதோ பணிவிடையாக வெளியே போன நல்லையாவர் ஒரு நாய்க் குட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தார்.

நாயென்றால் கமலத்திற்கு அறவே பிடிக்காது. "இந்தச் சனியன ஏன் கொண்டு வந்தீர்கள்? கொண்டுபோய் தெருவில் எறிந்து விட்டு வாருங்கள்!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அவர் கேட்கவில்லை.

"நான் பெத்துவளர்த்த பிள்ளைகளும் எனக்குப் பக்கத்தில இல்ல. தூக்கிவிளையாட பேரப்பிள்ளைகளும் இல்ல! இந்த நாயையாவது பிள்ளைப்போல வளர்ப்பம். வீட்டுக்கும் காவலாக இருக்கும். எனக்கும் அதனோடு விளையாடி, பொழுதைப் போக்க முடியும்!" இப்படிச் சொன்ன நல்லையாவரை மனைவி கமலம் எரிச்சலோடு பார்த்துவிட்டு நடந்தாள். காலம் கடந்தது. நாயும் வளர்ந்தது.

உண்மையிலேயே அந்த நாயை பிள்ளைகளைப்போல பாசம் வைத்து வளர்த்தார் அவர். நாயும் அவர்மேல் உயிரையே வைத்திருந்தது. வெளியேபோய் வரும் போதெல்லாம் அதற்காக பிஸ்கற் வாங்கி வருவார். அவர் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கிடக்கும் அந்த நாய், அவரைக் கண்டதும் தெருவாசல்வரை ஓடிச்சென்று, அவர்மீது பாய்ந்து, அவரது வேட்டியைக் கவ்விப் பிடித்தபடி அழைத்துக்கொண்டு வரும். இதைப் பார்த்தவர்களெல்லாம் வியந்துபோய் நிற்பார்கள்.

இப்போது அந்த நாயை கமலம் கட்டிப் போட்டுவிட்டாள். என்றாலும் அதன் வாயை எவராலும் கட்டிப்போட முடியவில்லை. அவர் இறந்துபோனார் என்பதை அது அறியுமோ தெரியாது ஓய்வில்லாமல் பாய்ந்து பாய்ந்து கத்திக்கொண்டே கிடந்தது. நேரம் அடித்துக்கொண்டு பறந்தது.

வந்தவர்களில் ஒருவர் கேட்டார். "என்ன கமலம்,- வெளிநாட்டில இருக்கிற பிள்ளைகளுக்கு அறிவிக்க வேண்டாமா?" அந்தளவில் கமலம் எழுந்து சென்று மூன்று பிள்ளைகளின் தொலைபேசி இலக்கங்களையும் கொடுத்தாள்.

வீட்டிலேயே பேசக்கூடிய வசதியிருந்தது. மூன்று பிள்ளைகளோடும் தொடர்பு கொண்டார்கள்.

"அப்படியா! ஐயோ எங்களால் வந்து கொள்ள முடியாதே. நீங்கள் எதற்கும் அப்பாவின் இறுதிக் கிரிகைகளையெல்லாம் வீடியோவில் பதிவு செய்து, அனுப்பி வையுங்கள். நாங்கள் அதை இங்கே போட்டுப் பார்த்து, துக்கத்தை அனுஷ்டிக்கிறோம். அதற்கான செலவையெல்லாம் உடன் அனுப்பி வைக்கிறோம்!"

மூன்று பிள்ளைகளின் முடிவும் ஒன்றாகவே இருந்தது. இதைக் கேட்டதும் கமலம் இன்னுமொரு பாட்டம் அழுது தீர்த்தாள். அங்கே வந்து நின்றவர்களெல்லாம், "இதுதான் வெளிநாட்டுச் சீவியம்!" என்று மெதுவாகக் குசுகுசுத்துக் கொண்டார்கள்.

இனி என்ன செய்வது! எப்படியாவது பிரேதத்தை அடக்கம் செய்யவேண்டும்.

ஆயிற்று.

ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்கள் கழிந்துவிட்டன. மூன்றாம் நாள். சுடலைக்குச் சென்று சவப்புதையலில் பால்வார்க்க வேண்டும். அல்லையல் சிலரும், கமலமும் சுடலைக்குப் போகத் தயாரானார்கள்.

அப்போதுதான் கமலத்துக்கு நாயின் நினைவு வந்தது.

சுடலைக்குப் போய்வரும்வரை வீட்டுக் காவலுக்காக நாயை அவிழ்த்துவிட்டுப் போகலாம் என்று எண்ணிக்கொண்டு, நாயைக் கட்டிப்போட்ட இடத்திற்குச் சென்றாள். அங்கே நாயைக் காணவில்லை. கட்டிய சங்கிலி அறுந்து கிடந்தது.

"சனியன் பிடித்த நாய் எங்கே போய்த் தொலைந்ததோ தெரியவில்லை?" என்று திட்டிவிட்டு, பால்வார்க்கும் அவசரத்தில் நடந்தாள்.

சுடலைக்குச் சென்று, நல்லையாவரின் சவப்புதையலை நெருங்கியதும் எல்லோரது முகங்களிலும் ஆச்சரியம். நல்லையாவர் ஆசையோடு வளர்த்த அந்த நாய் புதையலில் கால்மாட்டுப் பக்கம் படுத்துக்கிடந்தது.

"ஜிம்மி!" என்று கமலம் அழைத்தாள். வாலைச் சுருட்டிப் படுத்துக் கிடந்த நாய், துள்ளியெழுந்து, புதையலை வளைத்து வளைத்து ஓடிவந்து முனகியது. கமலத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"செல்லமாக- பிள்ளைப்போல வளர்த்த நாய்..." அவள் கண்களிலிருந்து அருவியென கண்ணீர் வடிந்தது.

"ம்... இந்த நாய்க்குள்ள அறிவுகூட பெற்ற பிள்ளைகளுக்கு இல்லையே!" என்று முணுமுணுத்தபடி வந்த கடமையை முடித்துக்கொண்டு, "வா ஜிம்மி வீட்டுக்குப் போகலாம்! இனிமேல் நீ எனக்கு நாய் இல்லை. நீதான் என் பிள்ளை."என்று அதை அழைத்தாள்! அதற்கு கமலத்தின் மொழி புரிந்ததோ இல்லையோ! அமைதியாக அவள் பின்னால் நடந்து வந்தது.

# புதிர்



## வி.கே.வி

"கற்பகம், நாளையிலேயிருந்து நீ ரெண்டு நாளைக்கு ருசியா சமைக்க வேண்டாம்!" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஒண்ணும் விளங்கவில்லை!" என்றாள் கற்பகம்.

"ரெண்டு நாள் கழிச்சு புரியும் பாரு!" என்ற சுந்தரமூர்த்தி, "என் பிரண்ட் மோகனும் அவன் மனைவி சாரதாவும் நம்ம விருந்தாளியா வராங்க... ரெண்டு நாள் இருப்பாங்க!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் வெளியே.

'யாராவது வீட்டிக்கு வந்தால் அவர்களுக்கு ருசியா சமைத்துப் போட வேண்டுமென்றுதான் எல்லோரும் சொல்வார்கள். இதென்ன தலைகீழாக இருக்கிறதே!' என்று நினைத்துக் கொண்டாள் கற்பகம்.

மறுநாள் மோகனும் அவன் மனைவி சாரதாவும் வந்து விட்டார்கள்.

அவர்களுக்கு சீனி போடாத, பால் அதிகம் கலக்காத தேனீரைக் கொடுத்தாள் கற்பகம்.

புளித்த மாவில் இட்டிலி, தேங்காய் இல்லாத மிளகாய் அதிகம் வைத்து அரைத்த சட்னி, உப்பில்லாத சாம்பார், புளியில்லாத ரசம், வேகாத பொரியல், காய்ந்த ஊறுகாய்....

அன்று சாப்பிட்டானதும்,

"சாரதா! நம் வீட்டிற்குப் போகலாம்!" என்றான் மோகன், தன் மலனவியிடம்.

"ஏன்?" என்றாள் சாரதா.

"சுந்தரமூர்த்தியின் மனைவி நன்றாக ருசியாகச் சமைப்பாள் என்று கேள்விப்பட்டுத் தான் இங்கே உன்னைக் கூட்டி வந்தேன். வாயில் வைக்க முடியாத அவள் செய்கிற சாப்பாட்டைவிட நீ செய்கிற சாப்பாடு எவ்வளவோ மேல்! நீ நல்லா சமைக்கவில்லை என்று உன்னை அடிக்கடி திட்டினேன். இனி மேல் அப்படி திட்டமாட்டேன்! வா, போகலாம்."

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தனர். சுந்தரமூர்த்தியும், கற்பகமும்.

"சமையல் நல்லாயில்லை என்று அவள் மனம் புண்படத் திட்டுவான் மோகன். அவன் மனம் மாறவேண்டுமென்றுதான் அவனும் அவன் மனைவியும் வருகிற பொழுது ருசியில்லாமல் உன்னைச் சமைக்கச் சொன்னேன். இப்போது புரிந்ததா?" என்றான் சுந்தரமூர்த்தி.

நண்பனுக்கு இப்படியெல்லாம் கூட உபகாரம் செய்யலாம் போலிருக்கிறது!



படிப்பகம்

www.padippakam.com



# நிலாவுக்கு சவால்

**தருவது ரசிகன்**

போர்க் கலங்களோடு
வந்தேன்.
பூக்களோடு நீ
வந்தாய்!

காதல் களத்தில்
தோற்றுப்போனது
நான்தான்!

பூக்களுக்கு
வலிமை அதிகம்!

பூக்களுக்கு
அருமை அதிகம்!

உன்
படைக் கலங்கள்
பூக்கள்தான்!

அதனால்தான்
எப்போதும்
நான் மட்டும்
தோற்றுக் கொண்டிருக்கிறேன்!

கல்லாக இருந்தவனை
கனிய வைத்தவள் நீ!

இந்தத் தீயை
விழுங்கிய தென்றல் நீ!

எப்படி நான்
மாறிப்போனேன்?

எப்படி என்னை
மாற்றிப் போட்டாய்?

தளபதி இந்திரஜித்
தனக்குள்ளாகவே
பேசிக்கொண்டிருந்தான்!

தனிமையில் பேசவும்
காதல் கற்றுத் தருகிறதா?

தனிமையில் எங்கே
பேசினேன்?
எனக்குள்தான்
அவள் இருக்கிறாளே!

நாம் ஒருவர்
நமக்குள் ஒருவர்!

நான் பேசினால்
அவள் கேட்கிறாள்!

அவள் பேசினால்
நான் கேட்கிறேன்!

தனிமை என்பது
தனித்திருப்போருக்கு!

காதலர்கள்
தனித்திருப்பதில்லை!
ஒருவருக்குள் ஒருவர்
கனிந்திருப்பார்கள்!

இந்திரஜித்தும்
இப்போது
இரண்டு பேராகத்தான்
இருக்கிறான்!

## இலக்கிய நயம்

தனிமையில்
பேசவில்லை,
தனக்குள் உள்ளவளோடு
பேசுகிறான்!

"தோற்பதும்
ஒரு சுகமே!

உன்னால் நான்
தோற்கப்பட்ட செய்தி
சுகச் செய்தி!

உடல் வெறும்
கூடுதானா?

நான் அதை
ஒரு நாளும்
ஒப்புக்கொள்ள மாட்டேன்!

என் உடல்
கூடல்ல,
கோமில்!

நீ குடியேறியதுமே
கோமிலாகிவிட்டது
என் உடல்!

கூட்டிலே
குருவி இருக்கலாம்!
தேவதை
கோமிலில்தான் இருக்கலாம்!

இந்தக் கோமிலின்
பூசகரும் நான்தான்!
இந்தக் கோமிலின்
பக்தனும் நான்தான்!

சந்தோசங்களை கோர்த்து
மாலையாக்குகிறேன்!

என் வாழ்க்கையையே
உனக்கு
படையலாக்குகிறேன்!

இந்திரஜித்
மனதில் கோமில்
செய்து கொண்டிருந்தான்!

அங்கே அவளை
அமர்த்தி
அர்ச்சனை செய்தான்!

அவள் என்ன
சாதாரண அழகியா?

முகம் ஒரு
பொன் நிலா!

முகத்தில் இரு
கண் உலா!

இதழ்கள் இரண்டும்
சுளைப் பலா!

முன்னிரண்டு எழில்
கண்களுக்கு விழா!

மொத்தத்தில் அவள்
முடிவைத்த
தேன் பலா!

கட்டிக் கொண்டால்
அவளை
தொற்றிக் கொண்டால்
மனதெல்லாம் விழா!

நடந்து வருகையில்
தேவதையின் உலா!

தழுவிக் கொள்கையில்
குளிர் நிலா!

முத்துச் சிரிப்பாலே
மொத்த மனதையும்
கொத்தி எடுத்திடுவாள்!

தாவியணைக்கையிலே
மொத்த உயிரையும்
தனக்குள் வாங்கிடுவாள்!

காணக் கண்கோடி
போதாது என்றாலும்
நாளும் அவளை நாடி
கண்ணிரண்டும் படையெடுக்கும்!

முத்து நிலா அவளே!
மோக நிலா அவளே!

இந்திரஜித்
வானம் பார்த்தான்!

அங்கும் ஒரு நிலா
எரிந்துகொண்டிருந்தது.

'என் அழகை பாடாது
எவளோ ஒருத்தியின்
அழகை புகழலாமா?

என் ஒளிதானே
உன்னைத் தொடுகிறது?'
என்று நிலா கேட்பது
போல் இருந்தது!

அதற்கும் அவன்
பதில் வைத்திருந்தான்.

"திங்களே! திங்களே!
என்னவள் முகம்போல
ஒளிவீச
உன்னால் முடியுமானால்,
என் காதல்
உன்னை வரிந்திருக்கும்!"

**"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி!"**

அதிகாரம்: 112 குறள்: 1118

(ஸ்போர்ட்ஸ்)

# சாதனை வீரர்



இதுவரை நடந்து முடிந்திருக்கும் ஆறு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடி அதிக ஓட்டங்களைக் குவித்திருப்பவர் பாகிஸ்தானின் முன்னாள் வீரர் ஜாவெட் மியான்டாட். இவர் 30 போட்டிகளில் விளையாடி 1083 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளார்.

உலகக் கோப்பைப் போட்டித் தொடர்களில் அதிக ஓட்டங்களைக் குவித்துள்ளவர்கள் பட்டியலில் முதல் பத்து இடங்களில் இருப்பவர்களில் தற்போது விளையாடி வருபவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர், இலங்கை அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க. மற்றவர் இந்திய அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கர்.

இவர்களில் மியான்டாட்டின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு டெண்டுல்கருக்கே அதிகமாகவுள்ளது. மூன்று உலகக் கோப்பைப் போட்டித் தொடர்களில் மட்டுமே விளையாடியுள்ள டெண்டுல்கர் 14 போட்டிகளில் மட்டும் பங்கு பற்றி 806 ஓட்டங்களைக் குவித்துள்ளார். மியாண்டாட்டின் சாதனையை முறியடிக்க இவருக்கு இன்னும் 278 ஓட்டங்கள் மட்டுமே தேவை.

இதுவரை நடந்து முடிந்த ஆறு உலகக் கோப்பைப் போட்டித் தொடர்களிலும் அதிக ஓட்டங்களைக் குவித்த முதல் 10 வீரர்களது விவரங்கள் வருமாறு:

| வீரர் | இன்னிங்ஸ் | ஓட்டங்கள் | அதிகம் | சராசரி |
|---|---|---|---|---|
| 1. ஜாவெட் மியாண்டாட் (பாகிஸ்தான்) | 30 | 1083 | 103 | 43.32 |
| 2. விவியன் றிச்சர்ட்ஸ் (மே.இ.தீவுகள்) | 21 | 1013 | 181 | 63.31 |
| 3. கிரஹாம் கூச் (இங்கிலாந்து) | 21 | 897 | 115 | 44.85 |
| 4. மார்டின் குரோ (நியூஸிலாந்து) | 21 | 880 | 100* | 55.00 |
| 5. டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் (மே.இ.தீவுகள்) | 25 | 854 | 105 | 37.13 |
| 6. அர்ஜுன ரணதுங்க (இலங்கை) | 24 | 835 | 88* | 52.19 |
| 7. டேவிட் பூன் (அவுஸ்திரேலியா) | 16 | 815 | 100 | 54.33 |
| 8. சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 14 | 806 | 137 | 67.17 |
| 9. ரமீஸ் ராஜா (பாகிஸ்தான்) | 16 | 700 | 119* | 53.85 |
| 10. கபில் தேவ் (இந்தியா) | 24 | 669 | 175* | 37.16 |

# "டெண்டுல்கருக்கு கற்றுக்கொடுப்பேன்!"

உலகக் கேப்பையை வெல்லும் அணி எது? என்பது தான் இப்போது கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் எழும் விலை மதிக்க முடியாத கேள்வி.

ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு துருப்புச்சீட்டு உண்டு. இம்முறை பாகிஸ்தான் அணியின் துருப்புச்சீட்டு சோய்ப் அக்தர். உலகின் அதிவேகப் பந்து வீச்சாளர் என்று இவரைக் கூறலாம். மணிக்கு 150 கிலோமீட்டர் வேகம்.

அக்தரின் வேகப்பந்து வீச்சு எவ்வளவு பிரபலமோ அதைப்போன்று ஒழுங்கின்மைக்கும் பிரபலம். பாகிஸ்தான் இரவு விருந்துகளில் கும்மாளம் போடுவது, இரவில் தாமதமாக அறைக்குத் திரும்புவது என்று ஒரே தகராறு.

ஒருமுறை போதையில், அறையில் இருந்த பெட்ஷீட்டையே எரித்து விட்டார். அண்மையில் நடந்த ஷார்ஜா போட்டிகளின்போதும் வீரர்களுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக அபராதம் கட்டினார் அக்தர்.

இந்தியாவுக்கு எதிராக விளையாடிய போது பாகிஸ்தான் அணி பயிற்சியாளர் அக்தரிடம்,

"டெண்டுல்கரிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்," என்றபோது, அதற்கு அக்தர் "வேகப்பந்து வீச்சு என்றால் என்ன என்பதை நான் டெண்டுல்கருக்குக் கற்றுக்கொடுப்பேன்" என்றாராம். பொறுத்திருந்து பார்ப்போம்.



சடகோபன் ரமேஷ்

**அவர் தான் இவர்**

# சிந்தியா பதில்கள்

✉ **தமது வீரர்கள் கைது செய்யப்படவில்லை. நிவாரணப் பணிக்குச் சென்றவர்கள்தான் கைது செய்யப்பட்டனர் என்று கூறியது அமெரிக்கா. இப்போது தமது வீரர்களை பொறுப்பு ஏற்றுள்ளதே?**

சி. விக்னேஷ், கொழும்பு-10.

அதுதான்...அதேதான்... அமெரிக்கா!

✉ **தமிழ்ப்பாட நூல்களில் அச்சுப் பிழைகள் இம்முறை மலிந்து கிடக்கின்றனவே?**

பி. பிலோமினா, நீர்கொழும்பு.

தமிழ்பேசும் தரப்பின் அச்சாணியையே 'எப்படி அகற்றலாம்?' என்று யோசிக்கப்படும் காலத்தில், நீங்கள் அச்சுப் பிழைகள் பற்றி ஏன் அலட்டிக் கொள்கிறீர்கள்?

✉ **அமைச்சர்கள் ஃபௌசியும், அஷ்ரப்பும் பகிரங்கமாகவே மோதிக் கொள்கிறார்களே?**

எம். பாருக், களுத்துறை.

பனிப்போர் என்ற கட்டத்தை, தாண்டி மணியானபோர் ஆகிவிட்டது!

✉ **ஆளும் தரப்பு சார்பாக ரோஹனவிஜய வீரவின் மனைவி போட்டியிட்டால் வெற்றி பெறுவாரா?**

மு. ஜெயபாலன், காலி.

ஜே.வி.பி.மீது பற்றுள்ளவர்கள் வித்தியாசமானவர்கள்! வாரிசுகளைப் பார்த்து வாக்களிப்பவர்களல்ல! அத்துலத் முதலியின் விசுவாசிகள் வேண்டுமானால் அவர் மனைவிக்கு புள்ளடி போடுவார்கள். ரோஹனவின் தோழர்கள் அவர் மனைவிக்கல்ல; அவரது கட்சிக்கே வாக்களிப்பார்கள்! அதனால்தான் இத்தனை பின்னடைவுகளைச் சந்தித்தும் மறுபடி மறுபடி ஜே.வி.பி. எழுவதன் இரகசியம்!

✉ **தொலைக்காட்சி விளம்பரம் ஒன்றில் "முகத்தைப் பார்த்தால் ராஜகுமாரி, காலைப் பார்த்தால் வேலைக்காரி!" என்ற வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. இவை என் போன்ற வீட்டு உதவியாளர்களது மனங்களைப் புண்படுத்துமல்லவா?**

ஏ. தெய்வநாயகி, கொள்ளுப்பிட்டி.

'சக்தி' ரீ.வியில் அப்படியொரு உறுத்தலான விளம்பரம் ஒளிபரப்பாவதை நாமும் கவனித்தோம். தமிழக விளம்பரத்தைத் தான் போடுகிறார்கள். என்றாலும், அதனைத் தவிர்ப்பது அவசியம்! அறியாமல் ஏற்பட்ட தவறாயின் திருத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புவோமாக!

✉ **சிந்தியா! 'ஹரி கிருஷ்ணன்ஸ்' படம் பார்த்தீரா? பாசில் படம் போல இல்லையே?**

கே. நவீன், கொழும்பு-05.

'காதலுக்கு மரியாதை' தந்த இயக்குநர் பாசிலை 'ஹரி கிருஷ்ணன்ஸி'ல் தேடினால் ஏமாற்றம் தான்! என் அபிப்பிராயத்திலும் படம் சுமார்தான்!

✉ **சிந்தியா! மனிதரில் எத்தனை நிறங்கள்?**

வி. ஜெகசோதி, இலண்டன்.

சமீபத்தில் படித்ததில் இருந்து ஒரு துணுக்கு:

"பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பே புராணங்களில் மனிதர்களை மூன்று பிரிவாக பிரித்துள்ளனர்."

1. சாத்வீகம் உள்ளவர்கள்: இவர்கள் சகலரும் மதிக்கும் அமிர்த குணம் கொண்டவர்கள். பிறருக்கு வழிகாட்டும் அறிவுத் தெளிவு உள்ளவர்கள்.
2. இராஜஸம் கொண்டவர்கள்: இவர்கள் அதிகாரப் பிரியர்கள், அகங்காரக் குணம் கொண்டவர்கள். மற்றவர்களை அடக்கியாள நினைப்பவர்கள். எதையும் தனக்கென விரும்புபவர்கள்.
3. தாமஸம்: இவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்கள். கடும் ஆசை, கடும் கோபம், கடும் பாசம் என்று எந்த உணர்விலும் தீவிரமாக இருப்பார்கள். உணவு, பெண் சுகம் என்பவற்றிலும் நாட்டம் இருக்கும்.

✉ **சிந்தியா! புதிதாக வந்துள்ள படங்களில் விஜய் படம் இல்லையே?**

சி. லூர்துமேரி, பதுளை.

'பூமகள் ஊர்வலம்' (பிரசாந்த்-ரம்பா), 'நிலவே முகம் காட்டு' (கார்த்திக்-தேவயாணி) நடித்த இரு படங்கள்தான் சமீபத்திய வரவுகள். அடுத்து விஜய் படம் வரலாம்!

✉ **பணத்தை எப்போது போற்றுவீர்கள்?**

எஃப். நிஸ்யா, குருநாகல்.

நம் கையில் இருக்கும்போது!

✉ **எடுத்ததுக்கெல்லாம் கடவுள்மீது பாரம் போடுகிறவர்கள் பற்றி உமது அபிப்பிராயம்?**

ஏ. ராஜலிங்கம், வவுனியா.

தோமஸ் ஆல்வா எடிசன் பெரிய விஞ்ஞானி.

அவர் மாணவனாக இருந்தபோது பாடசாலை ஆசிரியர், எடிசனின் கோணல் மாணலான மண்டையைப் பார்த்து கேலி செய்வார்.

இவனுடைய தலை அமைப்பு மோசமாக இருக்கிறது. இவன் என்ன படித்தாலும் மூளையில் ஏறாது!" என்று கூறினார்.

எடிசனின் தாயார் தனது மகனை பெரிய ஆளாக மாற்றிக் காட்டுவேன் என்று சவால் விட்டார். தானே பாடங்களைப் போதித்தார்.

தன்னுடைய விடாமுயற்சியால் எடிசன் மகாமேதையானார்.

அவர் கூறினார்: "மனிதன் கடமைப்பட்டிருப்பது மூளைக்கல்ல. முயற்சிக்கே! கடவுள் வரங்களை விற்பனை செய்கிறான். முயற்சியே அவற்றின் விலை!"



✉ **சோனியா கூட்டாக ஆட்சி அமைக்கத் தயங்கியது ஏன்?**

எம். ஜெயமணி, கல்கிஸை.

தன் தலையையும் ஜெயா உருட்டி விளையாடுவார் என்ற பயத்தால்!

✉ **பேச்சை வைத்தே சிலர் காரியம் பார்த்து விடுகிறார்களே?**

ஆ. கேசவநாதன், கம்பளை.

"புகைப்பிடிப்பவனை உன் வீட்டுக்குள் அனுமதி. மது அருந்துபவனைக்கூட அனுமதி. ஆனால் அதிகம் பேசுகிறவனை அனுமதித்துவிடாதே!"

✉ **அடிப்படைப் பிரச்சனை அன்றாடப் பிரச்சனை ஒப்பிடுக?**

கு. வாசீகன், திருமலை.

அடிப்படை பிரச்சனை புற்றுநோய்! அன்றாடப் பிரச்சனை புண்! புண்ணுக்கு மருந்திடலாம் தான். அதற்காக புண்ணுக்கு மட்டுமே வைத்தியம் பார்த்துக் கொண்டிருந்தால் புற்றுநோய் ஆளையே விழுங்கிவிடும்! எனவே, அடிப்படைப் பிரச்சனையான அரசியல் தீர்வுக்கான சர்வதேச அழுத்தங்களை உருவாக்குவதே தமிழ் பேசும் தரப்பின் உடனடிப் பணியாக இருக்க வேண்டும்!

✉ **ரஜினியின் அடுத்த நாயகி ரம்பாவா, சிம்ரானா?**

மோ. குரூஸ், பதுளை.

நிச்சயம் ரம்பா அல்ல!

✉ **தொலைக் காட்சிகளில் இப்போது மூடநம்பிக்கைத் தொடர்கள் அதிகமாகி விட்டனவே?**

வி. ருத்திரகுமார், கொழும்பு-08.

மர்மதேசம், மந்திரவாசல், பஞ்சமி, குடும்பம் போன்ற பல தொடர்கள் பகுத்தறிவு பேசிய கலைஞரின் குடும்ப நிறுவனமான சன் ரீ.வியில் இருந்துதான் வருகின்றன என்பதுதான் துயரம்! கிராபிக்ஸ் வித்தைகளுக்காகவும் இவை இரசிக்கப்படுகின்றன!



ரம்பா



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 60

# எருசலேம் என்றொரு நகரம்

ஆண்டவரால் ஏவப்பட்ட பெரிய மீன் கரை ஒதுங்கியது. கடற்கரையில் தனது அகன்ற வாயைத்திறந்தது. யோனாவைக் கரையில் சேர்த்துவிட்டு மீன் கடலில் மறைந்தது. கடவுளின் கருணையினாலேயே, கடலில் வீசப்பட்ட தன்னை ஒரு மீன் விழுங்கி, தன்னுடைய வயிற்றினுள் பத்திரமாக வைத்திருந்துவிட்டு கரையில் கொண்டு வந்துவிட்டுச் சென்றுள்ளது என்பதனை யோனா அறிந்து கொண்டார். கடற்கரை மணலில் நின்றவாறே கடவுளைப் பிரார்த்தித்தார். அறியாமல் செய்த தவறை மன்னித்தருளுமாறு ஆண்டவரிடம் வேண்டிக்கொண்டார்.

கரைசேர்ந்த யோனாவுக்கு ஆண்டவரிடமிருந்து இரண்டாவது கட்டளையும் பிறந்தது, தன்னுடைய செய்தியை நினிவே மக்களிடம் எடுத்துக் கூறுமாறு கடவுள் கட்டளையிட்டார். எதுவித மறுப்புமின்றி நினிவே நகரை நோக்கி யோனா சென்றார். அது ஒரு மாபெரும் நகரம். மூன்று நாட்களாக அம்மாநகர மக்களை தெருமுனைகளில் நின்று கூவி அழைத்தார். ஆண்டவருடைய கட்டளைகளுக்கு மதிப்பு அளிக்காமல் அந்நகரவாசிகள் நடந்து வருவதால் ஆண்டவர் நாற்பது நாட்களில் அந்நகரை முற்றாக அழித்து மக்களனைவரையும் தண்டிக்கத் திட்டமிட்டுள்ளார் என்ற செய்தியே ஆண்டவரால் அருளப்பட்டது. இதனை அந்நகர மக்களும் அறியத்தக்கதாக யோனா கூறினார்.

## மனம் மாறிய மக்கள்

இச் செய்தியைக் கேட்ட மக்கள் பெரும்பீதியடைந்தனர். உடனடியாகத் தங்கள் தீய செயல்களை நிறுத்திக்கொண்டனர். உடுத்தியிருந்த ஆடம்பர உடைகளைக் களைந்து நோன்பு நோற்கும்போது அணியும் சாக்காலான உடைகளை உடுத்திக்கொண்டனர். உணவு உண்ணாமல், உறக்கம் கொள்ளாமல் எல்லோரும் ஆண்டவரை வேண்டி பிரார்த்தனையிலீடுபட்டனர்.

அந்நகரைப் பரிபாலித்த மன்னரும் தனது அரச உடைகளைத் துறந்து, அரண்மனையை விட்டகன்று விரதம் பூண்டார். மக்கள் அனைவருக்கும் ஆணை பிறப்பித்தார். உணவு உண்பதையும், உறங்குவதையும் நகர மக்கள் உடனடியாகக் கைவிட்டு ஆண்டவரை நோக்கிப் பிரார்த்திக்குமாறு பறைஅறைந்து எங்கும் செய்தி எட்டுமாறு ஏற்பாடு செய்தார்.

நோன்பு நோற்பதுடன் தீய செயல்களையும் கைவிட்டால் ஆண்டவருடைய சீற்றம் தணிந்து நகரை அழிவிலிருந்து காப்பாற்றக் கருணை புரிவார். ஆகவே, ஆண், பெண், குழந்தைகள், வயதானவர்கள், எல்லோரும் நோன்பு நோற்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். மக்களனைவரும் அரசரின் ஆணைக்காக மட்டுமல்லாமல், தாமாகவே நோன்பு நோற்றனர். தீய பழக்க வழக்கங்கள் எதுவும் மக்களிடம் காணப்படவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

நினிவே நகர மக்கள் அனைவரும் ஒருசில தினங்களிலேயே நல்லவர்களாக மாறிவிட்டமையினால் அந்நகர மக்கள்மீது ஆண்டவர் கொண்ட சீற்றம் தணிந்தது. அந்நகரை அழித்து, மக்களுக்குப் பாடம் புகட்டும் தமது திட்டத்தை ஆண்டவர் கைவிட்டார்.

## யோனாவின் சீற்றம்

யோனா குறிப்பிட்டபடி, நாற்பது நாட்கள் கடந்து விட்டன. அப்போது அந்நகரில் பேரழிவு ஏற்படப்போகிறது என்று யோனா மட்டுமே எதிர்பார்த்திருந்தார். ஆனால் யோனா கூறியிருந்தபடி எதுவுமே நடைபெறவில்லை. மக்கள் அனைவரும் நல்வழிப்பட்ட பின்னர் கருணையுள்ள கடவுள் ஏன் கோபம் கொள்ளப்போகிறார் என்ற உண்மையை யோனாவால் உணர முடியவில்லை, கடவுள் தன்னிடம் பொய் கூறி ஏமாற்றிவிட்டார் என்றே அவர் கடுங்கோபம் கொண்டார்.

ஆண்டவரைப் பிரார்த்தித்து பின்வருமாறு கூறினார்:

"ஆண்டவரே! கருணை மிகக் கொண்டவரான தாங்கள் சொல்வது போல் என்றும் செய்ததில்லை. நகரை நாற்பது நாட்களில் அழித்து விடப்போவதாக என்னை மக்களிடம் கூறும்படி ஏவிவிட்டீர்கள். நகர மக்களிடம் தாங்கள் கூறியதைத் தானே சொன்னேன். மக்கள் தங்களை நோக்கிப் பிரார்த்தித்ததும், தாங்கள் கூறிய வற்றையே முற்றாக மறந்துவிட்டீர். இத்தனை காலமாக இம்மக்கள் தங்களுக்கு விரோதமாக நடந்து கொண்டதையெல்லாம் கணப்பொழுதில் மறந்து, இக் கொடியவர்கள்மீது கருணை காட்டிவிட்டீர்கள். தங்கள் திருவுள்ளம் பற்றி நான் நன்குணர்ந்தமையினால் தான், நான் தங்களுடைய கோரிக்கையை ஏற்க மறுத்து, நாட்டைவிட்டே வெளியேறினேன்."

இவ்வாறு புலம்பிய யோனா, நகரை விட்டு வெளியேறி ஓர் ஒதுக்குப் புறத்தில் சென்று அமர்ந்து கொண்டார். ஒரு சிறு பந்தலை அமைத்துக் கொண்டார்.

வெய்யில் மிகக்கடுமையாக எரித்தது. ஆண்டவர் தன் அன்புக்குப் பாத்திரரான யோனாவுக்கு நிழல் கொடுப்பதற்காகவே ஓர் ஆமணக்குச் செடியை யோனா அமர்ந்திருந்த பந்தலுக்கு அருகே தோற்றுவித்தார். அம்மர இலைகள் அகன்று பருத்துக் காணப்பட்டன. யோனாவுக்குப் போதுமான நிழலும் அம் மரத்தால் கிடைத்தது. யோனா ஓரளவு மகிழ்ச்சியோடு இருந்தார்.

- அன்றிரவே ஒரு புழு அம் மரத்தின் வேரை அரித்தது. இதனால் அச்செடி உலர்ந்து விழுந்துவிட்டது. அடுத்தநாள், திரவன் உதயமான பின் வெய்யில் மிகவும் அதிகரிக்கத்தொடங்கியது. அத்துடன் அனற் காற்றும் வீசியது. யோனாவால் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மயக்கம் ஏற்பட்டது. இவ்வாறு துன்பப்படுவதைவிட மரணமடைவதே மேல் என்று எண்ணத் தலைப்பட்டார்.

அப்போது ஆண்டவரின் குரல் யோனாவுக்குக் கேட்டது." யோனா! ஒரு சாதாரண ஆமணக்குச் செடிக்காக இவ்வளவு கவலைப் படுகிறாயே? இந்நகரில் இலட்சக்கணக்கில் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் அழிந்து போகாமல் கருணை காட்ட வேண்டியது நியாயமாகப் படவில்லையா?" என்று கேட்டார்.

இவ்வாறு ஆண்டவர் கேட்டதும் யோனாவுக்குத் தெளிவு பிறந்தது. கடவுளின் கருணையை எண்ணித் தலைவணங்கிப் பிரார்த்தித்தார்.

ஆண்டவர் கருணைக்கடலானவர். அவருடைய கடாட்சத்துக்கு எத்தகைய ஈடும் இணையும் கிடையாது என்ற பேருண்மையை யோனாவின் இக்கதை எமக்குப் புலப்படுத்துகிறது.

***

## எருசலேம் நகரம்

யோனாவின் கதையுடன் வேதாகமத்தின் பழைய ஏற்பாடு என்ற பகுதியை ஆண்டவரின் அருளால் நிறைவு செய்து விட்டு, இயேசு பெருமானின் பிறப்பு வளர்ப்பு மற்றும் அவருடைய இறுதி அம்சங்களை எடுத்தியம்பும் புதிய ஆகமத்தில் காலடி பதிக்க எண்ணுகிறோம். இதற்கிடையில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்கள் ஆகிய மூன்று மதத்தவர்களுக்கும் பரிசுத்த நகராகக் கணிக்கப்படும் எருசலேம் பற்றி சில தகவல்களை ஓரளவு அறிந்து கொள்வது பொருத்தமாகும் எனக் கருதுகிறோம்.





**இராஜகுமாரன்**

எருசலேம் நகரம் உலகப் பழம்பெரும் நகரங்களில் முதன்மையானது. இது இன்று இஸ்ரேல் நாட்டின் தலைநகராகத் திகழ்கிறது. இந்நகர் ஏறத்தாழ 4000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. எனினும் வரலாற்று ரீதியாக கிறிஸ்துவுக்கு முன் 1000 ஆண்டளவில் தாவீது மன்னன் இந்நகரைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே எருசலேம் உலகத்தின் கண்களுக்குத் தென்பட்டது. இஸ்ரயேல் மக்களனை வரையும் ஒன்றுபடுத்தும் பணியில் ஓரளவு வெற்றிகண்ட மன்னர் தாவீது, எருசலத்தையே தனது தலைநகராகப் பிரகடனப்படுத்தினார்.

தாவீது மன்னரின் மகன், மன்னர் சாலமோன் எருசலேம் நகரில் மாபெரும் கோவிலை நிர்மாணித்தார். யூதர்களால் போற்றி வணங்கப்பட்ட யேகோவாவுக்கு இவ்வாலயம் அர்ப்பணிக்கப்பட்டது. ஆலயத்தின் அருகிலேயே மன்னர் சாலமோன் தனக்கும் தன் மனைவியர் மாருக்குமான மாளிகைகளையும் நிர்மாணித்தார்.

மன்னர் சாலமோனால் நிர்மாணிக்கப்பட்ட அதே ஆலயத்தின் கருவறையில் மோசேக்கு ஆண்டவரால் அருளப்பட்ட திருச்சட்டங்கள் பொழியப்பட்ட கற்பலகைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. கிறிஸ்துவுக்கு முன் 9000ம் ஆண்டில் யூத இன மக்கள் இரண்டாகப் பிரிந்தனர். யூத இன மக்களின் தலைநகராக எருசலேம் தொடர்ந்தது. கிறிஸ்துவுக்கு முன் 586ம் ஆண்டளவில் பாபிலோனியர்கள் எருசலேம் நகரைக்கைப்பற்றினர். ஆலயத்தின் முக்கியமான பகுதிகளை இடித்தனர். விலை மதிப்பற்ற பொருட்களையும் கொள்ளையிட்டனர். ஆயிரக்கணக்கான யூத மக்களையும் கைது செய்தனர். பாரசீக மன்னரான சைரஸ், பாபிலோன் மீது படையெடுத்து நாட்டைக் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து யூத மக்கள் ஓரளவு சுதந்திரமாக தமது மத நம்பிக்கைகளுடன் வாழ வழி பிறந்தது. கி.மு. 400ல் எருசலேம் ஆலய நிர்வாகம் ஆலயக் குருக்கள்மாரின் கைக்கு மாறியது.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 57 விடை** ☛ அரசர் அர்த்தக்சஸ்தாவும், ஆமானும்.

**பரிசு பெறுவோர்:**

1. எம்.மைக்கல், மூதூர். 07
2. கே.செவ்வராஜ், 176/9 கண்டி ரோட், கம்பளை.
3. ஜி.டி.யோசப், 236 புத்தளம் றோட், குறுநாகல்.
4. டி.எஸ்.க்ளின்டன், 1, சமகிகம, பவ்வாகம, நாவலப்பிட்டி.
5. ஏ.ருக்மணி, மே.பா.ரி.மோகனா, 244, மன்னார் றோட், வேப்பங்குளம், வவுனியா.

**திருமறை 60** வினா:- எருசலேம் நகரை தனது தலை நகராக்கிய மன்னரின் பெயரைத் தருக?

மே. 15க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 60—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : சோனியாகாந்தி |
| தொழில் | : அரசியல் |
| பதவி | : கட்சித் தலைமை |
| பொழுதுபோக்கு | : ஆட்சி கவிழ்வதை வேடிக்கை பார்ப்பது. |
| நண்பர்கள் | : தற்காலிகமாக ஜெயலலிதா. |
| எதிரிகள் | : காங்கிரசுக்கு எதிரான அனைவரும். |
| நம்புவது | : குடும்ப பின்னணியை |
| நம்பாதது | : கட்சிக்குள் மூத்த தலைவர்களை! |
| சாதனை | : பல்லாண்டு மௌனம். |
| சோதனை | : இத்தாலியில் பிறந்தது. |
| அஞ்சுவது | : போர்ஃபஸ் விவகாரம் |
| மறவாதது | : கணவரை |
| மறந்தது | : அரசியலை வெறுத்ததை. |
| இலட்சியம் | : ஆட்சியைப் பிடிப்பது. |

## ஓடி விளையாடு தாத்தா/பாட்டி




இது முதியவர்கள் ஆண்டு. முதியவர்களை குஷிப்படுத்த இந்த 'இரவல்'குறும்பு.

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO-11 செட்டியார் தெரு. கொழும்பு 436331


# வேவு விமானம்



ஆளில்லாமல் விண்ணில் பறந்து வேவு பார்க்கும் விமானங்கள் சிறீலங்கா விமானப் படையினரிடமும் இருந்தன. ஆனால் அவை மிகவும் சிறியரகத்தைச் சேர்ந்தவை. இருப்பினும் மிகப் பெரும் தொகைப் பணச் செலவில் இஸ்ரேல் நாட்டிலிருந்து இவை கொள்முதல் செய்யப்பட்டவை என்று தெரிகிறது.

தன்னியக்க வேவு விமானங்கள் நவீன ரகங்களில் உலகில் உள்ளன.

அமெரிக்காவில் சாந்தியாகோவிலுள்ள ரெலிடைன் ரியான் விண்வெளி ஆய்வுகூடத்தில் உலகிலேயே மிகப்பெரிய ஆளில்லாமல் பறந்து வேவு பார்க்கும் விமானம் உருவாக்கப்படுகிறது.

14 ஆயிரம் மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் இடம்பெறும் எதிரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கக் கூடிய சக்தி கொண்ட இவ்விமானத்தை 'பூகோள இராஜாளி' என்று கூறுகிறார்கள். ஆனால் இதற்கான பெயர் இன்னும் சூட்டப்படவில்லை.

இந்த விமானத்தின் இறக்கைகள் மட்டும் 35.4 மீட்டர் (116 அடி) நீளமுடையது. இவ்விமானத்தின் அமைப்பை 1997 பெப்ரவரி 20ம் திகதியன்று அமெரிக்க பாதுகாப்புத்துறை நிபுணர்கள் சென்று பார்வையிட்டு, திருப்தி தெரிவித்துள்ளனர். படத்தில் இருப்பதுதான் அந்த ஆளில்லாத விமானம்.

இதேவேளை ரஷ்யா மிக நவீனமானதும் பல புதிய சாதனங்களைக் கொண்டதுமான ஹெலிக்கொப்டரை அறிமுகப்படுத்திருக்கிறது. 'கா-52 அலிகேட்டர்' என்ற இந்த ஹெலிக்கொப்டரில் இருவர் மட்டுமே பயணம் செய்யலாம். ஆனால் நாசம் விளைவிக்கத்தக்க பலரக ஆயுதங்களும் இதில் பொருத்தப்பட்டுள்ளன. எத்தகைய காலநிலையிலும் எங்கும் பறந்து சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த ஹெலிதான் உலகிலேயே மிகவும் சிறப்பான சாதனங்களைக் கொண்டது என்று கூறப்படுகிறது.

உலக சமாதானம் என்ற வார்த்தையை உச்சரித்த வண்ணம் சர்வ நாசம் விளைவிக்கும் போர்க் கருவிகளைத்தான் இந்நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு உற்பத்தி செய்கின்றன.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு 323657


# பொம்மை



↑ பார்பி பொம்மைகள் அறிமுகப்படுத்தப்பட்டு அரை நூற்றாண்டாகிவிட்டது. வேறு எந்தப் பொம்மைகளுக்குமில்லாத கிராக்கி உலகளாவிய ரீதியில் பார்பி பொம்மைகளுக்கு ஏற்பட்டன.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்றவகையில், ஒவ்வொரு தேசிய இனத்தையும் பிரதிபலிக்கும் தன்மையில் பார்பி பொம்மைகள் உருவாக்கப்பட்டமையே இப்பொம்மைகள் அமோக வரவேற்பைப் பெறுவதற்கான காரணம் என்று நம்பப்படுகிறது. பொம்மைகளை விளையாடுவதற்கு மட்டுமல்ல, பொழுதுபோக்காக சேகரிப்பவர்களும் பலர் உள்ளனர்.

பிரிட்டனில் கிழக்கு சசெக்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த பிரைட்டனில் வசிக்கும் ரோனி மட்டியா 1997 மார்ச் வரை பல்வேறு வகையான 900 பார்பி பொம்மைகளைச் சேகரித்தார்.

1959ம் ஆண்டின் பின்னர் உருவாக்கப்பட்ட பல்வேறுபட்ட மொடல்களைக் கொண்ட பொம்மைகளில் அனேகமானவற்றை ரோனி வைத்திருக்கிறார்.

ரோனியின் நண்பர் கென் என்பவர்தான் இங்கு பார்பி பொம்மைகளின் நடுவில் அமர்ந்திருக்கிறார்.

ரோனியின் பொம்மைகளை மாதத்துக்கொரு தடவை தூசுதட்டி, புத்தாடைகளை மாற்றுவதுடன் அப்பொம்மைகளுக்கு பூச்சி தட்டி, முடிகளைச் சீராக்கி தூய்மைப்படுத்தி வைப்பதில் மணிக்கணக்கில் செலவிடுவாராம்.

உலகில் அதிகளவான பல்வேறு ரக பார்பி பொம்மைகளை சேகரித்தவர் என்று உலக சாதனை படைத்திருப்பவர் இன்றுவரை ரோனிதான்.

# எழுத்துலக ராணி



→ பார்பரா காட்லண்ட் பிரிட்டனின் மிகப் பிரபலமான நாவல் எழுத்தாளர். இவருடைய படைப்புகள் பிரசுரமாகிய சூட்டோடு சூடாக விற்பனையாகிவிடுமாம். இதனால் இலட்சக் கணக்கில் பல பதிப்புகள் வெளியிடப்படுகின்றன. இன்று வரை இவருடைய 635 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை 36 மொழிகளில் வெளியாகியிருக்கின்றன.

கடந்த 19 வருடங்களில் வருடமொன்றுக்கு சராசரி 23 புத்தகங்களை பார்பரா காட் லண்ட் எழுதி வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் மக்களுக்கும் இலக்கியத் துறைக்கும் நாவல் எழுத்தாளரான பார்பரா காட்லண்ட் செய்துவரும் சேவையைப் பாராட்டி எலிஸபத் மகாராணி 1991ம் ஆண்டில் இவருக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உயர்தர விருதினை வழங்கி கௌரவித்துள்ளார்.

இன்று உயிருடன் இருப்போரில் பிரபலமான நாவல் எழுத்தாளர் இவர்தான் என்று உலக சாதனைப் புத்தகம் இவர் பெயரைப் பதிவு செய்துள்ளது.

ஒரு வருடத்தில் அதிக நாவல்களை எழுதிக் குவித்த நாவலாசிரியர்களில் உயிரோடு உள்ள சாதனையாளரும் இந்த ஆச்சிதான்.

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



05-05-1999

கருணையம் பதியைச் சேர்ந்த உதயசூரியன்-விஷ்ணு வேணி தம்பதியினரின் செல்வப் புதல்வன் சிறீவத்ஸன் தனது முதலாவது பிறந்த தினத்தை சுவிஸ் LAUSANNE நகரிலுள்ள தனது இல்லத்தில் 05.05.1999

## செல்வன் சிறீவத்ஸன்(வச்சு)

அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார், ரஞ்சி அன்ரி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கருணையம்பதி மூத்த விநாயகர் அருளால் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று சிறப்பாக வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்: மாமா, சிவசக்தி, மொரட்டுவ.

# நம்பிக்கை



→ மே 14ல் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகிறது. பாகிஸ்தான் அணி இம்முறை சிலிர்த்துக் கொண்டு நிற்கிறது. கப்டன் வாசிம் அக்ரம் தனது அணியினரை மலைபோல நம்புகிறார்.

அவர் மலைபோல நம்பும் வீரர்களில் உருவத்திலும் மலைபோன்றவர் இன்சமாம் உல் ஹக்.

இவர் வலது கை துடுப்பாட்ட வீரர். 6 அடி 2 அங்குலம் உயரம். 1970ம் ஆண்டு 3ம் திகதி 3ம் மாதம் பிறந்த இன்சமாமுக்கு 29 வயது.

இந்த ஆண்டு அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் ஏழாம் இடத்தில் இருக்கிறார். இவ்வருடம் பத்து ஒருநாள் போட்டிகளில் ஆடி மொத்தம் 459 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். இவற்றில் ஒரு சதமும், நான்கு அரைச் சதங்களும் அடங்கும். சராசரி 51.

இந்த ஆண்டு இன்சமாமுக்கு சந்தோசமான ஆண்டு அவரது திருமணம் இவ்வருடத்தில்தான் நடந்தது. மனைவி பெயர்: செய்தா கஸ்பா.

இன்சமாமுக்கு பிடித்தமான வீரர்கள் இம்ராம்கானும் விவியன் ரிச்சாட்டும்.

இன்சமாம் களத்தில் நிற்கும்வரை எதிரணிக்கு நிம்மதி இருக்காது. பந்து வீச்சாளர்களுக்கு அடிக்கடி எரிச்சலை கொடுத்து இரசிப்பார்.

இம்முறை உலகக் கோப்பையைக் கைப்பற்ற சபதம் எடுத்துள்ள பாகிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் முக்கியமானவர் இன்சமாம்.

இன்சமாமுக்கு ஒரே ஒரு பலவீனம் முணுக்கென்று வரும் கோபம். இதனால் கனடாவிலும் கடும் தொல்லை அனுபவித்தார்.

புது மனைவி இவரது கோபத்தை விரட்டியடித்துவிட்டாரா என்பது இம்முறை தெரியும். மாப்பிள்ளை எப்படி ஆடுகிறார் என்று பார்க்கலாம்.

'இம்முறை உலகக் கிண்ணத்தோடு திரும்பி வருவோம்' என்று கூறிவிட்டு இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றுள்ளது பாகிஸ்தான் அணி. பந்து வீச்சு, துடுப்பாட்டம் இரண்டும் நல்ல நிலையில் இருக்கின்றன.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16ம் ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாத் நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் மே 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்